வேதாத்திரியப்
பார்வையில்
வறுமை
என்பது
இல்லை...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

வேதாத்திரி மகரிஷியின் பார்வையில் வறுமை என்பது இல்லை.

(வறுமையும்-தீர்வுகளும்)

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

M.A.,H.D.C.,

பொருளடக்கம்

வறுமை ஒரு பார்வை

1. வறுமை வறுமை வறுமை
2. வறுமை எப்படி உருவாகிறது?
3. வறுமையின் வரையறைகள்
4. வறுமை எழக் காரணம்
5. பணம், வறுமை, பிச்சை, கடன் வந்த விதம்.

வேதாத்திரி மகரிஷியின் வறுமை

6. வேதாத்திரி மகரிஷியின் புத்தக் கேள்விகள்
7. மகரிஷியின் கல்வியை ஓரங்கட்டிய வறுமை
8. தனது பெற்றோர் வறுமையை உணர்ந்த மகரிஷி
9. வறுமையிலிருந்து விடுபட ஆங்கிலம் கற்றல்
10. பிறர் வறுமையை தன் வறுமை போன்றது.
11. தொழிலாளர்களின் வறுமையை போக்கியது

.

வறுமையின் பரிணாமங்கள்

12. இந்தியாவில் வறுமை
13. இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள்
14. ராமலிங்க அடிகளாரின் அருள் உள்ளம்.
15. இந்தியாவில் வறுமையை ஒழிக்க முடியுமா?
16. இந்தியாவில் வறுமைக்கோடு உருவான வரலாறு.
17. திருவள்ளுவர் காட்டும் வறுமை
18. பைபிள் காட்டும் வறுமை
19. பசி வந்தால் பத்தும் பறந்து போகும்
20. வறுமையின் மூன்று கிளைகள்
21. உலக வறுமை தினம்

வறுமையைப் போக்க தீர்வுகள்

22. வறுமையை அகற்ற விவேகானந்தர் கூறும் வழிகள்
23. வறுமை ஒழிய விவசாயம் வளர வேண்டும்

24. தொழில்கள் வறுமையைப் போக்கும்
25. உழைப்பால் வறுமையை விரட்டியவர்கள்
26. கல்வியால் வறுமையை போக்கலாம்
27. வறுமையைப் போக்க சுரண்டல்களை ஒழிக்க வேண்டும்.
28. வறுமையை ஒழிக்க பன்முக உத்திகள் தேவை
28. சமூகச் சிக்கல்களுக்கான மகரிஷியின் தீர்வுகள்.
30. பொருள் வறுமை – அறிவு வறுமை
31. வறுமையற்ற வளமான வாழ்வு
32. வேதாத்திரி மகரிஷி பார்வையில் வறுமை இல்லை.

அணிந்துரை

டிஆர்.முரளீதரன்,
செயலர்,
வேதலோக அன்பு நிலையம்,
பொள்ளாச்சி.

வறுமை ஒழிய வளம் பெருகும்

“வேதாத்திரி மகரிஷியின் பார்வையில் வறுமை என்பது இல்லை.(வறுமையும்-தீர்வுகளும்)” என்ற தலைப்பில் மானுடத்திற்குத் தேவையான ஒரு படைப்பை பார்த்து மகிழ்ந்தேன்.

எது வறுமை?

உணவின்மை மட்டும் வறுமை அல்ல. கல்வியின்மை, உடை, உறைவிடமின்மை, வேலையின்மை, சுகாதாரமின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, உரிய வருமானமின்மை, போதிய சத்துணவுமின்மை, கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலை என வறுமைக்கு பல பரிமாணங்கள் உள்ளன.

இது இடத்துக்கு இடமும், காலத்திற்கு ஏற்பவும் மாறுகிறது. பொதுவாக சமூகத்தால் உணரப்படக் கூடிய அடிப்படை மனித உரிமை இழப்பே வறுமை ஆகும்.

இவை உணவு, உடை தங்குமிடம், கல்வி என பொருள் பரிமாணத்தை சார்ந்தவையாகவோ பாலியல் மற்றும் சாதி வேற்றுமை போன்ற பொருள்சார் பரிமாணத்தை சார்ந்தவையாகவோ இருக்கலாம்.

ஆனால், பொதுவாக உணவின்மையே வறுமை என நம்பப்படுகிறது.. நாட்டின் எதிர்கால தூண்களான இன்றைய குழந்தைகள் நிலைமை கவலையளிப்பதாக உள்ளது.

உலகிலேயே வங்கதேசத்தை அடுத்து இந்தியாவில்தான் சரியான சத்தான உணவின்றி வறுமையில் இறக்கும் குழந்தைகள் அதிகம் உள்ளனர்.

இளமையில் வறுமை:

வறுமையில் பலியாகும் குழந்தைகள் என்றால் நமக்கு ஆப்ரிக்க நாடுகள் தான் நினைவில் வரும்.

ஆனால் நம்நாட்டில் அதைவிட இரண்டு மடங்கு குழந்தைகள் வறுமையில் வாடுகின்றனர் என்பதே உண்மை.

இந்தியாவில் 100க்கு 30 குழந்தைகள், பிறக்கும்போதே எடை குறைவாக பிறக்கின்றன.

இதுவே ஆப்ரிக்க நாடுகளில் 100க்கு 16 ஆக தான் உள்ளது. குழந்தை பருவத்தில் ஊட்டப்படும் சத்தான உணவே அவர்களின் பிற்கால வாழ்வில் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு அடித்தளமாகிறது. இதை ஒப்பிட்டு பார்க்கும் போது நம் குழந்தைகள் இன்றைய நிலை அதிர்ச்சியாக உள்ளது.

முன்னோடி தமிழ்நாடு:

நிறைவான வயிறே தெளிவான சிந்தனைக்கும் வலுவான உடலுக்கும் ஆதாரம்.

இதை உணர்ந்து, இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு 'மதிய உணவுத் திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவுத் திட்டம், கலவை சாதத் திட்டம் என பள்ளிகளில் மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டங்களை பலகாலமாக செயல்படுத்தி வருகிறது.

இதன்மூலம் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததுடன், படிப்பை பாதியில் நிறுத்துவதும் குறைந்து வருகிறது.

எது வறுமைக்கோடு?

ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கை தரத்திற்குகீழ் வாழும் மக்களை, ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர் என்கின்றனர்.

'ஒரு நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகையில் வறுமையை போக்க முடியவில்லை என்றால்

அந்தநாடு கடைப்பிடிக்கும் ஜனநாயகத்தால் பிரயோசனம் இல்லை' என்கிறார் நெல்சன் மண்டேலா.

பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகின்றது.

இந்த வருமான அளவு நாட்டிற்கு நாடு மாறுபடும். உணவை பொறுத்தவரை நகரில் உள்ள ஒருவர் சராசரியாக 2100 கலோரி சக்தி அளிக்கும் உணவை சாப்பிட வேண்டும். கிராமத்தில் 2400 கலோரி சக்தி அளிக்கும் உணவு கிடைக்க வேண்டும்.

இதற்கு கூட வசதி இல்லாதவர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்கின்றனர். உலக வங்கி தரவுகளின்படி, 14 பில்லியன் மக்கள் மிக வறுமைக்கோட்டின் மிக அடிமட்டத்தில் வாழ்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கு காரணங்கள்:

சமய பிரிவினைகள், ஜாதி, சுயசம்பாத்தியத்தில் ஆர்வமின்மை, ஊழல் முதலியன இதற்கான சில காரணிகளாக உள்ளன.

இதில் முக்கிய காரணியாக ஊழல் உள்ளது. குற்றங்கள் அதிகரிக்க வறுமையும் ஒரு காரணமாகிறது.

வறுமை, ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாயத்தில் வன்முறை குற்றங்களை தவிர்க்க முடியாது.

எனவே, வறுமை ஒழிக்கப்பட்டே ஆக வேண்டும்.கல்வியால் மட்டுமே வறுமையை ஒழிக்க முடியும்.

தங்கள் வீடுகளில் வறுமை ஒழிந்து வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அவரவர் தங்களது குழந்தைகளை அவசியம் கல்வி பயில வைக்க வேண்டும்.

பொது வினியோக திட்டத்தை விரிவுபடுத்தி உணவுப்பொருள் தடையின்றி வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் வங்கிக் கடன் வழங்க வேண்டும். இதுபோன்ற நடவடிக்கையால் ஓரளவு வறுமையை குறைக்க முடியும்.

வறுமையைப் போக்க உதவி செய்வோம்:

'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்' என்கிறார் வள்ளுவர்.

தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்கு பிற்பட்டதாகும்.

நம் நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலம் தெரிவது உண்மை. ஆனால் தெரியும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி அற்புதங்களை நிகழ்த்தி காட்ட வேண்டியது நமது பொறுப்பு.

வறுமையினை ஒழித்தால்தான் மக்கள் வளமுடன் வாழ முடியும். தேசம் வல்லரசு ஆக முடியும்.

தனி ஒரு சமுதாயம் மட்டும் வளராமல் நாட்டு மக்கள் அனைவரும் வளம் பெற்றால்தான், நாம் வலிமை வாய்ந்த நாடாக மாற முடியும்.

அப்படிப்பட்ட பார் வியக்கும் பாரதத்தை படைப்பதற்கு நாம் ஒன்றுபடுவோம்; உழைத்திடுவோம்.

என்னுரை

- “உலகில் உள்ள வறுமைக்கும் துன்பத்திற்கும் அனைத்திற்கும் காரணம். தெய்வ நிலை, உயிரின் நிலை, அறிவு, உழைப்பு ஆகியவற்றின் மதிப்பை உணர்ந்து, சிலர் தன்னுடைய கடமைகளைச் செய்தும் , பலர் அவற்றை உணராமல் கடமை பிறழ்ந்தும் வாழ்வதேயாகும்.”
(வேதாத்திரி மகரிஷி.)

உலகம் முழுவதும் தினமும் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 100 கோடி இருக்கும் என ஐ.நா.,அறிக்கை கூறுகிறது.

இதில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகை இந்தியாவில் உள்ளது. அதாவது 35 கோடிப்பேர் இந்தியாவில் தினமும் பசியால் வாடுகின்றனர்.

உலகில் தினமும் 17 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 6 விநாடிக்கு ஒரு குழந்தை இறக்கிறது.

என் பார்வையில் “யாராவது தட்டிலோ, இலையிலோ சாப்பாட்டை மிச்சம் வைத்து விணாக்கினால் எனக்கு கோபம் அளவுக்கு மீறி வரும்.”

“திருமணங்களில் இலைகளில் உணவுகள் மிச்சமாகி, குப்பையில் கொட்டும் நிகழ்வுகள் மனதை துளைத்தெடுக்கும்.”

பசியுற்று இருப்போரைப் பார்த்தால் மனம் வாடுகிறது. மனம் அழுகிறது. ஏன் இந்த நிலைமை மாறக் கூடாதோ?

“நீடிய பிணியால் வருந்துகின் றோர்,என்

நேர்உறக் கண்டுஉளம் துடித்தேன்!

ஈடின், மா னிகளாய், ஏழைக ளாய்,நெஞ்சு

இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!!”

வள்ளலார் நிலையை நான் அடையக் காரணம், பசியில் துன்பத்தை அனுபவவித்து இருக்கிறேன்.

வேதாத்திரி மகரிஷி மட்டுமல்ல. பசியின் கொடுமையை நானே அனுபவித்திருக்கிறேன். வறுமையை சந்தித்திருக்கிறேன்.

என்னையும் சேர்ந்தது எங்கள் குடும்பத்தில் மொத்தம் எட்டு நபர்கள். வேதாத்திரி மகரிஷியினைப் போல், தந்தையின் வியாபாரம் நல்ல நிலையில் இருந்து, தீடிரென்று நட்டத்தில் போனது.

குடியிருக்கும் ஒரு வீட்டைத் தவிர அனைத்து சொத்துக்களும் போய்விட்டன. முன்றாண்டுகள் கடுமையான பஞ்சம், பசி. நான்கு சுவர்களுக்குள்ளேயே, முடங்கி கிடந்தோம். முன்று நாட்களுக்கு ஒரு முறைதான் அரிசி சோறு கிடைக்கும்.

எழாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு படிக்கும் வரை இந்த வறுமையில் உழன்றிருக்கிறேன்.

பள்ளியிலிருந்து மதியம் வந்து ஒரு குவளை தண்ணீர் மட்டும் குடித்து போன நாட்கள் ஏராளம். பசி - பசி - பசி இளமையில் பசி என்பது மிகவும் கொடுமை.

என்னதான் வறுமையிருந்தாலும், கல்வி கற்பதை மட்டும் நிறுத்தவில்லை. அனைவரும் படித்தோம். வறுமையை கல்வியாலும், உழைப்பாலும் போக்கினோம்.

அந்த மூன்றாண்டுகளில் அனுபவித்த பசியின் கொடுமைதான், உணவுப் பொருள்களை விணாக்குபவர்களைக் கண்டால், என் நெஞ்சு பொறுக்க மாட்டேன்கிறது.

பசி, பிணி, தாகம், இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாக்கின்ற ஆன்ம உருகத்தைக் கொண்டு, தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் வேண்டும்.

ஆண்டவரின் இயற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவ தேகங்கள் என்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகும் தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவ்வாலங்களை வணக்கம் செய்வதே சீவகாருண்யம். சீவகாருண்யம் (ஜீவ தயவு) பேரின்ப வீட்டின் திறவு கோல்.

ஜீவகாருண்யம் இல்லாமல் செய்யப்படும் ஞானம், யோகம், தவம் , விரதம், ஜபம், தியானம் முதலியன மாயா ஞாலம் ஆகும்.

“ஏழையென்பது பொருள் வறுமை, அறிவு வறுமை இரண்டையும் குறிக்கும்,”

சமுதாயத்தில் பொருள் வறுமை என்பது கிடையாது. அறிவு வறுமைதான் உள்ளது. இது என் அனுபவத்தில் கிடைத்தது.

வறுமையை கல்வியாலும், தொழில்களாலும், உழைப்பாலும் போக்கலாம். உழைப்பவனுக்கு வறுமை கிடையாது.

வறுமை, வறுமை, வறுமை – வறுமையைப் போக்க வேதாத்திரியம் தரும் தீர்வுகளை நடைமுறைப்படுத்த வாருங்கள்.

பானுகுமார்.

வேதாத்திரியம் ஆராய்ச்சி நிலையம்,
வாழ்க வளமுடன் இல்லம்,
பி - 58 ஏழாவது குறுக்குத் தெரு,
அண்ணாநகர். செங்கற்பட்டு.
banukumar.v@gmail.com

பகுதி 1

வறுமை ஒரு பார்வை

1. வறுமை வறுமை வறுமை
2. வறுமை எப்படி உருவாகிறது?
3. வறுமைக் கோட்டின் வரையறைகள்
4. வறுமை எழக் காரணம்
5. பணம், வறுமை, பிச்சை, கடன் வந்த விதம்.

1.வறுமை வறுமை வறுமை

வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்தநிலை ஆகும்.

பல நாடுகளில் முக்கியமாக வளர்ந்துவரும் நாடுகளில் வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருந்துவருகிறது.

வறுமைக்கான காரணம், அதன் விளைவுகள், அதனை அளப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான வாதங்கள், வறுமை ஒழிப்பைத் திட்டமிடுவதிலும், நடைமுறைப் படுத்துவதிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன.

இதனால் இவை, அனைத்துலக வளர்ச்சி, பொது நிர்வாகம் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.

வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக, வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது.

சமயங்களும், பிற அறநெறிக் கொள்கைகளும் வறுமையை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

எனினும், சில ஆன்மீகச் சூழல்களில் உலகப் பொருட்களைத் துறந்து பொருள்சார் வறுமை நிலையை ஏற்றுக்கொள்ளல் சிறப்பானதாகக் கருதப்படுவதும் உண்டு.

வறுமை தனிப்பட்டவர்களையோ அல்லது குழுக்களையோ பாதிக்கக்கூடும்.

இது வளர்ந்துவரும் நாடுகளில் மட்டுமன்றி வளர்ந்த நாடுகளிலும், வறுமை, வீடின்மை போன்ற பல வகையான சமுதாயப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றது.

வறுமையின் வகைகள்

வறுமையை முற்றிலும் வறுமை (absolute poverty) என்றும், ஒப்பீட்டு வறுமை(relative poverty) என்றும் இருவகைப்படுத்தலாம்.

வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானம் அக்குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக்குறைவாக இருப்பதாகும்.

மிகக் குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்திற்கும் கீழான நிலையில் உள்ளவர்களை இது குறிக்கும்.

ஒப்பீட்டு வறுமை என்பது இரண்டு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்திற்கு இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பதாகும்.

இந்தியா போன்ற நாடுகளில் இவ்விரண்டு வகை வறுமையும் காணப்படுகிறது. அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒப்பீட்டு வறுமை மட்டும் காணப்படுகிறது.

இதற்கு என்ன காரணம்? தேசிய வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே.

வறுமையின் விளைவுகள்

வறுமையில் உழல்வது ஒருவரின் மூளைத்திறனை பாதிப்பதாக இந்தியாவிலும், அமெரிக்காவிலும் நடந்துள்ள இரண்டு ஆய்வுமுடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

வறுமையைச் சாற்றும் சிறுவன்

இந்தோனேசியாவின், ஜகார்த்தாவைச் சேர்ந்த ஒரு பையன் தான் குப்பைத்தொட்டியில் கண்டெடுத்தவற்றைப் பெருமையுடன் காட்டுகிறான்.

வறுமையின் பல முகங்கள்.

உணவு உடை உறையுள் வேண்டும்

-ஏழையின் வறுமை

காசு பணம் சொகுசு வேண்டும்
- நடுத்தர வறுமை

அன்பு காதல் கனிவு வேண்டும்
- பணக்காரன் வறுமை

கல்வி செல்வம் புகழும் வேண்டும்
- இளைஞனின் வறுமை

கனிவோடு காதல் கணவன் வேண்டும்
- கன்னியின் வறுமை

கையும் கோலும் துணையும் வேண்டும்
- முதுமையின் வறுமை

நேரம் காலம் சந்தர்ப்பம் வேண்டும்
- திறமையின் வறுமை

நலவு நாடும் நல்தலைவர் வேண்டும்
- அரசியல் வறுமை

திட்டம் சிந்தனை சிறப்பு வேண்டும்
- நாட்டின் வறுமை

நம்மை நாமே நம்ப வேண்டும்
- நம்மில் வறுமை

மற்றவரை நம்பி வாழ்தல் கொள்கை
- வாழ்க்கையின் வறுமை

2.வறுமை எப்படி உருவாகிறது?

‘வறுமையை ஒழிப்போம்’ என்ற தேர்தல் வாக்குறுதியை முன்வைக்காத அரசியல் கட்சிகள் எதுவுமே இல்லை.

அதைத் தொடர்ந்து வறுமைக்கோட்டின் எல்லையை நிர்ணயிக்கும் பணியும், அதுகுறித்த சர்ச்சைகளும் எழுகின்றன.

மக்கள்தொகையில் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் விழுக்காடு, வறுமையிலிருந்து மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்ற புள்ளிவிவரங்கள் அறிவிக்கப்படுகின்றன.

மஜீத் ரானெமா

எளிமை, இல்லாமை, ஏழ்மை, வறுமை போன்ற சொற்களின் படிநிலையைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியவில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, 'வறுமை எளிமையைப் பின்தொடரும்போது' என்ற தலைப்பில், ஈரான் நாட்டின் முன்னாள் அமைச்சரும் பல ஆண்டுகளாக (1957-72) ஐக்கிய நாடுகள் சபையின் வெவ்வேறு அங்கங்களில் முக்கியமான பதவிகளை வகித்தவருமான மஜீத் ரானெமா பிரெஞ்சு மொழியில் எழுதியுள்ள புத்தகம் ஆழமானதும் சுவாரஸ்யமானதுமான பல பார்வைகளை அளிக்கிறது.

2003-ல் வெளியான இந்தப் புத்தகம், உலக அளவில் பெரும் கவனத்துக்குள்ளானதுடன் வேறு பல மொழிகளிலும் வெளிவந்திருக்கிறது.

ஓய்வு பெற்றபின், 20 ஆண்டுகளுக்கு மேலாக, உலகில் ஏழ்மை என்ற பிரச்சினைகுறித்து ஆய்வுகள் செய்துவரும் இவர், கலிஃபோர்னியாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

"வறுமையும் இல்லாமையும் பரவலாகப் பெருகி வருவது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சமூக அவலம். அதுவும், குறிப்பாக அதைத் தவிர்க்க முடிந்த சமூகங்களிலும் இப்படி வறுமையும் இல்லாமையும் பெருகிவருவது எல்லாவற்றிலும் மிக மோசம்" என்கிறார் ரானெமா.

ஏழ்மையின் மூன்று கோணங்கள்

அசையும் சொத்து, அசையாச் சொத்து, நுகர்பொருள்கள் இவற்றை மேலும் மேலும் உற்பத்தி செய்து தள்ளும் நடவடிக்கைகளினால் இந்த அவலத்தைப் போக்கிவிட முடியாது.

ஏனென்றால், இதே நடவடிக்கைகள்தான் இன்னொருபுறம் வறுமையை அதிகரிக்கச் செய்கின்றன. ஆகவே, இந்த நிலையின் ஆழமான பன்முகக் காரணங்களைப் புரிந்துகொள்வதுதான் இன்றைய அக்கறையாக இருக்க வேண்டும்.

ஏழ்மை நிலையைப் பல கோணங்களிலிருந்தும் பார்க்கும் இவர், மூன்றுவிதமான ஏழ்மைகளைப் பற்றிப் பேசுகிறார்.

1. சுயமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஏழ்மை.
2. ஒற்றுமையாகக் கூடி வாழ்பவர்களின் ஏழ்மை.
3. நவீன ஏழ்மை.

சுயமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஏழ்மை என்பது அடிப்படையில் எளிமையான வாழ்க்கை.

ஏழ்மை என்பது ஓர் எதிர்மறையான நிலை; குறைகளும் இல்லாமையும் நிறைந்தது. இதை விரும்பித் தேர்ந்தெடுப்பதென்பது விநோதமாக, முரண்பாடாகவேகூடத் தோன்றலாம்.

ஆனால், எளிமை, சிக்கனம், பிறரிடம் மரியாதை என்ற ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் அமைந்த சுதந்திரமான, தெளிவான வாழ்க்கை நிலையாக ஏழ்மை பண்டைய கலாச்சாரங்கள் எல்லாவற்றிலும் இருந்தது. இந்த வாழ்க்கை நிலைதான் பல பண்பாட்டாளர்களையும் உருவாக்கியிருக்கிறது.

ஒற்றுமையாகக் கூடி வாழ்பவர்களின் ஏழ்மை என்பது உலகைப் பற்றிய மத, ஆன்மிக ரீதியினாலான பார்வையைச் சார்ந்தது.

ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கிடையேயும் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலுடனும் தாங்கள் கொண்டுள்ள உறவுகளினால் உருவான செல்வங்களைச் சார்ந்தது இந்த வாழ்க்கை.

இந்தச் செல்வங்களை அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். தேவைக்கு மேல் எதையும் விரும்பாத அவர்களுடைய உலகத்தில் பற்றாக்குறைக்கு இடமிருக்காது.

தங்களால் உற்பத்தி செய்ய முடிந்தவற்றை வைத்துக்கொண்டுதான் அவர்களுடைய தேவையும் நிர்ணயிக்கப்படுகிறது.

நவீன ஏழ்மை என்பது, பௌதிகச் சொத்துகள் மட்டுமே செல்வத்தின் ஊற்றுக்கண் என்று கருதி, மனிதர்களின் முயற்சிகளெல்லாம் அதை நோக்கியே இருக்கக்கூடிய சமூகம் உருவாக்கும் ஏழ்மை.

இந்தச் சமூகம் புதிது புதிதாகத் தயாரிக்கும் தேவைகளை எல்லோரும், சில சமயம் கணிசமான பண வசதி உள்ளவர்களும்கூட, அடைய முடியாமல் போய்விடுகிறது.

சமூக, பண்பாட்டு உறவுகளை எல்லாம் தன்னுடைய சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் பொருளாதார மேலாதிக்கத்தின் நேரடி விளைவுதான் இந்த ஏழ்மை.

இந்தச் சமூகம் ஆசை காட்டுபவற்றில் மயங்கிவிழும் ஏழைகள் இரண்டுவிதமான தேவைகளுக்கு ஆசைப் படுகிறார்கள்.

ஒன்று, ஏற்கெனவே தங்களுடைய முன்னோர்கள் காலத்திலிருந்தே இருக்கும் தேவைகள்.

மற்றொன்று, நுகர்வோர் பொருளாதாரம் செயற்கையாகத் தயாரித்து முன்வைக்கும் தேவைகள்.

இந்த வறுமை உடலைச் சீர்குலைப்பதுடன் மனதையும் களங்கப்படுத்துகிறது என்பது ரானெமாவின் கருத்து.

பண்டைய வறுமையும் இன்றைய வறுமையும்

சிறு வயதிலிருந்தே வெவ்வேறு பொருளாதாரப் பின்னணியிலிருந்து வந்த மக்களுடன் பேசிப் பழகி, அவர்கள் சொல்வதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்ததால் நியாயமான, அர்த்தமுள்ள கேள்விகளைக் கேட்கக் கற்றுக் கொண்டதாகச் சொல்கிறார் ரானெமா.

தவிர, தனக்கு அருகிலும் தொலைவிலும் இருந்த முன்னோர்களைத் தேடிப்போகும் புனிதப் பயணங்களை அவர் மேற்கொண்டிருக்கிறார்.

காலத்தில் பின்னோக்கிச் சென்று வரலாற்று ரீதியாகத் தகவல்களைச் சேகரித்ததில், பண்டைய காலத்தில் வறுமை என்று குறிப்பிடப்பட்டதற்கும் இன்றைய வறுமைக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருப்பதாகச் சொல்கிறார்.

தொழில் நிமித்தமாக உலகம் முழுவதும் பயணம் செய்தபோது நிறைய குறிப்புகள் எடுத்துவைத்திருக்கிறார்.

வட கனடாவின் செவ்விந்தியர்கள், கல்கத்தாவின் நடைபாதைவாசிகள் இவர்களிடையே தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றித் தன் புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

2008-ல், ழான் ரோபெர் என்பவருடன் இணைந்து இவர் எழுதியுள்ள ‘ஏழைகளின் சக்தி’ என்ற புத்தகம் ஏழ்மையை இன்னும் விரிவாக ஆய்வுசெய்கிறது.

புள்ளிவிவரங்கள் மூலம் மட்டுமே வறுமையை வரையறுப்பது என்பது யதார்த்த நிலையைப் பிரதிபலிக்காது.

சமூகவியலின், தத்துவச் சிந்தனையின் கூறுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வறுமையைப் பற்றிய மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிறார்கள் ரோபேடும் ரானெமாவும்.

இருவேறு வறுமைகள்

ஒரு மனிதனின் வாழ்க்கையில் அவனுக்கு இயற்கையாக ஏற்கெனவே இருக்கும் வறுமை நிலை வேறு, வெளியுலகம் ஆசை காட்டுவதால் உண்டாகும் வறுமை வேறு.

அவனுடைய உள் உலகுக்கும் வெளி உலகுக்கும் இடையேயுள்ள உறவுகளின் அடிப்படையில்தான் ஏழ்மையின் வரலாறே உருவாகிறது.

ஆனால், உண்மையில் தனிமனிதன் ஒருவனின் உள் உலகம்தான் அவன் உணரும் ஏழ்மையையோ செல்வத்தையோ நிர்ணயிக்கிறது.

அவசியம் எது, மிகை எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவனுடைய உள் உலகம்: தேவையையும் குறையையும் அதுதான் வரையறுக்கிறது.

ஏழ்மை என்று கருதப்படும் தளங்கள் இந்த உலகில்தான் கட்டுமானம் செய்யப்படுகின்றன என்று சொல்லும் ராஸெமா, “இந்தத் தளங்கள் நொறுங்கும்போது, வெளி யுலகிலிருந்து மனிதனைத் தாக்கும் இன்னல்களையும் சோதனைகளையும் தடுக்கும் கேடயங்களை அவனுடைய உள் உலகம், உள்மனம் இழந்துவிடுகிறது.

பொருளாதார வசதியின்மை அல்லது வருமானமின்மை குறிப்பிடும் ஏழ்மையுடன் இந்த அவலமான நிலையை ஒப்பிட்டுக் குழப்பம் அடையக் கூடாது. இவை இரண்டும் ஒன்றல்ல” என்கிறார்.

3. வறுமையின் வரையறை

நாம் அடிக்கடி பயன்படுத்தும் பல வார்த்தைகளின் உண்மையான பொருள் நமக்குத் தெரிந்திருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கிறேன்.

அவற்றில் அதி முக்கியமானது என்ற பட்டியலை எடுத்தால் ‘வறுமைக் கோடு’ என்ற பதம் தென்படும்.

.
வீட்டைச் சுற்றியுள்ள புல்லை வெட்டிச் சுத்தப்படுத்த 200 ரூபாய்க்கு ஆள் அமர்த்தி விட்டு, உடற்பயிற்சி செய்வதற்காக ஆயிரத்து ஐநூறு ரூபாய் கொடுத்து ஜிம்முக்குச் செல்லும் போது வறுமையின் சுவை நமக்குப் பிடிபடுவதில்லை.

வறுமைக் கோடும்,அதற்குக் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கையும் செய்தி என்ற எல்லையைத் தாண்டி நம்மை அடைவதுமில்லை.

உலகில் உள்ள ஏழைகளின் மூன்றில் ஒரு பகுதி இந்தியாவில் வசிப்பதாக உலக வங்கியின் ஆய்வு ஒன்று கூறுகிறது.

அதே நேரம், நமது நாட்டின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்வதாகவும், அதனால் வறுமை ஒழிப்பு நடந்தேறி வருவதாகவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளோர் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் இந்தியாவில் நாம் நம்புகிறோம்.

ஆனால் உண்மையில் வறுமை என்றால் என்ன? இந்தக் கேள்வியை, கற்றுணர்ந்த நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் கிடைக்கப் பெறாத போது வறுமையில் இருப்பதாகப் பொருள் காணலாம் என்றார் அவர்.

அடிப்படைத் தேவைகள் எவையெவை என அவரது எழு வயது மகளைக் கேட்ட போது, ‘உணவு, உடை, உறைவிடம்’ என்றாள். இங்கே உறைவிடம் பற்றிப் பேசுவது முறையாக இருக்காது.

சொந்த வீடு வைத்திருப்பதுதான் உறைவிடம் என்ற காரணியைப் பூர்த்தி செய்வதாகப் பொருள் கொள்வது முறையல்ல.

குறைந்தபட்சம் வாடகை கொடுக்குமளவு வசதியும், வருமானமும் இருந்தால் போதுமானது.

ஆனால் வாடகைக்குக் கூட உறைவிடம் தேட முடியாமல் வீதியில் படுத்துறங்கும் நிலை என்பது நிச்சய வறுமை.

அப்படித்தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமது அரசாங்கத்தின் வறுமைக் கோட்டுக் கணக்கீடு அப்படி நினைக்கவும் இல்லை; கணக்கிடவும் இல்லை.

2005-06 ஆம் நிதியாண்டில் நகர்ப் புறத்தில் மாத வருமானம் ரூ 560 க்குக் குறைவாகவும், கிராமப் பகுதிகளில் ரூ368 க்குக் குறைவாகவும் சம்பாதிக்கும் மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளோர் என்று வரையறுக்கிறார்கள்.

நகர்ப் புறத்தில் 561 ரூபாய் சம்பாதிக்கிறவன் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவனாம்.

இந்த வரையறை நடைமுறை நிலவரத்தை ஏளனம் செய்வது போலுள்ளது. எனினும் எதன் அடிப்படையில் வறுமைக் கோடு வரையப்படுகிறது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

வறுமைக் கோடு நிர்ணயம் 1978 வரை பின்னோக்கி நம்மை இழுக்கிறது. அந்த வருடம் நகரங்களில் ரூ71.30 ம், கிராமங்களில் ரூ 61.80 ம் வருவாயோ அல்லது அதற்கு அதிகமாகவோ ஈட்ட முடிந்தால் வறுமைக் கோட்டுக்கு மேலே இருப்பதாகப் பொருள்.

அந்தக் காலத்தில் நிலவிய விலைவாசியின் அடிப்படையில் கிராமங்களில் தினசரி 2400 கலோரி உணவும், நகரங்களில் 2100 கலோரி உணவும் உட்கொள்ள அது போதுமானதாக இருந்ததாக ஐதீகம்.

அதை அடிப்படையாக வைத்து வருடந்தோறும் பணவீக்கம் அல்லது விலைவாசி ஏற்றம் என்று வாய்பாடு போட்டுப் பெருக்கி 2005-06 ஆம் வருடத்திற்கான கணக்கைச் சொல்லுகிறார்கள்.

உண்மையில் 560 ரூபாய் பணம் சுகாதாரமான, ஆரோக்கியமான 2100 கலோரி உணவை உட்கொள்ளப் போதுமானதாக இருக்குமா என்றெல்லாம் ஆராய்ந்தால் சுவாரசியமான விஷயங்கள் வெளிப்படலாம்.

அதைக் கடந்து, உயிர் வாழத் தேவையான அடிப்படை ஆகாரத்தை 560 ரூபாய் அளிப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அது மட்டுமே ஒரு மனிதனை வறுமையில் இருந்து மீட்டு விடுவதாகப் பொருளல்ல.

உதாரணமாக, சுகாதாரமான குடிநீர் வேண்டுமென்றால்கூட காசு கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. 1978 இல் அப்படியெல்லாம் இருந்திருக்காது.

அடிப்படை சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி என எல்லாவற்றுக்கும் ஒரு விலை இருக்கிறது.

அரசு மருத்துவமனைக்குச் சென்றாலும், குழந்தைகளை அரசுப் பள்ளிக்கு அனுப்பினாலும் அதற்கும் ஒரு செலவு இருக்கிறது.

ஆணும், பெண்ணும் ஆடை உடுத்தாமல் வாழ முடியாது. சென்னை மாநகரில் 2100 கலோரி உணவைத் தின்று விட்டு அம்மணமாகத் திரிந்தால் அவன் வறுமைக் கோட்டைத் தாண்டியவனா, புரியவில்லை.

சாப்பாடு மட்டும் இந்தால் போதும், அவன் வீதியில் படுத்துத் தூங்கினாலும் பரவாயில்லை; சாலையில் கக்கூஸ் போனாலும் பரவாயில்லை. அதைத்தானா நமது வறுமைக் கோடு வலியுறுத்துகிறது.

பஞ்சக் கோடு அல்லது பரதேசிக் கோடு என்று வாசிக்க வேண்டியதை நாம் வறுமைக் கோடு என்று வாசித்து வந்திருக்கிறோம்.

இருக்கட்டும். 2004-05 ஆம் ஆண்டில் 27.5 % மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழன்றதாக திட்டக் கமிஷன் அறிக்கை தெரிவித்தது. 27.5% அதிகாரப்பூர்வ எண்ணிக்கை.

நிஜமான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்றாலும் கூட, 110 கோடி மக்கள் தொகை கொண்ட தேசத்தில் 27.5 சதவீதம் என்பது முப்பது கோடிக்கும் மேல்.

இதில் நல்ல செய்தி என்னவென்றால், 1978 ஆம் வருடம் 51.3 விழுக்காட்டினர் இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தனர் என்பதே.

அதுவே 1954-55 இல் 64 சதவீதம். வறுமை ஒழிப்பு மெதுவாக என்றாலும் நிச்சயமாக நடந்தேறி வருவதாக அரசின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதே சமயத்தில் வறுமை என்ற சொல்லுக்கான இலக்கணமும், நிர்ணயமும் மட்டும் மாறவில்லை என்பதே வருந்தத் தக்க செய்தி.

ஆடம்பரம் என்று சில ஆண்டுகள் முன்பு கருதப்பட்ட சங்கதிகள் இன்று அத்தியாவசியம் ஆகிவிட்ட நிலையில், அத்தியாவசியம் அல்லது இன்றியமையாதது என்று கருதக் கூடிய அம்சங்களே வறுமையை அளக்கப் பயன்படவில்லை என்பதே வேதனைக்குரிய விசயம்.

ஏழைக்கும், பணக்காரனுக்கும் இடையேயான இடைவெளி அகலமாகிக்கொண்டே வருகிறது.

சமுதாய ஏற்றத்தாழ்வுகள் நிரம்பிய இந்தியச் சமூகத்தில், அதை விடக் கொடியதாக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் உருவெடுத்திருக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் (அதிகாரப் பூர்வமாக) 1,80,000 க்கும் மேலான விவசாயிகள் தற்கொலை செய்த செய்தியை சமீபத்தில் கண்டோம்.

உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கையை இத்தனை பெரியது என்றால், உயிரோடு செத்துக் கொண்டிருக்கும் குடியானவர்கள் எத்தனை கோடிப் பேர் இந்தப் பாரத தேசத்தில் இருக்கக் கூடும்?

விவசாயக் கடன்களை அப்படியே ரத்து செய்வதில் உள்ள அபத்தங்களைப் பற்றி தனியே ஆராய வேண்டும்; கூடவே, முன்னேறிய மேலை நாடுகளில் விவசாயத்திற்கு அளிக்கப்படும்

உதவிகளோடு ஒப்பிடுகையில் நமது தேசத்தில் கொடுப்பதெல்லாம் ஒன்றுமே இல்லை என்பதையும். இருக்கட்டும்.

நாம் எல்லாவற்றிலும் சீனாவோடு ஒப்பிட்டுப் பேசிக்கொண்டும், போட்டி போடுவதாக நினைத்துக்கொண்டும் உள்ளோம்.

யுனிசெஃப் புள்ளி விவரத்தின் படி 2006 ஆம் வருடம் ஐந்து வயதுக்கு உட்பட்ட 25 குழந்தைகள் சீனாவிலும், இந்தியாவிலும் இறந்து போயுள்ளனர்.

இதில் இந்தியாவின் பங்கு 21 இலட்சம். ஊட்டச் சத்து குறைவாகப் பிறக்கும், வளரும் குழந்தைகளின் எண்ணிக்கை கவலையளிப்பதாக உள்ளது.

மக்கள் தொகையில் உலகிலேயே இரண்டாவது பெரிய நாடு. பொருளாதாரத்தில் 12 ஆவது பெரிய நாடு. 2007 இறுதியில் உலகின் நம்பர் 1 பணக்காரராக விளங்கிய முகேஷ் அம்பானியை உற்பத்தி செய்த நாடு.

பொருளாதார வளர்ச்சியில் எடுத்துக் கொண்டால் உலக அரங்கில் இரண்டாவது இடம். எல்லாம் நன்றாகத்தான் தெரிகிறது.

இன்னொரு பக்கம். உலக வாழ்க்கைத் தரப் பட்டியலில் 128 ஆவது இடம். (நார்வே 2 வது, கனடா 3 ஆவது) உலகில் உள்ள ஏழைகளில் மூன்றில் ஒரு பாகத்தைக் கொண்டிருக்கும் நாடு.

அதிகாரப் பூர்வமாக 30 கோடி ஏழை மக்களை – உண்மையில் அதற்கும் மேல் – கொண்டிருக்கும் தேசம்.

முரண்பாடுகளும், அவலங்களும், சீரற்ற தன்மையும் கொண்டதாக நிலவுகிறது நமது பொருளாதாரமும் அதன் வளர்ச்சியும்.
இந்தக் குறைபாட்டிற்கு யார் பொறுப்பு?

சமூக அமைப்பும், நிர்வாகமும் அல்லவா இதற்குக் காரணம்? என்ற உண்மை வினாவல்லவா இங்கு தொனிக்கிறது!

நமது தேவை வெறும் பொருளாதார வளர்ச்சியா, அல்லது அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தேசத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியா?

4.வறுமை எழக் காரணம் – மகரிஷி

செல்வந்தர்கள் அனுபோகிக்கும் முறைகளைக் கண்ணுறும் மற்றவர்களும் அதேபோன்று தாங்களும் அனுபோகிக்க வேடுமென்று ஆர்வம் கொள்கிறார்கள்.

பொருட்களைச் செலவழித்து பற்றாக் குறையைத் தீர்க்கக் கடனும் வாங்குகிறார்கள்.

அனுபோகப் பொருட்களின் பழக்கத்தால் தேவையும், தேவையால் பழக்கமும் ஏற்பட்டு வாழ்க்கையில் எண்ணிறந்த பொருட்களை அனுபவிக்கும் நிலை மேலும்மேலும் உருவாகி விடுகிறது.

இதன் காரணமாக ஏழை மக்கள் மேலும் ஏழைகளாகவும், நடுத்தர மக்கள் ஏழைகளாகவும், செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகவும் மாறிக் கொண்டே இருக்கிறார்கள்.

மனிதனுக்கு வறுமை என்பது மூன்று வழிகளில் உண்டாகின்றன. அவை.

1. அவன் வாழ்வில் உள்ள வசதிகளும் வீணான வழிகளில் செலவு செய்து அழித்து விடுவது.
2. அன்று உள்ள சமுதாய அமைப்புக்கும், தனிமனிதன் தேவைகளுக்கும் ஒத்தவாறு பொருள் உற்பத்தித் திறனைக் கற்றுக் கொண்டு, அதை முறையாகச் செய்யாத சோம்பேறித்தனம்.
3. உழைப்பினாலும், அறிவின் திறமையாலும் ஒருவர் உற்பத்தி செய்யும் பொருட்களை உழைக்காமலே அநீதியான வழிகளில் பிறர் பறித்துண்ணுதல்.

வறுமையை ஏற்றுக் கொள்ளவோ பொறுத்துக் கொள்ளவோ முடியாது.

முற்காலத்தில் ஏழைகளாக இருந்த பெரும்பாலோர் சிந்தனையற்றவர்களாகவும், சிந்தனையுடையோர் பொறுமை மிகுந்தவர்களாகவும், ஏழ்மை விதிப்பயன் என்று பொதுவாக எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இக்காலத்தில் சிந்தனையாற்றலும், வாழ்க்கை அனுபோக உரிமையுணர்ச்சியும் பெரும்பாலும் எல்லோரிடமுமே இருக்கின்றன.

அதுமட்டுமின்றி எல்லோரும் இயந்திர விஞ்ஞானக் கருவிகளைக் கையாளும் திறமையும் பெற்றவர்களாகி விட்டனர்.

ஆகையால் எல்லோரும் செல்வந்தர்களாகும் காலம் வரும் வரையில், வறுமையில் வாழ்வோர்கள் பொறுமையோடு இருக்க முடியாது.

பசி, வெட்பதட்ப ஏற்றத்தாழ்வு, உடல் கழிவுப் பொருட்களின் உந்து வேகம் இம்மூன்றால்தான் இயற்கையில் மனிதனுக்குத் துன்பம் உண்டு.

காலத்தால் இவற்றைச் சமன் செய்ய வேண்டும். ஒருவனுக்கு உணவு தேவையாகவும் அதில் விருப்பமாகவும் இருக்கிறது.

அதாவது பசி ஏற்படுகிறது. கடைகளில் உணவுப் பொருட்கள் இருக்கின்றன.

ஆனால் இவனுக்கு அவற்றை வாங்கப் பணம் இல்லை. இந்தக் காரணத்தால் உணவு கிட்டவில்லை.

நேரத்தோடு உணவு கிட்டாது குறைபாட்டால் கண்களை இருளச் செய்து, காதுகளை அடைத்து, கருத்ததைச் சோரச் செய்து, குடல்களை முறுக்கிப் பிழிந்து, உடலில் உள்ள நரம்புகள் அனைத்தையும் தளரச் செய்கிறது.

பசியால் துன்பம் இல்லை. பசிக்கு உணவு இல்லாது நிடிக்க வைத்துவிட்டதுதான் துன்பம்.

இதற்கு முன் சாப்பிட்ட உணவு நன்கு செரிமானம் ஆகி, பசி வருகிறது.

பசி எடுத்தவுடன் உணவு கிடைத்தால், “நன்றாகச் சாப்பிட்டேனப்பா!” என்கிறான். பசிக்குக் காலத்தோடு தேவையானபடி உணவு கொடுத்து நிறைவு செய்யாவிட்டால், சமன் செய்யாவிட்டால், பசியை நீடிக்க விட்டால் அதுதான் துன்பம்.

கொடிய துன்பம் விளைவிக்கும் பட்டினியை, அறிவுடையோர் ஓரிரு நேரம் பொறுத்துக் கொண்டாலும் அவரது குடும்பத்தினரும், குழந்தைகளும் பொறுத்துக் கொள்வார்களா?

வறுமையில் வாடிடுவோர் வயிற்றுப் பசித் துன்பமும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் துன்பமும் பொறுத்துக் கொள்ள முடியாது.

அதன் காரணமாக சமுதாய நலன் காக்கும் திறனும், ஒழுக்கம் எனும் கட்டுப்பாடும் வீழ்ந்துவிடும். உள்நோய், சமுதாயக் குற்றங்கள் பெருகிவிடும்.

“வறுமையை பொறுத்திட
வல்லவரோ எல்லோரும்
பொறுமைதான் கொண்டாலும்
பொறுக்குமோ உடல் குடும்பம்?” (மாக்கோலம்)

இருப்புக்கும் தேவைக்கும் இடையே உள்ள பள்ளம் வறுமையில் வாடுவோரைக் கவலையில் ஆழ்ததுகிறது.

எண்ணிறந்த மக்கள் வறுமையின் காரணமாக எண்ணங்களைச் சிதறவிட்டு வருந்திக் கொண்டிருக்கும் போது அவர்களிடமிருந்து வெளிப்படும் வருத்த அலை உலக மக்கள் எல்லேரையும் தாக்குகிறது.

“ஏழ்மையின் கொடுமையினைப் பார்த்துப் பார்த்து
இறுகிவிட்ட மனதுடனே செல்வர் பல்லோர்.
வாழ்கின்றார் அவர்கள்தமைப் பார்த்துப் பார்த்து
வறியோர்கள் பொருமுகின்றார். முடிவு என்ன?” (மாக்கோலம்)

அவர்களது வாழ்க்கைப் போராட்டக் கவலை அலைகள் உலகில் யாரையும் நிம்மதியாக அமைதியாக இருக்க விடுவதில்லை.

5. பணம், வறுமை, பிச்சை, கடன் வந்த விதம்.

பணம், வறுமை, பிச்சை, கடன் வந்த விதம் வேதாத்திரி மகரிஷி விரிவாக பேசுகிறார்.

இயற்கையின் சிறப்பு

மனிதர்களின் வாழ்விற்கு அவசியமும் ஆதாரமுமான பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், நிரவிக் கொள்ளல், அளவு முறையோடு அனுபோகித்தல் என்பனவாகிய எல்லாம் சேர்ந்த ஒன்றே பொருளாதாரம் எனப்படும்.

இயற்கையமைப்பை ஆதாரமாகவும், மூலதனமாகவும் கொண்டே மனிதன் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்கிறான்.

மனிதனும் கூட இயற்கையின் பகுதியேயன்றோ? மனிதனைத் தவிர்த்தோ, அல்லது வேறு ஏதேனும் ஒரு பொருளைத் தவிர்த்தோ, மற்றவை மாத்திரம் இயற்கை என்று சொல்ல முடியாது.

மனதின், பொருட்கள், உலகம், அண்டங்கள், அனைத்தும் – மற்றும் அவர்களின் தோற்றம், இயக்கம், பெருக்கம், மாற்றம் என்ற எல்லா நிகழச்சிகளும் அடங்கிய ஓர் அகண்டாகாரப் பெரும் பொருளே இயற்கையாகும்.

செயற்கை

நினைக்கும் – ரசிக்கும் – உணரும் இயற்கையின் ஒரு பகுதியான அறிவே தான், சந்தர்ப்ப சந்தப்புக்களின் மூலமும், ஆராய்ச்சியின் மூலமும் இயற்கையின் அமைப்புகளை, நிகழச்சிகளை, அறிந்து கொண்ட அளவில் முயற்சியினால் தனது தேவைக்கு ஏற்ற் பொருட்களைச் செயற்கை முறையில் பெறுகிறது.

சீர்த்தருத்தி, உருமாற்றுகிறது. அனுபவிக்கிறது. இவ்விதம் செயற்கை முறையில் வாழ்க்கையை ஒழுங்கு செய்து கொள்ளும் திறமை மிகுந்தவனே மனிதன்.

பூமியில் பதிந்த ஒரு வித்தில் நீர் ஊற்றினால் அது முளைவிட்டு மேல் கிளம்பி, அதனதன் இனமான செடியாகவோ, மரமாகவோ, வளர்ந்து பலநூறு விதைகளைத் தருகிறது என்ற இயற்கை நிகழ்ச்சிகளைத் சந்தர்ப்ப் வசமாகக் கூர்ந்து நோக்கிய மனிதனானவன் வசதியுள்ள இடங்களில் தேவைக்கு ஏற்றபடி விதைகளை விதைத்துப் பயிரிட்டு உண்டு வாழும் செயற்கைத் திறமையைப் பெற்று விட்டான்.

சந்தர்ப்பவசமாக இரும்பைக் கண்ட மனிதன், அதன் உபயோகத்தைப் பலவகையிலும் செலுத்தி உடல் கருவிகளுக்கு உதவியாகப் பல உப கருவிகளைத் தோற்றுவித்துக் கொண்டான். வாழ்வில் பெரும் பயன் அடைந்தான்.

இதுபோல், வேறு என்னென்ன பொருட்கள் பூமியில் இருக்கின்றனவென முயற்சியோடு தேடி, அதன் விளைவாகப் பல உலோகங்களையும் ரசாயனப் பொருட்களையும் பெற்றான்.

எனினும், இதுவரையில், ஒரு பொருளைக் கூட, இயற்கையைமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாது மனிதன் உற்பத்தி செய்தானில்லை. செய்யவும் முடியாது.

வித்து இல்லால் தானியத்தை மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. உலேகமில்லாமல் கருவிடையத் தோற்றுவிக்க முடியாது.

இயற்கையமைப்பே அறிந்த அளவில், தன் முயற்சியைக் கொண்டு பொருளோடு பொருளைச் சோர்த்தும். ஒரு பொருளிலிருந்து

அதனினுடைய பகுதிகளைப் பிரத்தும், சூடு கொடுத்தோ மோத விட்டோ அணுவியக்கத்தைத் தூண்டியும், தனது தேவைக்கு ஏற்றவாறு பலவிதமான பொருட்களைத் தோற்றுவிக்கும் வல்லமையையே மனிதன் பெற்றிருக்கிறான்.

இவ்வாராய்ச்சியின் மூலம் இயற்கையின் விளைவுகளையே முயற்சிக்கேற்ப ஒழுங்குபடுத்தி, வாழ்வில் அனுபோகப் பொருட்களாக மனிதன் பயன்படுத்துகினறான் என்ற பேருண்மை மிகத் தெளிவாக விளங்குகிறது.

உரிமை ஒழுங்கு

அறிவில் முன்னேற்றமடையாத மனிதர்கள் தங்களுடைய தேவையுணர்வின் வேகத்தாலும், உடல் வலிமையாலும் பிறர் பொருளைக் கவர்ந்து அனுபோகம் செய்ய முயன்றனர்.

அப்பொருள் வேற ஒருவர் தன் உழைப்பினால் பெற்று தன் வாழ்க்கைக்கு அவசியமாக வைத்திருக்கின்றதானாலும் பலாத்தகாரமாகக் கவர்ந்து கொள்ள முயன்றனர்.

அதன் விளைவாக, மக்களின் மத்தியல் போட்டி, பகை, சண்டை இவைகள் ஏற்பட்டுள்ளன. அதன் தொடர் விளைவாகப் பலவிதத்திலும் மனித இனத்திற்குத துன்பங்கள் ஏற்படலாயின.

இந்த நிலைமையைக் கூர்ந்து நோக்கிய சிந்தனையாளர்கள், இத்தகைய பலாத்கார நிகழ்ச்சிகளை ஒழித்து மனிதர்களின் வாழ்வில் அமைதியை ஏற்படுத்த முயன்றார்கள்.

அதன் பயனாகவே உரிமை என்ற ஒரு ஒழுங்குமுறை மனிதர்கள் வாழ்வில் சமுதாயத்தில் தோன்றியது.

ஒருவன் தன் முயற்சியினால் பெற்ற எந்தப் பொருளையும் மற்றவர் எவரும் பிடுங்கிக் கொள்ளக் கூடாது. அவரவர் முயற்சித்துப் பெறுகின்ற பொருட்களை

- மற்றவர்க்குத் துன்பம் தோன்றாத வகையில் வைத்திருக்கவும்,
- அனுபோகிக்கவும்,
- விரும்பினால் பிறருக்குக் கொடுத்து உதவவும்

உரிமை உண்டு என்ற பொதுவான சமூக அங்கீகார முதல் முதலில் மனிதரிடையே தோன்றிய பொருளாதாரச் சீர்திருத்தம் ஆகும்.

அவரவர் முயற்சியின் விளைவுகளை மாத்திரம், அல்லது மற்றவர் முயற்சியினால் விளைவித்ததெனில், அன்னாருடைய விருப்பத்தின கீழு மாத்திரம் எவரும் எந்தப் பொருளையும் அனுபோகிக்கலாம் என்ற உயரிய உரிமை ஒழுக்கத்தைப் பாதுகாக்கக் கூட்டு முறையில் மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட விதிகளும், அவற்றை அமுல் நடததி வந்த முறைகளும் அரசியல் என்ற பெயரைப் பெற்றுள்ளன.

பண்ட மாற்றும் பணமும்

இந்த உரிமைத் தத்துவத்தின் அடிப்படையிலேயே ஒருவர் பொருளை மற்றவருக்குக் கொடுத்து. அதற்குப் பதிலாக தனக்குத் தேவையான வேறு பொருளைப் பெற்றுக் கொள்ளும் வழக்கமே பண்ட மாற்று முறையாகி விட்டது.

நாளுக்கு நான் தூரப் பிரதேச மக்களோடு தொடர்பு கொள்ள வாய்ப்பைப் பெற்ற மனிதன், பண்டமாற்று முறையைச் சுலபமாக்கிக் கொள்ள பணம் என்பதைத் தோற்றுவித்தான்.

வெய்யில், காற்று, மழை என்பனவாகிய இயற்கையின் விளைவுகளை மனிதன் தன் முயற்சியினால் எல்லை கட்டிக் கொள்ள முடியவில்லை.

ஆகையினால் அவற்றைத் தனியாக உரிமை பாராட்டிக் கொள்ளவும் முடியவில்லை.

பூமியை விவசாயத்திற்குப் பண்படுத்த எடுத்த முயற்சிக்கு அறிகுறியாக அதை மாத்திரம் தனக்குச் சொந்தம் என்று உரிமை பாராட்டி, எல்லையை வகுத்துக் கொண்டான்.

இந்த இயற்கையமைப்பை உரிமை பாராட்டுகின்ற நில உரிமை தான் நாளுக்கு நாள் மனிதனின் வாழ்வில் பலவிதச் சிக்கல்களைத் தோன்றுவிக்கவும், துன்பங்களை விளைவிக்கவும் காரணமாயின.

பின்னர் நாளாவட்டத்தில், பணத்திற்கு முதல் மதிப்பு வைத்து, அதன் மூலமே பொருட்களை மதிப்பிடும் வழக்கம் மக்களிடையே தோன்ற விட்டது.

பணத்தை மூலதானமாக வைத்தேதான் எவரும் உழைப்பைக் கொடுத்து – வாங்க முடியும் என்ற அளவுக்குப் பணத்தின் மதிப்பு உயர்ந்து விட்டது.

இந்த நிலைமை நீடித்ததால் சமூகத்தில் உழைக்கத் தயாராக இருக்கின்ற அனேகம் பேர்களின் சேவை நலம் பயக்கும் முறையிலும்,

சிக்கனமாகவும பயன்படுத்தப்பட முடியாத சூழ்நிலைகள் சமுதாயத்தில் உருவாகி விட்டன.

வறுமை

மக்களின், உழைப்பைச் சமூகத்தில் பயன்படுத்தி, ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை ஆதாரப் பொருட்களைப் பெற்று அனுபோகிக்கின்ற உரிமையை அளிக்கின்ற நிர்வாக முறை இல்லாத இடங்களில்,

- உடல் தேவைகளின் வேகமும்
- அவைகளை முறைப்படி தீர்த்துக் கொள்ள உரிமையுள்ள பொருட்கள் இல்லாமையும்,
- சமூகக் கட்டுப்பாடான உரிமை, உடமை ஒழுக்க உணர்வும்,

ஒன்று சேரப் பெற்ற மனிதனுடைய உணர்ச்சி – அறிவுப் போராட்டத்தால் எழுகின்ற ஒரு சங்கடமன நிலைமையே வறுமை எனப்படுகிறது.

ஒழுக்கம்

உடல் உணர்ச்சிகளும், ஒழுக்க உணர்வம் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டு, ஒன்றை ஒன்று மீறி, மனிதனின் அறிவு நிலை, உடல் வலிவு இவைகளுக்கேற்பச் செயல்புரியும் துணிவு தோன்றுகிறது.

பின்னர் அப்பழக்கமே இயல்பாக மாறி விடுகிறது. இதை நாம் நன்கு அறிவோம். வறுமையால் எழும் உணர்ச்சி மற்றும் உள்ளப் போராட்டங்களை, அறிவில் உயர்ந்த மனிதன் பொறுமையோடு, சகிப்புத் தன்மையோடு தாங்கி அனுபவித்துக் கொள்கிறான்.

அதனால் எழுகின்ற துன்பதை தன் செயலின் வேகத்தால் தாங்கியும் தணித்தும் கொள்கிறான்.

ஆராய்ச்சித்திறன் மற்றும் ஒழுக்கப் பண்பு இல்லாதவனும், விளைவறியாது செயலாற்றும் வேகமுள்ளவனும் ஆன மனிதனோ பலாத்கார முறையில், ஒழுங்கு மீறி, துணிவு கொண்டு பிறர் பொருட்களைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ற முறையில் கவர்ந்து கொள்கிறான்.

இதுவே கொள்ளை என்றும் திருட்டு என்றும் சொல்லப்படுகின்றது.

இந்த கொடுஞ்செயலின் விளைவாக மனிதன் மனிதனுக்குப் பயப்படுவது, மனிதனை மனிதன் இம்சை செய்வது, மனிதனையே

மனிதன் கொன்று விடுவது என்பன போன்ற பெருந்துன்ப விளைவுகள் சமூக வாழ்வில் ஏற்பட்டுவிட்டன.

பிச்சை

உடல் தேவை உணர்ச்சிகளின் துன்பத்தை தாங்க மாட்டாத மனிதனுக்கு வேறு வழியில் தேவைப் பொருட்களைப் பெற உடல் வலிவோ சந்தர்ப்ப துணையோ கிடைக்காத போது அவன் மற்றவரிடம் கெஞ்சிக் கேட்டு, பொருள் பெற்று வாழ்கிறான். இந்தச் செயலைப் பிச்சை என்று சொல்லுகிறோம்.

கடன்.

ஒழுக்கத்தில் நிலைத்த மனிதன் பிற்காலத்தில் திருப்பித் தருவதாக வாக்களித்து, தன் எதிர்கால உழைப்பை அடகு வைத்து, உரிமை ஒழுக்க ஆடிப்படையில், பிறரிடமிருந்து பொருள் பெற்று அனுபவிக்கும் முறையைக் கடன் என அழைக்கிறோம்.

சமூகத்தில் பொருாளாதர ஏற்றத்தாழ்வு என்னும் புயலில் சிக்குண்டு, வாங்கிய கடனை முறைப்படித் திருப்பிக் கொடுக்க முடியாமல் பல சந்தர்ப்பங்களில் மனிதர்கள் படும் துன்பதை விவரிக்க முடியாது.

இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ற ஒரு நீடித்த வியாதியானது சமுதாயத்தில் தொடர்ந்து வருகிறது.

வாழ்க்கையைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட எல்லோர் மூளையிலும் புண்களை ஏற்படுத்தி, மனித இனத்தையே அது வாட்டி வதைக்கும் நிலைமை மாறி, ஒவ்வொரு மனிதனும் அமைதியோடு உழைத்து, உண்டு அறிவின் தெளிவோடு வாழும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இத்தகைய ஆராய்ச்சியின் மூலம் கடன், கொள்ளை. பிச்சை என்ற முப் பிரிவுகளும் வறுமை என்பதிலிருந்து தோன்றுகின்றன என்று திட்டமாகத் தெரிந்து கொள்ளுகிறோம்.

இந்த வறுமை என்ற கொடிய பயங்கர நோயானது மனித இனத்தில் சமுதாயத் தொடர்பாகவே நீடித்தும் பல்வேறு வழிகளில் மனிதர்களின் வாழ்வில் சிக்கல்கள் மற்றும் துன்பங்களை விளைவித்துக் கொண்டேயும் இருக்கிறது.

மனிதனின் தேவைகளையும், உழைப்பையும் சமுதாயப் பொதுவில் கூட்டுறவு முறையில் ஒன்று கூட்டிப் பொருள் பெருக்கிப் பயன்

விளைக்கும் ஒருயர்ந்த, சிறந்த நிர்வாக முறையை வகுத்து. அமுல் நடத்தி அதன் மூலம் வறமையைப் போக்காத வரையில் – கடன், கொள்ளை. பிச்சை என்ற மூன்று பயங்கரமான செயல்களில் மனிதன் ஈடுபடாமல்அவனைப் பாதுகாக்கும் பொறுப்பை, அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளாத வரையில், தனி மனிதன் வாழ்விலும், உலக சமுதாய வாழ்விலும் சமாதானம் நிலவ முடியாது.

பொருளாதரச் சீர்கேடு அதாவது பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ற ஒன்று மட்டும் நீங்கி விட்டால் மக்கள் வாழ்வில் ஒழுக்கம், அறிவுடைமை, அன்பு, அமைதி, சமத்துவம், சமாதானம், அனைத்தும் ஏற்படும், நீடிக்கும் அவை நிலைத்துமிருக்கும்.

தண்டனை மட்டும் போதாது

சமுதாயத்திற்கு கஷ்டமும் நஷ்டமும் விளைவிக்கின்ற பல கொடுஞ் செயல்கள் பிறக்குமிடம் வறுமையேயாகும்.

திருடக் கூடாதென்ற ஒரு உயர்ந்த ஒழுக்கத்தைக் கற்பிக்கும் சமுதாயம் திருடினால் தண்டனை விதக்க நீதி மன்றங்களைத் தோன்றுவித்துக் கொண்ட சமுதாயம் – திருட்டுக்குக் காரணமான வறுமையைப் போக்கப் பல வழிகளிலும் முயற்சி எடுக்கத்தான் வேண்டும்.

திருட்டுக்குக் காரணமான வறுமையைப் போக்க முயலாமல், திருடினால் திருடனைத் தண்டிக்கும் ஒரு அரசியலானது குறைபாடு உடையதேயாகும்.

திருடுவது தனி மனிதனின் குற்றமென்றால், அதன் காரணத்தைப் போக்காமல் அதை நீடிக்க விட்டிருப்பது சமுதாயத்தின் குற்றமல்லவா?

பகுதி 11

வேதாத்திரி மகரிஷியின் வறுமை

6. வேதாத்திரி மகரிஷியின் புத்தக் கேள்விகள்
7. மகரிஷியின் கல்வியை ஓரங்கட்டிய வறுமை
8. தனது பெற்றோர் வறுமையை உணர்ந்த மகரிஷி
9. வறுமையிலிருந்து விடுபட ஆங்கிலம் கற்றல்
10.பிறர் வறுமையை தன் வறுமை போன்றது.

11.தொழிலாளர்களின் வறுமையை போக்கியது.

6. வேதாத்திரி மகரிஷியின் புத்தக் கேள்விகள்.

மகான்கள் வாழ்க்கையில் சிறுவயதிலேயே தேடல்கள் நிறைந்திருக்கும்.

புத்தர் கேட்ட கேள்விகளில் “வறுமை ஏன் வருகிறது” என்ற கேள்வியில் சில மனிதர்கள் நன்றாக உண்டு வாழ, பல மனிதர்கள் வறுமையினால் பட்டினி கிடந்து துன்பம் அனுபவிக்கிறார்கள் என்றால்,

இந்தக் குறைபாட்டுக்கு யார் பொறுப்பு?

சமூக அமைப்பும், நிர்வாகமும் அல்லவா இதற்குக் காரணம்?

என்ற உண்மை வினா அல்லவா இங்கு எழுகிறது!.

எந்த விதமான செயல் முறைகளால் மனிதர்களிடையே பலவிதமான நிலவிவருகின்ற பேதங்களை ஒழித்து, பொருளாதார ஏற்றத்த தாழ்வைச் சமப்படுத்தி, எல்லா மக்களும் சமத்துவமாகவும், சமாதானமாகும் வாழச் செய்ய முடியும்?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமானால், சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம், ஆன்மீகம் என்ற ஐவகை வாழ்க்கைத் துறைகளையும் நன்கறிந்த ஓர் அறிஞனால் அல்லவோ முடியும்?

ஆகவே புத்தர் வாழ்ந்த ஊரில் சுற்றுப்புறத்தில், எவர் மூலமும் அவருக்குத் தகுந்த பதில் கிடைக்கவில்லை.

அவராலும் சுய ஆராய்ச்சியினால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக அவர் அறிவில் அமைதி ஏற்படவில்லை.

அன்று சிறுவன் சித்தார்த்தனிடம் நான்கு கேள்விகள் எழுந்தன. இன்று வேதாத்திரியிடமும் நான்கு வினாக்கள் எழுந்தன. மகரிஷியே கூறுகிறார்.

எனக்கு இளம் வயதில் ஏற்பட்ட ஐயங்கள் மூன்று. அவை: முதலாவது, தெய்வத்தைப் பற்றியது. கடவுள் யார்? எங்கே, எப்படி உள்ளார்? அவரைக் காண்பது எப்படி?

இரண்டாவது ஐயம், உயிரைப் பற்றியது. உயிர் என்பது என்ன? எங்கிருந்து எப்படி வந்தது? பிறப்பிற்கு முன்னும் இறப்பிற்குப் பின்னும் உயிரின் நிலை என்ன?

மூன்றாவது, வறுமையைப் பற்றியது. அது இயற்கையா? செயற்கையா? அதனைப் போக்க முடியுமா? அப்படியானால் எவ்விதம்?

பாலகன் மகரிஷியின் மனதில் எழுந்த ஐயங்கள் நான்குதான். ஆனால் அந்த ஐயங்கள் எழுப்பின வினாக்கள் பல.

இம்மூன்று வினாக்களுக்கும், எனது வயது முப்பத்து ஐந்துக்குள் தெளிவான விளக்கங்களைக் கண்டு விட்டேன்.

வறுமை

- மனித வாழ்வுக்கு உணவு, உடை, வீடு இவை மூன்றும்தான் முதன்மையான தேவைப் பொருட்கள், இவையாவும் மனித உழைப்பினாலேயே. இயற்கை யமைப்பைக் கொண்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை தேவைக்கு ஏற்ற அளவு கிடைக்கவில்லையானால், அதைத்தான் வறுமை என்றும், ஏழ்மை நிலை என்றும் கூறப்படுகிறது.

உலகில் வறுமை ஏன் ஏற்படுகிறது. அது தவிர்க்க முடியாததா? எல்லாரும் எல்லாம் பெறும் வண்ணம் இயற்கையமைப்பு இல்லையா? இது குறித்து வேதாத்திரி மகரிஷி என்ன எடுத்துரைக்கிறார்.

- இயற்கையை நோக்கி நாம் ஆராய்ந்து பார்த்தால், எந்த ஜீவனாலும், அது பிறக்கும் முன்னமேயே அதன் வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் இருப்பு வைத்து, எடுத்துக்காட்டி வாழ வைப்பதுதான் இயற்கையின் கருணை. எனவே. மனித குலத்தில் ஏழ்மை என்பது இருக்கவே கூடாது. அப்படி இருக்கிறது என்றால். அதற்குக் காரணம் மனித சமுதாயத்தில் நிர்வாகத் துறையில் ஒழுக்கப் பழக்கங்களில் உள்ள குறைபாடுகளே ஆகும்.

சரி வறுமையைப் எப்படி போக்குவது?

இயற்கை ஒழுங்கமைப்பையும், உழைப்பின் பெருமையையும் உணராதோர், கடமை பிறழ்வதே வறுமையாக மலர்கின்றது.

1. தெய்வநிலை, உயர்நிலை, அறிவு உழைப்பு இரண்டின் மதிப்பு, இவற்றை உணாந்து மனிதன் வாழ்ந்தால், மகிழ்ச்சியோடும் அமைதியோடும் எல்லோரும் வாழலாம்.

2. சிலர் உணர்ந்து கடமை செய்தும், பலர் உணராமல் கடமை பிறழ்ந்தும் வாழ்வதே, உலகில் உள்ள வறுமைக்கும் துன்பங்கள் அனைத்துக்கும் காரணம்.

என்றெல்லாம் குறிப்பிட்டு வறுமையைப் போக்க வழிகளையும் குறிப்பிடுகின்றார்.

“பண்டங்கள் உடல் வெப்பதட்பம் காக்க
  பசிதீர்க்க அவசியமே மனிதர்கட்கு
பண்டங்கள் இல்லாமை வறுமை மேலும்
  பலபண்டம் அனுபவித்தும்; பழக்கத் தாலே
பண்டங்கள் தேவை மிகுந்ததனால் பாரில்
  பலர் வறுமைக் குள்ளானார் அறிவின் தாழ்வால்
பண்டங்கள் தமை அளவுமுறை யில்லாமல்
  பதுக்குவதால் வேறு வறுமை கண்டோம்.” (ஞாக.பா.178)

என்கின்றார். மனிதன் இயற்கை வளத்தைத் தனது உழைப்பையும், அறிவுத் திறனையும் கொண்டு உருமாற்றி இன்புற்று வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

வறுமைக்கு அவரது வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையே அவர் தம்முடைய பல நூல்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

7.மகரிஷியின் கல்வியை ஓரங்கட்டிய வறுமை

தாமஸ் ஆல்வாய் எடிசன், சிறு வயதில் ஸ்கார்லட் காய்ச்சலில் கஷ்டப்பட்டுத் தாமதமாக, எட்டரை வயதில்தான் போர்ட் ஹூரன் பள்ளிக்குச் சென்றார்.

மூன்று மாதங்களுக்குப் பின் ஒரு நாள் 'மூளைக் கோளாறு உள்ளவன் ' என்று ஆசிரியர் திட்டியதால் அவரது பள்ளிப் படிப்பு முடிந்தது!

எனவே, அவரின் தாயார் பள்ளியிலிருந்து தாமசை விலக்கிவிட்டுத் தானே அவருக்கு பாடங்கள் சொல்லிக் கொடுத்தார்.

பள்ளிக்கூட ஆசிரியரான தாயிடம் மூன்று ஆண்டுகள் வீட்டிலேயே, எடிசன் கல்வி கற்றார். படித்தல் எழுதுதல் மற்றும் எண்கணிதப் பயிற்சியோடு பைபிளையும், பழங்கதைகளைப் படிக்குமாறு தாமசின் தந்தை சாமுவேல் ஊக்கப்படுத்தினார்.

ஒவ்வொரு கதையை முடிக்கும் போதும் பத்து செண்ட்டுகளை அளிப்பதன் மூலம், விரைவில் தாமசு பல நூல்களைக் கற்றுத்

தேர்ந்தார். கவிதைகளைப் படிப்பதிலும் பாடுவதிலும் அவருக்கு விருப்பம் அதிகமாயிருந்தது.

நூலகத்திற்குச் சென்று அவருக்குத் தேவையான குறிப்புதவி நூலை அவரே எடுக்கக் கற்றுக்கொண்டபோது அவருக்கு வயது 11.



(தாமஸ் ஆல்வாய் எடிசன்)

தனது ஏழாவது வயது முதல் சூழ்நிலைச் சாதனங்களின் மேல் எடிசனுக்கு ஆர்வம் மிகுந்தது.

ஒன்பது வயதில் ரிச்சர்டு பார்க்கர் (Richard Parker) எழுதிய 'இயற்கைச் சோதனைத் தத்துவம் ' (Natural & Experimental Philosophy) என்ற நூலைப் படித்து முடித்தார்.

பதிமூன்றாம் வயதில் தாமஸ் பைன் [Thomas Paine] எழுதிய ஆக்க நூல்களையும், ஐசக் நியூட்டன் இயற்றிய 'கோட்பாடு ' என்னும் நூலையும் ஆழ்ந்து படித்தார்.

தனது 21 ஆம் வயதில், மைக்கேல் பாரடேயின் செய்தித்தாளில் இருந்த 'மின்சக்தியின் பயிற்சி ஆராய்ச்சிகள் ' பகுதியை ஒருவரி விடாது ஆழ்ந்து படித்து முடித்தார்.

இவை அவரது வாழ்க்கையில் ஒரு பெருத்த மாறுதலை உண்டாக்கியது! செய்கை முறையில், சோதனைகள் புரிந்து படைக்கும் திறனை எடிசனுக்கு அவை அடிப்படை ஆக்கின.

கணித அறிவும் அறிவியல்இயற்பாடு எதுவும் முறையாகக் கற்காத எடிசன், சோதனைகள் மூலம் மட்டிலுமே திரும்பத் திரும்ப முயன்று, பல அரிய தொழில்நுட்பக் கருவிகளைப் படைத்தார்.

எடிசனை பள்ளி ஆசிரியர் கல்விக் கூடத்திலிருந்து வீட்டிற்கு அனுப்பினார்.

வேதாத்திரி மகரிஷியை, வறுமை பள்ளிக் கூடத்திலிருந்து விட்டு அனுப்பியது. எடிசனைப் போன்றே தனது சொந்த முயற்சியால் வேதாத்திரி மகரிஷி கல்வியைக் கற்றார்.

மகரிஷி எட்டாவது வயதில் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த வேளையில் முதுமை காரணமாகப் பிறர் உதவியின்றி நெசவுத்

தொழிலைச் செய்ய முடியாத நிலையில் மகரிஷியாரின் தந்தையார் இருந்தார்.

தந்தைக்கு உதவி செய்வதற்காக, வறுமையை விரட்டுவதற்காகவும், மகரஷியார் பள்ளிப் படிப்பை இடையிலே நிறுத்தி விட்டார்.

மகரிஷி பள்ளிப் படிப்பை விட்டபின் தனது குடும்பத் தொழிலான நெசவுத் தொழிலைச் செய்து வந்ததைப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றன.

"ஐந்து வயதில் பள்ளி சென்றேன். எட்டு
ஆண்டில் மூன்றாம் வகுப்பு முடித்து விட்டேன்.
நொந்து வறமை மீறிப் பருத்திப் பஞ்சு
நூல்நெசவில் எனைப் பெற்றோர் பழக்கவைத்தார்.
இந்தத் தொழிலைச் செம்மையாகக் கற்று
ஏதோ ஓர் அளவுக்குக் கூலி பெற்றேன்
வெந்து உள்ளம் உருகி ஏழ்மை தோன்றும்
விதம் தெய்வம் உயிர் இவற்றைப் பற்றி ஆய்ந்தேன்,"

பசி வந்தவுடன் பத்தும் பறந்துவிடும். அந்த நிலையில் எவர்தான் கல்வி கற்க முடியும்.

இந்த நேரத்தில் பசியைப் போக்க, வறுமையைப் போக்க உடனடியாக செய்ய வேண்டியது – உழைத்து பசியைப் போக்க வேண்டும். இதைத்தான் வேதாத்திரியம் செய்கிறது.

தமிழகத்தில் அன்றைய முதல்வர் காமராஜர் மதிய உணவு கொடுத்து ஏழைகளின் கல்வியைக் காப்பாற்றினார்.

பின்னர் வந்த எம்.ஜி.ஆர். இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

இத்திட்டத்தை பலர் கேலி செய்தாலும், பசியினால் கல்வி கற்காகமால் இருந்த சமுதாயத்தை கல்வி கற்கச் செய்தார்.

இந்த தலைவர்களின் மானுட நேயம் வரலாற்றில் இடம் பெற்று சரித்திரம் படைத்துவிட்டதல்லவா,?

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார் – "நீதி நெறி விளக்கம்

என்பதற்கிணங்க மகரிஷி கருமமே கண்ணாக இருந்து பள்ளியில் தொடர முடியாத கல்வியை தனியாகப் படித்தார்.

கற்றவனுக்கு அடையாளம் என்ன?

ஒரு சுவையான கதை கேளுங்கள். ஒரு படிக்காத இளைஞனை நன்றாகப் படித்த பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைத்தனர். நாளாக ஆக இருவருக்கும் சரிப்பட்டு வரவில்லை.

அவளும் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ‘வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல’ இவனை குத்திக் காட்டினாள்.

இவன் ஒரு முடிவுக்கு வந்தான். நன்கு கல்வி கற்ற பின்னரே வீட்டுக்கு வருவேன் என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அந்தக் காலத்தில் காசி என்ற தலமே கற்றோர் நிறைந்த ஊர். ஆகையால் பெரிய அறிவாளிகள் எல்லாம் காசிக்குச் சென்று கற்று வருவர்.

இவனும் காசிக்குப் போனான். அங்கே ஒரு வயதான ஆசிரியரைக் கண்டான். தனது சோகக் கதையைச் சொல்லி தனக்கு கல்வி புகட்டும்படி மன்றாடினான். அவரும் இவனை சிஷ்யனாக ஏற்றார்.

நல்ல மாணவர்கள் பசி நோக்கார்

இரண்டு மூன்று ஆண்டுகள் ஓடின. நல்ல சீடனாகவே இருந்து எல்லாவற்றையும் ஆர்வத்தோடு கற்றான்.

குரு, ஒரு நாள் தனது மனைவியை அழைத்து, நாலை முதல் இவனுக்குப் பரிமாறும் உணவில் ஒரு உத்தரணி (ஸ்பூன்) அளவுக்கு வேப்ப எண்ணையைக் கலந்து பரிமாறு என்றார்.

ஆனால் அவன் அதைக் கண்டுபிடித்துவிட்டால் அந்த நாளன்றே என்னிடம் சொல்லிவிடு என்றார்.

குருவின் மனைவிக்கு ஏன் என்று புரியவில்லை. இருந்தாலும் கணவன் இட்ட கட்டளையை மீறாத பத்தினி அவள். அந்த சிஷ்யனும் முகம் கோணாது சாப்பிட்டு வந்தான்.

குருவின் மனைவிக்குக் கூட கொஞ்சம் பரிதாபம் மனதில் ஏற்பட்டது. வேப்ப எண்ணையைக் கலக்காமல் விட்டுவிடலாமா என்று எண்ணிணாள். ஆயினும் அவளுக்கு அந்தத் துணிவு வரவில்லை.

இவ்வாறு வேப்ப எண்ணை கலந்த சாப்பாடு மூன்று மாதம் பரிமாறப்பட்டது. ஒரு நாளைக்கு சிஷ்யன், குருவின் மனைவியைப் பார்த்து, "அம்மையே, உங்களுடைய சாப்பாடு எப்போதும் அமிர்தமயமாகவே இருக்கும். கடந்த சில நாட்களாகக் கொஞ்சம் வேறுபாடு தெரிகிறது.

ஏதோ வேப்பெண்ணை வாசனை அடிக்கிறது" என்றான். குருவின் மனைவியும் சமாளித்துக் கொண்டு, "அப்படியா? என்ன காரணம் என்று கண்டுபிடிக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

மெய் வருத்தம் பாரார்

ரகசியமாக கணவனிடம் விஷயத்தைச் சொன்னாள்,

உங்கள் சீடனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் வேப்பெண்ணை வாசனையைக் கண்டுபிடித்துவிட்டான்" என்றாள். குரு சிரித்துக் கொண்டே, சிஷ்யனைக் கூப்பிட்டார்.

"சிஷ்யா! நீ நல்ல மாணவன். மூன்று ஆண்டுகளாக எல்லாவற்றையும் உண்மையான ஆர்வத்தோடு பயின்றாய். நீ எல்லாவற்றையும் கற்றுமுடித்த அறிகுறிகள் தென்படுகின்றன.

நாளை காலை நீ உன் சொந்த ஊருக்குத் திரும்பலாம். உனக்கு என்னுடைய பரிபூரண ஆசீர்வாதம்" என்றார். சீடனுக்கு மிகவும் சந்தோஷம். மறுநாள் காலையில் தக்க குரு தட்சிணை கொடுத்து, நமஸ்கரித்துவிட்டுப் புறப்பட்டான்.

குருவின் மனைவி வியப்புடன் கேட்டாள், "நாதா! வேப்பெண்ணைக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு விளங்கவில்லையே!"

குரு சொன்னார், "அன்பே, நோகாது உண்பவர் கல்வியை நோற்பவர்" என்ற ஆன்றோர் வாக்கை நீ கேட்டது இல்லையா?

ஒருவனுக்கு கல்வியில் நாட்டம் உள்ளவரை வேறு எதிலும் சுவை இருக்காது. சொல்லப்போனால் சுவையே தெரியாது.

அவனுக்கு கல்வியில் முழு கவனம் இருக்கும் வரை அவனுக்கு ருசியே தெரியவில்லை. அந்த நாட்டம் குறைந்தவுடன் அவனுக்கு ருசி தெரிந்துவிட்டது.

ஆகையால்தான் அவனை ஊருக்கு அனுப்பிவைத்தேன். அவன் இனிமேல் பிழைத்துக் கொள்வான்" என்றார்.

இதைப்போன்றுதான் கல்வி கற்பதில் நாட்டம் இருந்ததால் மகரிஷி கருமமே கண்ணாக இருந்து, தனது முயற்சியால் கல்வியைக் கற்றார்.

கருமமே கண்ணாயினார்

தியாகராஜ சுவாமிகள் உஞ்சவிருத்தி வாழ்க்கை நடத்தி வந்தார். ஒரு நாள் அவர் உணவின்றி பட்டினி கிடக்க நேர்ந்தது.

அன்றிரவு அவரது வீட்டின் கதவு தட்டப்பட்டது. ராமநாமம் ஜபித்துக் கொண்டிருந்த தியாகராஜர் கதவைத் திறந்தார். வாசலில் ஒரு வயதான தம்பதியும், அவர்களின் வேலைக்காரர் ஒருவரும் வந்திருக்கக் கண்டார்.

அவர்களை முகம் மலர்ந்து வரவேற்ற தியாகராஜர், விருந்தினரை உபசரிக்கத் தம்மிடம் ஒன்றுமில்லாததை நினைத்துப் பெரிதும் வருந்தினார்.

ஆனால் அந்தத் தம்பதியரோ, எங்களிடமே உணவு சமைக்கத் தேவையான அனைத்தும் இருக்கின்றன என்று கூறி, தங்கள் வேலைக்காரனை உடனே உணவு சமைக்குமாறு பணித்தனர்.

உணவு தயாராகி சுவாமிக்கு நிவேதனம் செய்த பிறகு அனைவரும் பசியாற உண்டனர். விடியற்காலையில் விருந்தாளிகள் விடைபெற்றுக் கொண்டனர்.

அப்போது, நீ நல்ல பேரும் புகழும் அடைவாயப்பா! என்று கூறி தியாகராஜரை வயதானவர் வாழ்த்தி, அரவணைத்தார்.

அவர்கள் முன்னே செல்ல, வழியனுப்ப வாசலுக்கு வந்த தியாகராஜர், சிறிது நேரத்தில் திடுக்கிட்டார். காரணம் அங்கே யாருமே இல்லை. அங்குமிங்கும் அலைந்து தேடியும் அவர்களைக் காண இயலவில்லை.

தியாகராஜருக்கு உண்மை புலப்பட்டுவிட, ஆ! என் பசியாற அமுது படைத்துச் சென்ற அவர்கள் சாட்சாத் ஸ்ரீராமனும், சீதையும் அனுமனும் அல்லவா! அதை நான் அறியாமல் போனேனே? என்னே அவர்கள் கருணை! என்று புலம்பி மனம் உருகினார்.

தியாகராஜருக்கு ராமனே வந்தது போல், வேதாத்திரி மகரிஷிக்கு இறையாற்றல் துணைநின்று அவரது பசியையும் போக்கியது.

பிற்காலத்தில் மானுடத்திற்க ஆன்மீகக் கல்வியைக் கொடுக்க இருக்கின்ற மகானுக்கு இறைசக்தியே இன்று கல்வி கற்க துணையாக நின்றது.

8. தனது பெற்றோர் வறுமையை உணர்ந்த மகரிஷி

இளமையில் வறுமை கொடிது என்பார் ஔவையார். ஞானிகளும், சாதனையாளர்களும் வறுமையை வென்று உயர்ந்திருக்கிறார்கள்.

எடிசன், மேரிகியூரி, ரைட் சகோதர்கள், மைக்கேல் பாரடே, கலிலியோ போன்ற விஞ்ஞானிகள் வறுமையில் வாழ்ந்து – வறுமையை உழைப்பால் தகர்த்தவர்கள்.

விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் இணைத்த சமூக விஞ்ஞானி வேதாத்திரி இளமையில் பட்ட கஷ்டங்கள் நம் கண்களைக் குளமாக்குகின்றன. அவரது வறுமையைப் பற்றி அவரே கூறுகின்றார்.

பகலில் சில நாட்கள் சோறு கிடைக்கும். சில நாட்களில் கூழ்தான் கிடைக்கும். மாலையில் நிச்சயமாக அரிசிச் சோறுதான்.

எனக்குப் பத்து வயதில் ஒருநாள் பகல் 12.45 இருக்கும்.   நான் தறியில் நெசவு நெய்து கொண்டிருந்தேன்.

என் அன்னை வழக்கமாகப் பகல் 12.30 க்கு என்னைச் சாப்பிட அழைப்பார்கள். அது வரையில் என்னைக் கூப்பிடவில்லை.

நாங்கள் அப்போது ஒரு ஓலைக் குடிசையில் வாழ்ந்தோம். தறிகள் இரண்டு மேற்குப்புறம்.   நடுவே நாலடி உயரம் உள்ள சுவர். அதன் மறைவில் சமையல், சாப்பாடு எல்லாம்.

சமையல் செய்யும் இடத்தில், என் அன்னையும் தந்தையும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.   எனது அன்னை தனது முந்தானையை எடுத்துத் தனது கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் பார்த்துவிட்டேன். என்னால் பொறுக்க முடியவில்லை.   அந்த நாள் வரையில் என் அன்னை கண்கலங்கியதை நான் கண்டதே இல்லை.

தறியைவிட்டு எழுந்து துணியை எடுத்து உடுத்திக் கொண்டேன். நேராக என் அன்னை இருந்த இடத்திற்கு வந்தேன். அம்மாவைப் பார்த்தேன்.

கண்களில் நீர் பெருக “ஏனம்மா அழுகிறீர்கள், சொல்லுங்கம்மா! சொல்லுங்கம்மா! என்று அவர்கள் காலைக் கட்டிக் கொண்டு வினவினேன்.

என் அன்னை என்னை இறுக அணைத்துக் கொண்டு “செல்வமே! நாங்கள் உன்னைத் தவமாய்த் தவமிருந்து பெற்றோமடா. இன்று உன் பசிக்கு ஒரு சோடுதலைக் கூழ் கொடுக்க முடியாமல் தவிக்கும் பாவியாக இருக்கிறேனடா!” என்று கோவென்று கத்தி விட்டார்கள்.

நானும் வாய்விட்டு அழுதுவிட்டேன். என் தந்தையோ என் வலது கையைப் பிடித்து முத்தமிட்டுக் கொண்டு அழுது விட்டார்கள்.

அவர்களது இருவரது வயிறும் ஒட்டிப் போயிருந்தன. உணவு கிட்டாமல் பட்டினி கிடந்திருந்தனர். சிறிது நேரம் தான் இவ்வாறு கழிந்தது.

உடனே என்னை விடுவித்து என் தந்தையாரைப் பார்த்து “நீங்கள் சிறிதுநேரம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லிவிட்டு ஒரு தகர சோடுதலையைக் கையில் எடுத்துக் கொண்டு போனார்.

சில நிமிடங்களில் அந்தச் சோடுதலை நிரம்பிய கேழ்வரகுக் கூழோடு திரும்பி வந்தார்.

“கண்ணா! இதைச் சாப்பிடடா! இன்றைக்குச் சாயங்காலம் சீக்கரமாகச் சோறாக்கி உனக்கு சாப்பிடக் கொடுக்கிறேன்” என்றார்.

நான் அந்தக் கூழை உடனே குடிக்கவில்லை. “நீங்கள் சாப்பிடாமல் நான் சாப்பிட மாட்டேன்” என்று பிடிவாதம் செய்தேன்.

“நீங்கள் பசியோடு இருக்கும்போது நான் மட்டும் எப்படியம்மா சாப்பிடுவேன்?” என்றேன். எனக்கு ஆறுதல் கூறி ஒரு விழுங்கு வீதம் என் தந்தையும் அன்னையும் இருவரும் குடித்தார்கள்.

பின் நான் அந்தக் கூழை என் வாழ்வில் நீங்கா நினைவாக இடம்பெற்ற அந்த ஒரு சிறிய சோடுதலைக் கூழைக் குடித்தேன்.

பிறகு, அம்மா, அப்பா அருகில் உட்கார்ந்து கொண்டு ஏன் நமக்கு சாப்பாடு கிடைக்க வில்லை என்ற காரணத்தை வினவிப் பல கேள்விகள் கேட்டேன்.

எனக்கு எவ்வாறு அவர்கள் வறுமையைப் பற்றி எடுத்துச் சொல்வார்கள்! ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி சரிப் படுத்தினார்கள்.

ஆனாலும், அன்று வறுமை என்ற நிலையைப் பற்றிச் சிறிது புரிந்து கொண்டேன். இனி என் பெற்றோருக்கு வறுமை நீங்க, நான் செய்ய வேண்டியது என்னவென்று யோசித்தேன்.

அதிக அளவு நெசவு நெய்தால் கூலி அதிகம் கிடைக்கும.அதைக் கொண்டு வறுமையைப் போக்கிடலாம் என்று தெரிந்தது. அன்றுமுதல் இரவு பகலாய் நெசவுத் தொழிலில் கடினமாக உழைத்தேன்.

வறுமை என்பது இயற்கை அன்று. தன் உழைப்பின் மூலம் அவற்றை செய்கையாக்கிக் கட்டியவர் மகரிஷி.

பிறர் வறுமையை தன் வறுமையாகப் பாவித்தவர். ஒரு செருப்புத் தைப்பவருக்காக தன் இரவு உணவைத் தியாகம் செய்தவர்.

9.வறுமையிலிருந்து விடுபட ஆங்கிலம் கற்றல்

வறுமை என்பது இரண்டு வகைப்படும். பொருள் வறுமை. அறிவு வறுமை.

உலகில் பொருள் வறுமை கிடையாது. அறிவு வறுமைதான் உள்ளது. கல்வியால் பொருள் வறுமையை விரட்டி விடலாம்.

ஏழாவது வயதுமுதல் தறியில் உழைத்துக் கொண்டிருந்தார் வேதாத்திரி. வறுமையைப் போக்க முதலில் நெசவுத் தொழிலை விட்டு, வேறு வேலை பார்க்கத் திட்டமிட்டார்.

இந்த முடிவில் கூடுவாஞ்சேரியில் உள்ள பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரை அணுகி ஆங்கிலம் கற்றுக் கொடுக்க வேண்டினார்.

ஆசிரியரோ மாதம் எட்டணா சம்பளம் கேட்டார். பணம் கொடுத்து அச்சமயம் பலரும் டியூசன் படித்துக் கொண்டிருந்தனர்.

எட்டணாவுக்கு எங்கே போவது? மாதா மாதம் யார் பணம் கொடுப்பார்கள்? தந்தைக்குச் செலவுப் பளு தரக்கூடாதென நினைத்தார்.

மனம் இருந்தால் மார்க்கமுண்டு என்பார்கள். முடியும் என்றால் எல்லாம் முடியும். வேதாத்திரியின் முயற்சிக்கு பலன் கிடைத்தது.

அவருக்கு நாள் ஒன்றுக்கு தோசை சாப்பிட காலணா கொடுப்பார்கள். அதை மிச்சப்படுத்தினால் முப்பது நாளைக்கு ஏழரை அணா கிடைக்கும்.

தந்தையிடம் அரையணா வாங்கிக் கொள்ளலாம். வாத்தியார் கேட்ட சம்பளத்தை எளிதாகக் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தார்.

இதனைப் பெற்றோர்களிடம் கூறியபோது அவர்கள் சம்மதிக்கவில்லை. வேற பிள்ளகளோடு சேர்ந்து கெட்டுவிடுவானோ மகன் என்ற நினைப்பில், அவர்கள் எளிதில் அனுமதிக்கவில்லை.

பத்து தினங்கள் கழிந்து விட்டன. மூன்று அணா இருப்பு சேர்ந்துவிட்டது. காலையில் தோசையோடு தயிர் சாப்பிடுவதையும் நிறுத்தினார்.

அந்த நாட்களில் இரண்டு தம்பிடி கொடுத்தால் ஒரு பெரிய தோசை கிடைக்கும். வேதாத்திரி போன்றவர்களுக்கு சாலையில் சாப்பிட போதும்.

குழந்தைகளுக்கு ஒரு தம்பிடி தோசையே போதும். அத்துடன் கெட்டித் தயிர் ஒரு கொட்டாங்கச்சி நிறைய ஒரு தம்பிடிக்கு கிடைக்கும்.

தோசையுடன் தயிரும் சேர்ந்து சாப்பிடுவது வேதாத்திரிக்குப் பிடிக்கும். ஆங்கிலம் கற்றுக் கொண்டு வேலை பார்க்க வேண்டும் என்ற இலட்சியத்தால் காலையில் தோசையையும் தயிரையும் துறந்தார்.

“பிச்சைப் புகினும் கற்கை நன்றே” என்பார்கள். நமது வேதாத்திரியோ ஆங்கிலம் கற்க தோசையையும் தயிரையும் துறந்தார்.

காலை எழுமணிக்கு காலை உணவாகிய கேழ்வரகு கூழைச் சாப்பிடுவார். படிப்பதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

மூன்றணா சேர்த்தபின்பு அன்னையிடம் கெஞ்சினார். அவர்களுக்கும் தங்கள் மகன் படிக்க விருப்பந்தான். ஆயினும் சிறு குழப்பம்.

கிறிஸ்தவர்கள் இல்லம் சென்று இரவில் படித்தால், ஒருவேளை அவர்களிடமிருந்து தண்ணீர் வாங்கிச் சாப்பிட்டு விடுவானோ என்று சந்தேகப்பட்டார்கள்.

அந்தக் காலத்தில் சிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே அவ்வளவு வேறுபாடு இருந்தது. அப்படி எதுவும் தவறு செய்யமாட்டேன் என்று உறுதி கூறிய பின்பே இரவில் ஆங்கிலம் படிக்க அனுமதி கிடைத்தது.

இதற்காக வேதாத்திரி காலையில் 5 மணிக்கெல்லாம் தறியில் இறங்கி, விளக்கு வைக்கும்வரை நெசவு நெய்யத் தொடங்கினார். வேலையில் அளவை சரி செய்து கொண்டார்.

வேதாத்திரியின் ஆங்கிலப் புலமை சிறிது சிறிதாக வளர்ந்து ஆலமரமாக உயர்ந்தது.

ஆரம்ப காலத்தில் சென்னையை விட்டு பிற மாநிலங்களுக்கும், டில்லிக்கும் சென்றபோதும் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்தார்.

தனது விடா முயற்சியினாலும் இறையாற்றலின் கருணையாலும் ஆங்கிலப் புலமையை வளர்த்துக் கொண்டார்.

மகரிஷி பேசகிற ஆங்கில மொழிக்கு அவரே தந்த சர்டிபிகேட் “ஓட்டை இங்கிலீஷ்”. இந்த “ஓட்டை இங்கிலீஷை வைத்துக் கொண்டுதான் நான் அமெரிக்கா போனேன்” என்று அடிக்கடி சொல்வதுண்டு.

ஆனால் இன்று ஆங்கில மொழியே அதிசயப்படத் தக்க வகையில் அருமையான நூல்களை மகரிஷி எழுதினார்.

அவருக்கு வருகிற கருத்துக்களை வைத்து, எந்த ஒரு தலைப்பில் புத்தகம் எழுதினாலும் முதலில் ஆங்கிலத்தில் எழுதுவதே வழக்கமாகி விட்டது.

“Unified Force , ஐத் தொடர்ந்து “ Logical Solutionto the problems of Humanity “ , “Mind”, “genetic Centre: என்று பல ஆங்கில புத்தகங்களை எழுதினார். பின்புதான் அவற்றின் தமிழாக்கம் வந்தது.

வறுமையை கல்வியாலும், தொழிலாலும் போக்கலாம் என்பதற்கு வேதாத்திரி மகரிஷி வாழ்க்கை மானுடத்திற்கு உதாரணமாக அமைந்தது.

10. பிறர் வறுமையை தன் வறுமை போன்றது

ஒரு நாள் அலுவலகம் செல்ல பேருந்துக்காக மந்தைவெளி அஞ்சலகத்திற்கு எதிரே காத்தருந்தார் வேதாத்திரி மகரிஷி. அந்த இடத்தில் செருப்புத் தைக்கும் தொழிலாளி இருந்தான்.

எப்போதாவது, தனது செருப்பு அறுந்து விட்டால் அவனிடம் தைத்துக் கொள்வார். அன்றும் அறுந்து போன தனது செருப்பைத் தைக்க அவனிடம் கொடுத்தார். அறுந்த செருப்பை அவன் தைத்துக் கொண்டிருந்தான்.

ஏழைத் தொழிலாளியின் வயிறு ஒட்டியிருந்தது. “ஏனப்பா காலையில் நீ ஒன்றும் சாப்பிடவில்லையா? என வினவினார்.

“இல்லை” என்று பதிலளித்தான்.

“நேற்றிரவுகூட சாப்பாடு கிடையாது சாமி” என்றான்.

இந்தச் செயல் வேதாத்திரியைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது.

“ஏன் சாப்பிடவில்லை?” எனக் கேட்டார்.

“நேற்று வருவாய் இல்லை சாமி” என்றான்.

இந்த பரிதாபகரமான நிலைமை அவரது உள்ளத்தை உலுக்கியது. அவனுக்குக் கொடுக்க வேண்டியது அரையணா. ஆனால் வேதாத்திரியோ ஒரு அணா கொடுத்துவிட்டு அலுவலம் சென்றார்.

“நேற்று இரவுகூட சாப்பாடு கிடையாது சாமி” என்ற வார்த்தைகள் அவர் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பட்டினியின் கொடுமையைப் பார்க்க அவரது மனது பொறுக்கவில்லை. வாடிய பயிரைக் கண்டு தானும் வாடினான்.

வேதாத்திரியின் உயர்ந்த உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. இதுபோல எத்தனை ஏழைகள் உணவு இன்றி பட்டினி கிடப்பார்களோ? இந்த நிலை எப்படி மாறும்?

இதே நினைவடன் மாலை வீட்டிற்கு வந்தார். ஆசான் வீட்டுக்கும் செல்லவில்லை. பட்டினியின் பரிதவிப்பே அவரை வாட்டியது. ஒரு முடிவும் எடுத்தார்.

“எத்தனையோ ஏழைகள் ஒருவேளை உணவு உட்கொண்டும், சிலசமயம் அதுவும்கூட இன்றியும் பட்டினி கிடக்கும்போது தான் மட்டும் இரண்டு வேளை ஏன் சாப்பிட வேண்டும்? ஒருவேளை மட்டும் சாப்பிட்டால் போதாதா? என்று வினவி அதையே முடிவாகவும் ஏற்றார்.

அன்று இரவு உணவு உட்கொள்ளவில்லை. மறுநாள் இரவும் உண்ணவில்லை. சில நாட்களுக்கு ஒரு விரதம் எடுத்திருப்பதாக அக்காவிடம் கூறினார்.

காலையில் எழுந்தால் உடல் காற்றில் பறப்பதுபோல் இருந்தது. பல் துலக்கி சிற்றுண்டி உண்ட பின்புதான் வலிவு வந்தது. இதனைச் சரிசெய்ய கருதினார்.

மாலையில் காலணாவுக்கு வறுத்த வேர்க்கடலை வாங்கிச் சாப்பிடத் தொடங்கினார். பத்து தினங்களில் நிலைமை சரியானது, மாலையில் சாப்பாட்டு நினைப்பு வரவில்லை.

இருபத்து மூன்று வயதில் இரவு உணவை விட்டார். கடைசிவரை இதைக் கடைப்பிடித்தார். நண்பர்கள் வலியுறுத்தும் போது சிலசமயம்

சிற்றுண்டி உண்டதுண்டு. இரவில் பால் மட்டும் கடைசிவரை அருந்தினார்.

இவ்வுலகில் பல்வேறு சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும் அடிப்படையான காரணம் மனித நேயமின்மையே ஆகும்.

பொருளாதார ஏற்ற தாழ்வுகள் முதலிய சகல மனித நேயமும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. மனித நேயத்தில் சமூக உறவுகள் வலுப்படும். சமூக ஒற்றுமை சிறக்கும்.

எங்கோ இருக்கும் செருப்புத் தைக்கும் தொழிலாளி இரவு உணவு உண்பதில்லை என்பதற்காகத் தாம் இரவு உணவு உண்பதை நிறுத்திவிட்ட மகரிஷியின் செயல் மனிதநேயச் சிந்தனையை நம்மிடமும் வலியுறுத்துவதைக் காணலாம்.

11. தொழிலாளர்களின் வறுமையை போக்கியது.

முயற்சி என்பது முன்னேறத் துடிப்பவர்களின் மந்திரச் சொல். முயற்சியே வெற்றிக்கு மூலதனம்.

வியர்வை சிந்தாவிட்டால் ஆதாயம் இல்லை. தேனி இல்லையேல் தேன் இல்லை. வேலை இல்லையேல் பணம் இல்லை.

முயற்சி இல்லையேல் வெற்றியும் இல்லை. முயற்சியும் பயிற்சியும் தான் சாதாரண மனிதனை சாதனையாளனாக மாற்றுகிறது.

வாழ்க்கை என்னும் வளர்ச்சிப் பாதையில் வேதாத்திரி மேற் கொண்ட முயற்சியும் பல்துறை பயிற்சியும் குறிப்பிடத்தக்கதாகும். அவரது முயற்சிகளே அவரது முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்தது.

வாழ்க்கை என்னும் வளர்ச்சிப் பாதையில் இவர் மேற்கொண்ட முயற்சியும் பல்துறை பயிற்சியும் குறிப்பிடத்தக்கதாகும்.

வறுமையில் வாழ்ந்த மகரிஷி அவர்கள் வறுமையின் நிலைப்பாட்டை உணர்ந்து தெளிந்து, பல்வேறு பயிற்சிகளையும் தொழில்களையும் மேற்கொண்டார்.

இலக்கியப் பயிற்சி, மருத்துவப் பயிற்சி, தத்துவப் பயிற்சி, நூல் பயிற்சி, இராணுவப் பயிற்சி, நூல் கட்டுமானப் பயிற்சி போன்ற பயிற்சிகளை மேற்கொண்டு வறுமையைப் போக்கினார்.

நெசவுத்தொழில், குதிரைப் பந்தயக் கிளப்பில் வேலை, அஞ்சலக வேலை, தொழில் தறி வாடகைக்கு நெசவு, திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் வேலை, வியாபாரம், -ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தி, டியூசன் வாத்தியார் வேலை, பால்வியாபாரம், கழிவுத்தாளில் இருந்து பைல்கள் உற்பத்தி தொழில், லுங்கி வியாபாரம், துணி வியாபாரம், சாயத் தொழிற்சாலை, புத்தகம் பைண்டு செய்யும் தொழில், அரிசி வியாபாரம், பிட்டு வியாபாரம் போன்ற பல்வேறு தொழில்களை செய்த மகரிஷி “ செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து” போற்றினார்.

அதனால் அவரது வறுமையே அவரைக் கண்டு ஓடியது.

அது மட்டுமல்ல. சொந்த வீடு. தொழிற்சாலை. இரண்டு கார்கள். பல தொழிலாளர்கள் வேலை செய்யும் சாயத்தொழிற்சாலை என்று செல்வத்தின் உச்சிக்கே சென்றார் மகரிஷி.

வறுமையில் வாழ்ந்த மகரிஷி அவர்கள் வறுமையின் நிலைபபாட்டை உணர்ந்து தெளிந்து, வறுமையைப் போக்கிக் கொண்ட பின் வறுமையில்லா வாழ்வை அடைந்தார்.

தான் மட்டும் வறுமை இன்றி இன்புற்று வாழ்வதை அவர் விரும்பவில்லை. அதனால் உலக வறுமையைப் போக்கத் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர்களின் வறுமையை முதலில் போக்கும் முயற்சியில் முடுபட்டு வெற்றியும் கண்டார்.

தன்னிடம் கூலி வேலை செய்தவர்களுக்கத் தாராளமாகக் கூலி கொடுத்தார்.

இலாபத்தில் 25 சதவீதம் போனசாகக் கொடுத்தார். அதுமட்டுமின்றி நெசவாளர் மனைவி, குழந்தை பெற்றால் உடனடியாக ரூ.15 இனமாகக் கொடுத்தார்.

தாயோ, தந்தையோ இறந்து விட்டால் ரூ 25 இனமாகக் கொடுத்தார். இச்செயல் இவரின் வறுமை முகிழப்பைக் காட்டுவதாக அமைந்தது.

வறுமை என்பது இயற்கை அன்று. தன் உழைப்பின் மூலம் அவற்றை செயற்கையாக்கிக் காட்டியவர் வேதாத்திரி மகரிஷி.

வறுமையை உழைப்பால் போக்கலாம் என்பதற்கு வேதாத்திரி மகரிஷியின் வாழ்க்கை வரலாறு சான்றாக சரித்திரத்தில் பதிவாகியுள்ளது.

பகுதி 111

வறுமையின் பரிணாமங்கள்.

12. இந்தியாவில் வறுமை
13. இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள்
14. அடிகளாரின் அருள் உள்ளம்.
15. இந்தியாவில் வறுமையை ஒழிக்க முடியுமா?
16. இந்தியாவில் வறுமைக்கோடு உருவான வரலாறு.
17. திருவள்ளுவர் காட்டும் வறுமை
18. பைபிள் காட்டும் வறுமை
19. பசி வந்தால் பத்தும் பறந்து போகும்
20. வறுமையின் மூன்று கிளைகள்
21. உலக வறுமை தினம்

12. இந்தியாவில் வறுமை

உலகில் வாழும் ஏழைகளில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் வாழ்கின்றனர். இந்தியாவில் ஏழ்மை பரவலாகக் காணப்படுகின்றது.



இந்திய திட்டக் குழுவினால் பயன்படுத்திய மதிப்பீட்டு வரயறையின்படி, 2004-05 ஆண்டுகளில் 27.5% மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்;

இக்கணக்கு 1977-1978 ஆண்டுகளில் 51.3% ஆக இருந்ததிலிருந்தும், 1993-1994 ஆண்டுகளில் 36% ஆக

இருந்ததிலிருந்தும் தற்பொழுது சரிந்துள்ளது.

2005 ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் (□□□□□ □□□□) கணிப்பீட்டின்படி, இந்திய மக்கள் தொகையில் 42 சதவீதம் மக்கள் அனைத்துலக வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்.

இது 1980 ஆம் ஆண்டில் 90 சதவீதமாக இருந்தது. அனைத்துலக வறுமைக்கோட்டின் படி நகரத்தில் வாழ்வோர் நாளொன்றுக்கு 1.25 டாலருக்கும் குறைவாக ஈட்டுவதும் (ஒரு நாளைக்கு 1.25 டாலர் என்பது அதற்கு ஈடான பொருள் வாங்கு திறன் நாளொன்றுக்கு 21.6 இந்திய உருபாய்), சிற்றூர்களில் வாழ்வோர் நாளொன்றுக்கு இந்திய உருபாய் 14.3 க்கும் கீழாக ஈட்டுவதுமாகும்.

ஐக்கிய நாட்டு வளர்ச்சி திட்டப்படியான, மனிதவள மேம்பாட்டு சுட்டெண்ணின் படி (□□□), இந்தியாவின் 75.6% மக்கள் தொகையினர் ஒரு நாளைக்கு தலா □2 குறைவான வருமானத்தில் வாழ்கின்றனர்,

சிலர் 41.6% பேர் ஒரு நாளைக்கு □1 குறைவாகப் பெற்று பாகிஸ்தானின் 22.6% பேருடன் ஒப்பிடுகையில் வாழ்கின்றனர்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் விழுக்காடு, அது ரூபாய் 356.35 அல்லது ஏறக்குறைய கிராமப் புறங்களில் ஒரு மாதத்திற்கு $7.

இந்தியாவில் உயர்ந்த அளவில் இருக்கும் வறுமைக்கான காரணங்களாக சார்த்திக் கூறப்படும் காரணங்களில் அதன் பிரித்தானிய ஆட்சியின் கீழான வரலாறு, பெரும் மக்கட்தொகை மற்றும் குறைந்த கல்வியறிவு ஆகியவையாகும்.



மேலும் முக்கியமானவை இந்தியாவின் சமூக கட்டமைப்பு, இந்தியாவின் சாதியமைப்பு உட்பட, மற்றும் இந்தியாவின் சமூகத்தில் பெண்களின் பாத்திரம் ஆகியவையாகும்.

கடந்த காலத்தில் பொருளாதார வளர்ச்சி விவசாயத்தை சார்ந்திருந்தது, அதன் விடுதலைக்குப் பிறகு

மேற்கொள்ளப்பட்டப் பொருளாதார கொள்கைகள் ஊக்கங்கெடுப்பதாக இருந்தது.

1950களிலிருந்து இந்திய அரசு மற்றும் அரசு-சாராத நிறுவனங்கள் வறுமையை ஒழிக்க பல திட்டங்களை, உணவு மற்றும் இதர அவசியத் தேவைகள், கடன்கள் பெற அணுகுவது, விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் விலை ஆதரவுகள் மற்றும் கல்வி மேம்பாடு மற்றும் குடும்ப நலத் திட்டங்கள் உள்ளிட்டவற்றைத் தொடங்கினர்.

இத்தகைய வழிமுறைகள் பஞ்சத்தை ஒழிக்க, முழுமையான வறுமைக்கோட்டினை பாதியளவுக்கு மேல் குறைக்க, எழுத்தறிவின்மையை குறைக்கவும் மற்றும் ஊட்டச் சத்து குறைபாட்டினை குறைக்க உதவின.

இருப்பினும், 1990களின் நடுப்பகுதிகளிலிருந்து 30 மில்லியன் மக்கள் பசியின் வரிசைப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர் மேலும் 46% குழந்தைகள் எடை குறைவாக இருந்தனர்.

வறுமை மதிப்பீடுகள்

உலக வங்கி 456 மில்லியன் இந்தியர்கள் (மொத்த இந்திய மக்கட் தொகையில் 42% பேர்) தற்போது உலக வறுமைக் கோடான ஒரு நாளைக்கு $1.25 (வாங்கும் திறன் சமநிலை) கீழே வாழ்கின்றனர் என்று மதிப்பிடுகிறது.

இது இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு உலக ஏழைகள் வாழ்கின்றனர் என்பதன் பொருளாகும். இருப்பினும், இது கணிசமான வறுமை 1981 இன் 60 விழுக்காட்டிலிருந்து 42 விழுக்காடாக 2005 ஆம் ஆண்டு குறைந்ததை பிரதிநிதித்துவப்படுத்துகிறது,

இருப்பினும் ரூபாய் மதிப்பு அதிலிருந்து குறைந்து வந்தது, அதேப்போல அதிகாரபூர்வமான 538/356 பிரதி மாத தரமானது அதே அளவில் நிலைப் பெற்றிருந்தது.

வருமான சமமின்மை இந்தியாவில் (கினி குணகம்: 32.5 1999-2000 ஆண்டு) அதிகரித்து வருகிறது.

வேறொரு வகையில், இந்திய திட்டக் குழு அதன் சுயமான அளவு கோலாக பயன்படுத்துகிறது, மேலும் 2004-2005 ஆண்டில் 27.5% மக்கட் தொகையினர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வதாக மதிப்பிட்டது,

1977-1978 ஆண்டில் 51.3% ஆகக் குறைந்தும் 1993-1994 ஆண்டில் 36% ஆகக் குறைந்தும் இருந்தது.

இதற்கு ஆதாரமாக 61 ஆவது தேசிய மாதிரி ஆய்வு (NSS) இருந்தது மேலும் அதற்கு அளவு கோலாக மாத சராசரி நுகர்வுச் செலவு ரூபாய்க்கு கீழாக ரூபாய் 356.35 கிராமப் பகுதிகளுக்கும் மற்றும் ரூபாய் 538.60 நகரப் பகுதிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. 75% ஏழைகள் கிராமப் பகுதிகளில் உள்ளனர்,

அவர்களில் பெரும்பாலோர் தினக் கூலிகள், சுய-வேலைவாய்ப்புள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் நிலமற்றத் தொழிலாளர்கள்.

இருந்தாலும் இந்தியப் பொருளாதாரம் கடந்த இரு பத்தாண்டுகளில் நிலையாக வளர்ந்துள்ளது,

அதன் வளர்ச்சி பல்வேறு சமூக குழுக்கள், பொருளியல் குழுக்கள், புவியியல் பகுதிகள் மற்றும் கிராம மற்றும் நகரப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது சமமற்று உள்ளது.

1999 மற்றும் 2008 இடையில், வருடாந்திர வளர்ச்சி விகிதங்கள் குஜராத் (8.8%), ஹரியானா (8.7%) அல்லது டெல்லி (7.4%) ஆகியவற்றிற்கானது பீகார் (5.1%), உத்திரப் பிரதேசம் (4.4%) அல்லது மத்தியப் பிரதேசம் (3.5%) ஆகியவற்றியதை விட மிக அதிகமானது.

கிராமப்புற ஓரிசா (43%) மற்றும் கிராமப்புற பீகார் (41%) ஆகியவற்றின் வறுமை விகிதங்கள் உலகின் மிக உச்சமானவற்றில் உள்ளடங்கியது.

மூன்று வயதிற்குக் குறைவான (2007 ஆம் ஆண்டு 46%) இந்தியச் சிறாரிடையே ஊட்டச் சத்துக் குறைபாடு உலகின் இதர எந்த நாட்டை விடவும் அதிகளவில் உள்ளது.

குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் இருப்பினும், நாட்டின் 1/4 மக்கட்தொகை அரசினால்-குறிப்பிடப்பட்ட துவக்க நிலை வறுமை அளவான ஒரு நாளைக்கு ரூபாய் 12 க்கு குறைவாக ஈட்டுகின்றனர் (ஏறக்குறைய USD $0.25).

2004-2005 ஆம் ஆண்டில் 27.5%[12] இந்தியர்கள் தேசிய வறுமைக் கோட்டிற்கும் கீழே இருந்ததாக அதிகாரபூர்வ எண்ணிக்கை மதிப்பீட்டிருக்கிறது.

அரசால் நடத்தப் பெறும் அமைப்பாக்கம் செய்யப் பெறாத தொழிலகங்களின் தேசியக் குழு (NCEUS) அளித்த ஒரு 2007 ஆண்டு அறிக்கைப்படி 77% இந்தியர்கள் அல்லது 836 மில்லியன் மக்கள் ரூபாய் ஒரு நாளைக்கு 20 க்கு கீழான (ஏறக்குறைய USD $0.50 சாதாரணமாகவும்; $2 வாங்கும் திறன் சமநிலை) வருமானத்தைப் பெற்று வாழ்கின்றனர்.

2001 மக்கட் தொகை கணக்குப்படி, 35.5% இந்தியர்கள் வங்கிச் சேவைகளைப் பெற்றனர், 35.1% பேர் ஒரு வானொலி அல்லது சிறு வானொலிப்பெட்டி, 31.6% பேர் ஒருத் தொலைக்காட்சி, 9.1% பேர் ஒருத் தொலைபேசி, 43.7% பேர் ஒரு மிதிவண்டி, 11.7% பேர் ஒரு ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு மொபெட் மற்றும் 2.5% பேர் கார், ஜீப் அல்லது வேன், 34.5% பேர் இந்தச் சொத்துக்களில் எதையும் வைத்திருக்கவில்லை.

இந்திய தொலைத்தொடர்புத்துறைக்கு இணங்க 2008 ஆம் ஆண்டு டிசம்பரில் தொலைபேசி அடர்த்தி 33.23% சதவீதம் இருந்தது, மேலும் 40% வருடாந்திர வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது.

வரலாற்றுப் போக்கு

கடந்த காலத்தில் இந்திய வறுமை கோட்டிற்குக் கீழான மக்கள் தொகையின் அளவு விரிவாக ஏறியிறங்கியது,

ஆனால் ஒட்டுமொத்த போக்கு கீழ் நோக்கியேயிருந்தது. இருப்பினும், வருமான அடிப்படையிலான வறுமையில் தோராயமாக மூன்று காலகட்டத்திலான போக்கு இருந்தது.

1950 முதல் 1970-மத்தி வரை: வருமான அடிப்படையிலான வறுமைக் குறைவில் நுணுகிக் காணக்கூடிய போக்கில்லை.

1951 ஆம் ஆண்டில் 47% இந்தியாவின் கிராமப்புற மக்கள் தொகை வறுமைக் கோட்டிற்கு கீழேயிருந்தது. விகிதத் தொடர்பில் 1954-55 ஆண்டில் 64% ஆக உயர்ந்தது,

1960-61 இல் அது 45 சதவீதமாக குறைந்தது ஆனால் 1977-78 ஆண்டில் அது மீண்டும் 51 சதவீதமாக உயர்ந்தது.

1970-மத்தியிலிருந்து 1990 வரை : வருமான அடிப்படையிலான வறுமை குறிப்பிடத்தக்க வகையில் 1970 மத்தியிலிருந்து 1980களின் இறுதி வரை வீழ்ந்தது.

வீழ்ச்சி 1977-78 மற்றும் 1986-87 க்கு இடைப்பட்ட காலத்தில் குறிப்பிடத்தகுந்ததாக, கிராமப்புற வருமான அடிப்படையிலான வறுமை 51% லிருந்து 39 சதவீதமாக குறைந்தது.

அது மேலும் 34 சதவீதமாக 1989-90 இல் கீழிறங்கியது. நகர்புற வருமான அடிப்படையிலான வறுமை 1977-78 இல் 41 சதவீதமானது

1986-87 இல் 34 சதவீதமாக குறைந்தது, மேலும் அதிகமாக 1989-90 இல் 33 சதவீதமானது.

1991 க்குப் பிறகு : இந்த பொருளாதார சீர்த்திருத்தங்களுக்குப் பிந்தையக் காலம் பின்னடைவுகள் மற்றும் முன்னேற்றம் இரண்டையும் சான்றளித்தது.

கிராமப்புற வருமான அடிப்படையிலான வறுமை 1989-90 இல் 34% லிருந்து 1992 ஆம் ஆண்டு 43 சதவீதமாக அதிகரித்தது. மேலும் 1993-94 இல் 37 சதவீதமாகப் பின்னர் வீழ்ச்சியடைந்தது.

நகர்புற வருமான அடிப்படையிலான வறுமை 1989-90 இல் 33.4% லிருந்து 1992 ஆம் ஆண்டு 33.7 சதவீதமாக உயர்ந்தது, மேலும் 1993-94 இல் 32 சதவீதமாக வீழ்ந்தது.

தவிர, தேசிய மாதிரி ஆய்வுத் தரவுகள் 1994-95 லிருந்து 1998வரையிலானது குறைவான அல்லது வறுமை குறைப்பு ஏற்படவில்லை என்பதை காட்டியது,

ஆகையால், 1999-2000 வரையிலான சான்று வறுமை, குறிப்பாக கிராமப்புற வறுமை, சீர்த்திருத்தங்களுக்குப் பின்பு அதிகரித்தது.

இருப்பினும், 1999-2000 க்கான அதிகாரபூர்வ மதிப்பீடுகள் 26.1 சதவீதமாக இருந்தது, ஒரு பரபரப்பூட்டுகிற வீழ்ச்சி அதிக விவாதங்களுக்கும் அலசல்களுக்கும் வழியேற்படுத்தியது.

இது இந்தாண்டிற்கான தேசிய மாதிரி ஆய்வு ஒரு புதிய ஆய்வு வழிமுறையை மேற்கொண்டதன் காரணமானது, அது உயர் மதிப்பீட்டிலான சராசரி நுகர்வையும் அத்தோடு விநியோக மதிப்பீட்டினையும் கடந்த கால தேசிய மாதிரி ஆய்வின் ஆய்வுகளில் இருந்ததை விட அதிக சமமாக இருந்ததற்கு வழியேற்படுத்தியது.

சமீபகால தேசிய மாதிரி ஆய்வின் ஆய்வுகள் 2004-05 ஆண்டிற்கானது முழுமையாக 1999-2000 முந்தைய ஆய்வுகளுடன் ஒப்பிடத்தக்கது.

மேலும் வறுமை, கிராமங்களில் 28.3 சதவீதமாகவும், நகர்புறங்களில் 25.7 சதவீதமாகவும் மற்றும் 27.5% ஆக நாடு முழுமைக்குமானது, ஒத்த மறு ஆய்வுக் கால நுகர்வினைப் பயன்படுத்திக் காட்டுகிறது.

கலப்பு மறு ஆய்வு நுகர்வு முறையினை பயன்படுத்தியதில் ஒத்திசைவான மதிப்புக்கள் முறையே 21.8%, 21.7% மற்றும் 21.8% ஆகவிருந்தன.

ஆகையால், வறுமை 1998 ற்குப் பிறகு குறைந்தது, இருப்பினும் இப்போதும் 1989-90 மற்றும் 1999-00களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வறுமைக் குறைப்பு ஏதேனும் இருக்கிறதா எனும் விவாதம் நடைபெற்றுவருகிறது.

சமீபகால தேசிய மாதிரி ஆய்வின் ஆய்வுகள், ஆனால் முழுமையாக, 1999-2000 ஆய்வுகளோடு ஒப்பிடும் போது மதிப்பீடுகளைத் தோராயமாக கொடுக்க என வடிவமைக்கப்படுகின்றன.

இவை 1993-94 லிருந்து 2004-05 வரையிலான காலகட்டத்தில் கிராமப்புற வறுமையில் ஏற்பட்ட பெரும்பாலான வீழ்ச்சி உண்மையில் 1999-2000 த்திற்குப் பிறகானது எனக் குறிப்பிடுகின்றன.

சுருக்கமாக, தேசிய மாதிரி ஆய்வினால் பதிவு செய்யப்பட்ட அதிகாரபூர்வ வறுமை விகிதங்கள்:

ஆண்டு	**சுற்று**	**ஒத்த வறுமை விகிதம்(%)**	**கலப்பு(%)**	**ஒவ்வோர் ஆண்டின் வறுமைக் குறைப்பு(%)**	**கலப்புக் குறைப்பு(%)**
1977-78	32	51.3			
1983	38	44.5		1.3	
1987-88	43	38.9		1.2	
1993-94	50	36.0		0.5	
1999-00	55		26.9		
2004-05:	61	27.5	21.8	0.8	1.0

13. இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள்

.

நம் நாட்டில் வறுமைக்கான காரணங்களில் சாதியமைப்பும் முக்கியமாக காரணமாக இருக்கிறது.

சாதியமைப்பு

ஓர் ஒவ்வாத அளவிற்கு பெரிய ஏழைகள் பங்காக கீழ் சாதி இந்துக்கள் உள்ளனர்.

எஸ்.எம்.மைக்கேலிற்கு இணங்க, தலித்துகள் ஏழைகளிலும் வேலையற்றோர்களிலும் பெரும் பகுதியாக அமைந்துள்ளனர்.

பலர் பரந்த-இந்திய சமூக கட்டமைப்பான சாதியமைப்பு ஒரு ஏழை கீழ்-வரிசை குழுக்கள் மிக வசதியான உயர்-வரிசை குழுக்களால் சுரண்டப்படும் அமைப்பாக காண்கின்றனர்.

இந்தியாவின் பல பகுதிகளில், நிலம் உயர்-வரிசை சொத்துரிமையாளர்களான குறிப்பிட்ட மேலாதிக்க சாதிக்காரர்களால் (பிராமணர்கள்,சத்திரியர்கள்) பெருமளவு வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது,

அது பொருளாதார ரீதியாக கீழ்-வரிசை நிலமற்ற தொழிலாளர்களையும் ஏழை கைவினைஞர்களையும், அவர்களை எப்போதும் அவர்களின் கடவுளால்-கொடுக்கப்பட்ட தாழ்வு நிலைக்காக இழிவுபடுத்துகிறபடியான சடங்குகளைச் செய்ய அழுத்தம் தருகின்றனர்.

வில்லியம் ஏ. ஹாவிலாந்திற்கு இணங்க, கிராமப்புறப் பகுதிகளில் சாதீயம் பரவலாகவுள்ளது, மேலும் தொடர்ந்து தலித்துக்களை பிரித்து வைக்கிறது.

பிறர், இருப்பினும், சமூக சீர்த்திருத்தங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பலன்களில் இட ஒதுக்கீட்டை அமல் செய்வதன் மூலமான தலித்துக்களின் நிலையான எழுச்சி மற்றும் அதிகாரமளித்தலை கவனித்துள்ளனர்.

பிரிட்டிஷ் சகாப்தம்

இந்தியாவில் முன் எப்போதும் காணாத வகையில் சுபிட்சம் இஸ்லாமிய வம்சமான சிறந்த மொகலாயர்களின் ஆட்சிக் காலமிருந்தது.

1800 களில் மொகலாயர்களின் சகாப்தம் முடிவடைந்தது. “ஒரு குறிப்பிட்ட உண்மையாக தனித்து நிற்பதானது அத்தகைய இந்தியப் (காலப்)பகுதிகள் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழாக இன்றிருக்கும் நீண்ட காலமாகும் என்று ஜவகர்லால் நேரு கூறினார்.

இந்தியப் பொருளாதாரம் திட்டமிட்டும் கடுமையாகவும் (குறிப்பாக ஜவுளி மற்றும் உலோகப்-பணிகள்) காலனிய தனியார் மயமாக்கல், கட்டுப்பாடுகள், உற்பத்தி செய்யப்பட்ட அல்லது மெருகிட்ட இந்தியப் பொருட்கள் மீதான காப்பு வரிகள், வரிகள், மற்றும் நேரடி கைப்பற்றுதல்கள் மூலமாக தொழில் மயமாக்கலற்றதாக்கப்பட்டது, என்பது மொழியியல் அறிஞர் மற்றும் விமர்சகர் நோம் சோம்ஸ்கியினால் குறிக்கப்பெற்றதாக உள்ளது.

இருப்பினும், பொருளாதார நிபுணர் ஆங்குஸ் மாடிசன், கூற்றிற்கிணங்க அத்தகைய விளக்கம் தேவை மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றிலான மாறும் பங்குகளை புறக்கணிக்கிறது.

1830 ஆம் ஆண்டு, இந்தியா பிரிட்டனின் 9.5 சதவீதமான தொழில்துறை உற்பத்திக்கெதிராக 17.6% தினைக் கணக்கிட்டிருந்தது,

ஆனால் 1900 ஆம் ஆண்டு இந்தியாவின் பங்கு பிரிட்டனின் 18.5% ற்கு எதிராக 1.7% ஆகக் கீழிலிருந்தது. (தொழில்துறை தனி நபர் உற்பத்தியின் மாற்றம் இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சியினாலும் கூட அதிக தீவிரமானதாக இருக்கலாம்).

இது ஐரோப்பா - குறிப்பாக பிரிட்டன் - உலகின் மீதப்பகுதிகளை விட முன்பே தொழில்மயமாக்கப்பட்டதின் காரணமாகக் கூட இருக்கலாம்.

இப்பார்வை கூறுவதானது இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கைகள் கால நிலைகளை மோசமாக்கி பேரளவு பஞ்சத்திற்கு வழியேற்படுத்தியது,

இரண்டையும் சேர்க்கும் போது, இந்திய காலனிகளில் பட்டினியால் 30-60 மில்லியன் இறப்பிற்கு வழிவிட்டது.

சமூக தானிய வங்கிகள் கட்டாயப்படுத்தி கலைக்கப்பட்டன, நிலம் உள்ளூர் நுகர்வுகளுக்கான உணவுப் பயிர்களிலிருந்து பருத்தி, ஓவியம், தேயிலை மற்றும் தானிய ஏற்றுமதி பெரும்பாலும் விலங்குகளின் உணவிற்காக மாற்றப்பட்டன.

ஆங்குஸ் மாடிசன் கூற்றுப்படி, “அவர்கள் வீணான போர் சமூக அரசமைப்பை அதிகாரவர்க்க-இராணுவ நிறுவனமாக மாற்றினர், இது கவனமாக வடிவமைக்கப்பட்டது பயன்முறைக் கோட்பாட்டாளர்களால், சட்டம் ஒழுங்கை பராமரிக்க மிகுந்த திறமையுடனிருந்தது.

இருப்பினும், நுகர்வு முறை மாறியது புதிய உயர் வர்க்கம் அந்தப்புரங்களையும் அரண்மனைகளையும், சிறப்பான மஸ்லின் துணிகளையும் தங்கத்தாலும் வெள்ளியாலும் உட்புறம் கொண்ட வாட்களையும் வைத்திருக்கவில்லை.

இது சில வலியுடைய மறு அனுசரிப்புக்களுக்கு மரபான கைத்தறித் துறையில் காரணாமாக்கியது. ஓரளவிற்கு பயன்தரத்தக்க முதலீடுகள் முகலாய இந்தியாவில் கிட்டத்தட்ட பூஜ்யமாக இருந்தவை உயர்ந்ததாக காணப்பட்டன:

அரசு தானும் கூட பயன் தரத்தக்க முதலீடுகளை இரயில்வேக்கள் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றில் செய்தது அதன் விளைவாக

வளர்ச்சி இரண்டிலும் விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்திகளில் இருந்தது."

இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகள்

இந்தியாவின் ஏழ்மையான பீகார் மாநிலத்தில் ஒரு கிராமப்புறத் தொழிலாளி மாட்டுச் சாணத்தை, காயவைக்கிறார்.

$1,818; $3,259; $13,317; and $15,720.[25] (எண்கள் 1990 சர்வதேச மாடிசன் டாலர்களில்) வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இந்தியாவின் சராசரி வருமானம் 1947 ஆம் ஆண்டு தென் கொரியாவை விட மிக வேறுபட்டிருக்கவில்லை,

ஆனால் தென் கொரியா 2000 களில் வளர்ந்த நாடாக உருவானது. அதே சமயத்தில், இந்தியா உலகின் மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக விடப்பட்டது.

இந்து வளர்ச்சி விகிதம் இந்திய பொருளாதாரத்தில் குறைவான வருடாந்திர வளர்ச்சி விகிதங்களை குறிக்க பயன்படுத்தப்படும் சொற்றொடராகும்.

அது 1950களிலிருந்து 1980கள் வரை 3.5% தேங்கி நின்றது, அதே சமயம் தனி நபர் வருமானம் சராசரியாக 1.3% யாக இருந்தது.

அதே சமயம், பாகிஸ்தான் 8%, இந்தோனேஷியா 9%, தாய்லாந்து 9%, தென் கொரியா 10% மற்றும் தைவான் 12 சதவீதமாக வளர்ந்தன. இந்த வரையறை இந்தியப் பொருளாதார நிபுணர் ராஜ் குமார் கிருஷ்ணாவால் கோர்க்கப்பட்டது.

லைசென்ஸ் ராஜ்விரிவான இந்தியாவில் 1947 முதல் மற்றும் 1990 களுக்கு இடையிலான காலத்தில் தொழில் துவங்க மற்றும் நடத்தத் தேவையான லைசென்ஸ்களைக், கட்டுப்பாடுகள் மற்றும் உடன் சார்ந்த சிவப்பு நாடாமுறையைக் குறிக்கிறது.

லைசென்ஸ் ராஜ் இந்தியாவின் திட்டமிட்டப் பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்கும் முடிவின் விளைவாகும்.

பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களும் அரசால் கட்டுப்படுத்தப்பட்டன மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கே லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டன. ஊழல் இந்த முறையின் கீழ் செழித்தது.

The labyrinthine bureaucracy often led to absurd restrictions - up to 80 agencies had to be satisfied before a firm could be granted a licence to produce and the state would decide what was produced, how much, at what price and what sources of capital were used. —*BBC*

இந்தியா 1950களில் இவற்றுடன் துவங்கியது:

- உயர் வளர்ச்சி விகிதங்கள்
- வணிகம் மற்றும் முதலீடுகளில் திறந்தமுறை
- ஒரு மேம்பாட்டு அணுகுமுறை அரசு
- சமூகச் செலவு விழிப்புணர்வு
- பேரளவு பொருளாதார நிலைப்புத் தன்மை

ஆனால் நாம் 1980களில் முடிவாகப் பெற்றது

- குறை வளர்ச்சி விகிதங்கள் (இந்து வளர்ச்சி விகிதம்)
- தொழிலுக்கும் முதலீட்டிற்கும் முடித்தல்
- ஒரு லைசென்ஸ்-பாரபட்ச, கட்டுப்பாடான அரசு (லைசென்ஸ் ராஜ்)
- சமூக செலவுகளை தாங்கி நிற்கும் இயலாமை
- பேரளவு பொருளாதாரத்தில் நிலையற்றத்தன்மை, உண்மையில் சிக்கல்

வறுமை 1980களில் சீர்த்திருத்தங்கள் துவங்கியதிலிருந்து குறிப்பிடத்தகுந்தளவில் குறைந்துள்ளன.

அதோடு:

- விவசாயத்தின் மீதான அதிகச் சார்பு. விவசாயத்தில் உபரி தொழிலாளர் உள்ளனர். விவசாயிகள் ஒரு பெரிய வாக்கு வங்கி மற்றும் அவர்களின் வாக்கை நிலத்தினை தொழில் திட்டங்களுக்கு மறுபங்கீடாக உயர்-வருமானத் தொழில் திட்டங்களுக்கு எதிர்க்க பயன்படுத்துகின்றனர். அதே சமயத்தில் சேவைகள் மற்றும் தொழில் ஆகியவை இரு இலக்க எண்களாக வளர்ந்துள்ளன, விவசாய வளர்ச்சி விகிதம் 4.8% லிருந்து 2 சதவீதமாக வீழ்ந்தது. மக்கள் தொகையில் சுமார் 60% விவசாயத்தை சார்ந்துள்ளனர், அப்படியே தேசிய உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு சுமார் 18 சதவீதமாக உள்ளது.
- உயர்ந்த மக்கள் தொகை வளர்ச்சி விகிதம், இருப்பினும் மக்கள் தொகை புள்ளி விவர ஆய்வாளர்கள் பொதுவாக இதனை வறுமையின் காரணம் என்பதை விட அறிகுறி என்று ஒப்புக்கொள்கின்றனர்.

இது தவிர, இந்தியா தற்போது 40 மில்லியன் மக்களை அதன் நடுத்தர வர்க்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் சேர்த்துக் கொள்கிறது.

ஸபோர்காஸ்டிங் இண்டெர்நேஷனல்” நிறுவுனரான மார்வின் ஜே.செட்ரான் போன்ற பகுத்தாய்வு வல்லுநர்கள் மத்திய தர வர்க்கத்தில் தற்போது 300 மில்லியன் இந்தியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என எழுதுகிறார்;

அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வறுமையிலிருந்து கடந்த பத்து வருடங்களில் உருவாகியுள்ளனர். தற்போதைய வளர்ச்சி விகிதத்தில், பெரும்பான்மை இந்தியர்கள் 2025 ஆம் ஆண்டு நடுத்தர வர்க்கத்தினராக இருப்பர்.

அதே காலகட்டத்தில் கல்வியறிவு விகிதங்கள் 52 விழுக்காட்டிலிருந்து 65 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

புதிய தாராளவாதக் கொள்கைகள் மற்றும் அவற்றின் விளைவுகள்

பிற பார்வை நோக்குகள் 1990களின் துவக்கத்தில் முனைப்பாக்கப்பட்ட பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் தற்போதைய நிகழ்வான கிராமப்புற பொருளாதார சிதைவுக்கும் விவசாய சிக்கல்களுக்குப் பொறுப்பாகும் என்று கருதுகின்றன.

இதழியலாளர் மற்றும் கிராமப்புற விவகாரங்களுக்கான த இந்து தினசரிக்கான ஆசிரியர், பி சாய்நாத் அவரது இந்திய கிராமப்புற பொருளாதாரம் பற்றியக் கட்டுரைகளில் விவரிப்பதானது, வியக்கத்தக்க அளவில் சமமின்மை நிலை உயர்ந்துள்ளது,

அதே சமயத்தில், பத்தாண்டுகளில் இந்தியாவின் பசி அதன் உச்ச அளவை அடைந்துள்ளது. அவர் கூடவும் குறிப்பிடுவதானது இந்தியா முழுமைக்குமான கிராம பொருளாதாரங்கள் சிதைந்துள்ளன, அல்லது சிதையும் முனையில் உள்ளன,

இது 1990களிலிருந்து இந்திய அரசின் புதிய தாராளவாத கொள்கைகள் காரணமானது என்பதே.

“தாரளமயமாக்கலின்” மனித விலை மிக அதிகமாகவுள்ளது. 1997 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலான இந்திய கிராமப்புற மக்கள் தொகையினரின் பெரும் அலையிலான விவசாயத் தற்கொலைகள் மொத்தம் 200,000 க்கு அருகேயுள்ளது என அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.[1]

அந்த எண்ணிக்கை விவாதத்திற்குட்பட்டு நிலைத்துள்ளது, சிலர் உண்மையான எண்ணிக்கை மிக அதிகமாகவுள்ளது எனக் கூறுகின்றனர்.

விமர்சகர்கள் அரசினால் தூண்டப்பட்ட கொள்கைகளில் பழுது கண்டதானது, சாய்நாத் கூற்றுப்படி, கடன் வலையில் கிராமப்புற குடும்பங்கள் விழுவதை மிக அதிகளவிலான எண்ணிக்கையில் அதன் பயனாய் ஏற்படுத்தி, மிக அதிகமான விவசாய தற்கொலைகளை விளைவித்தது.

பேராசிரியர் உட்சா பட்நாயக், இந்தியாவின் உச்ச விவசாய பொருளாதார நிபுணர் கூறியது போன்று, 2007 ஆம் ஆண்டின் சராசரி ஏழ்மைக் குடும்பம், அது 1997 ஆம் ஆண்டு செய்ததை விட வருடத்திற்கு சுமார் 100 கிலோகிராமிற்கு குறைவான உணவை, உட்கொண்டது.

அரசுக் கொள்கைகள் விவசாயிகளை மரபு ரீதியான உணவுப் பயிர்களினிடத்தில், பணப் பயிர்களுக்கு மாறுவதை ஊக்குவித்ததானது, விவசாய இடுபொருட்களின் விலையில் மிக அதிகமான ஏற்றத்தை விளைவித்தது, அதேப்போல சந்தை சக்திகள் பணப் பயிர்களின் விலையை நிர்ணயித்தன.

சாய்நாத் சுட்டிக் காட்டுவது, அளவுக்கு மீறிய பெரிய எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்ட விவசாய தற்கொலைகள் பணப் பயிர்களுடன் நேரிட்டது,

ஏனெனில் உணவுப் பயிர்களான அரிசியின் விலை குறைந்தாலும், வாழ்வதற்கு மீதம் உணவு அங்கிருக்கும். அவர் மேலும் சுட்டிக் காட்டுவது சமமின்மை.

இந்தியா எப்போதும் கண்டிராத வகையிலான உயர் விகிதங்களை அடைந்தது.

சேடான் ஆஹ்யா செயல் இயக்குநர் மார்கன் ஸ்டான்லியின் கட்டுரை ஒன்றில் சுட்டிக் காட்டப்படுவது, 2003-2007 காலக் கட்டத்தில் 1 டிரில்லியன் டாலருக்கு நெருங்கிய செல்வ வளர்ச்சி இந்திய பங்குச் சந்தைகளில் இருந்தது, அதே சமயம் 4-7% மட்டுமான இந்திய மக்கட் தொகையே எவ்விதமான பங்கையும் கொண்டிருந்தது.

விவசாயத்தில் பொது முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% க்கு சுருங்கியப் போதான சமயத்தில், பத்தாண்டுகளில் தேசம் மோசமான விவசாய சிக்கலால் பாதிக்கப்பட்டது.

அதே சமயம் இந்தியா இரண்டாவது அதிகமான எண்ணிக்கையில் டாலர் பில்லியனர்களைக் கொண்டதாக உண்டானது.சாய்நாத் வாதிடுவதானது,

விவசாய வருமானங்கள் திடீர் வீழ்ச்சியுற்றன. பசி மிக வேகமாக அதிகரித்தது. வெகு முன்னரே விவசாயத்தில் பொது முதலீடு ஒன்றுமில்லாத அளவிற்குச் சுருங்கியது.

வேலை வாய்ப்புகள் திடீரென வீழ்ந்தன. விவசாயமல்லாத வேலை வாய்ப்புகள் தேங்கி நின்றன. (சமீப காலங்களில் தேசிய ஊரக வேலை வாய்ப்புச் சட்டம் மட்டுமே சில நிவாரணங்களைக் கொண்டு வந்துள்ளது.)

மில்லியன் கணக்கான மக்கள் நகரங்கள் மற்றும் மாநகரங்களை நோக்கி நகர்கின்றனர், அங்கும் கூட, சில வேலைகள் மட்டுமே காணப்படுகின்றன.

ஒரு மதிப்பீட்டின் படி, 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட கிராமக் குடும்பங்கள், ஒன்று நிலமற்றவர், விளிம்பிற்கு கீழே, விளிம்பு நிலை அல்லது சிறு விவசாயிகளாக உள்ளனர்.

15 வருடங்களில் நிலைமையை சிறப்பாக மாற்றும்படி ஒன்றும் நடை பெறவில்லை. அதனை நிறைய மோசமானதாக்க அதிகம் நடந்துள்ளது.

அவர்களது வாழ்வை முடித்துக் கொண்டவர்கள் ஆழமான கடனிலிருந்தனர் - கடனிலிருந்த உழவர் குடும்பங்களின் எண்ணிக்கை தாராளவாத “பொருளாதார சீர்திருத்தங்களின் முதல் பத்தாண்டில் இரட்டிப்பாகியது, 26 சதவீத விவசாய குடும்பங்களிலிருந்து 48.6 சதவீதமாக உயர்ந்தது.

அதே சமயத்தில், இந்தியா அனைத்து சமயங்களிலும் விவசாயத்தின் மீதான முதலீடுகளைக் குறைத்துக் கொண்டேயிருந்தது (சீரான தாரளவாத நடைமுறை). சிறு விவசாயிகளுக்கு வாழ்க்கை மென்மேலும் கடினமானதாக ஆக்கப்பட்டது.

2006 வரை, அரசு விவசாயத்திற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% ற்குக் குறைவாகவும், கல்வியின் மீது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% ற்குக் குறைவாகவும் செலவிடுகிறது.

இருப்பினும், சில அரசு திட்டங்கள் மதிய உணவு திட்டம், மற்றும் NREGA போன்றவை சிறிதளவிலான வெற்றியை கிராமப்புற பொருளாதாரத்திற்கு வாழ்வளிக்கவும் மேற்கொண்டு வறுமை அதிகரிப்பதை தடுக்கவுமானதைப் பெற்றன.

வறுமை ஒழிப்பு முயற்சிகள்

1950களின் துவகத்திலிருந்து, அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி ஏழை மக்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய உதவ முயற்சித்தது, நிலைநிறுத்தியது மற்றும் மெருகிட்டது.

ஒருவேளை மிக அதிகபட்ச முக்கிய முயற்சியானது அடிப்படைப் பொருட்களை, குறிப்பாக உணவுப் பொருட்களை, நாடு முழுதும் கிடைக்கக் கூடியதாக, ஏழைகள் அவர்களின் வருமானத்தில் சுமார் 80 சதவீதத்தை உணவிற்கு செலவழிக்கின்றனர் எனும்போது, கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அளித்ததாகும்.

வறுமை ஒழிப்பிற்கான வாய்ப்புக்கள்

இந்தியாவில் வறுமை ஒழிப்பு பொதுவாக நீண்ட கால குறிக்கோளாக மட்டுமே கருதப்படுகிறது.

அடுத்த 50 வருடங்களில் கடந்த காலத்தினை விட வறுமை ஒழிப்பானது மேம்பட்ட முன்னேற்றத்தினை, இது வளர்ந்து வரும் மத்திய தர வர்க்கத்தினாலான மெதுவாக கசிந்தொழுகும் விளைவினால் (பொருளாதார பலன்கள் படிப்படியாய் பரவலாவது) உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி மீதான அதிகரித்து வரும் முக்கியத்துவம், அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு மற்றும் மகளிர் மற்றும் சமூகத்தில் பொருளாதார ரீதியில் மெலிந்த பிரிவினர்க்கு அதிகாரமளிக்கும் போக்கின் அதிகரிப்பு, போன்றவைக் கூட வறுமை ஒழிப்பிற்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து வறுமை குறைப்பு திட்டங்களும் தோல்வியடைந்து விட்டன எனக் கூறுவது தவறானது. நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சி (இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் விடுதலை அடைந்தபோது முழுமையாக இல்லாத ஒன்று) இந்தியாவில் பொருளாதார சுபிட்சம் உண்மையில் மிக மனக்கிளர்ச்சியை உண்டாக்குகிறதை குறிக்கிறது, ஆனால் செல்வு விநியோகம் சமமானதாக இல்லை.

ஒவ்வோர் ஆண்டும், தராளமயமாக்கலுக்குப் பிறகும், சோஷலிஸ மாதிரியிலிருந்து விலகியப் பிறகும், இந்தியா அதன் 60 லிருந்து 70 மில்லியன் மக்களை மத்தியதர வர்க்கத்தில் சேர்த்து வருகிறது.

பகுத்தாய்வு நிபுணர்கள், “போர்காஸ்டிங் இண்டெர்நேஷனல்” நிறுவுனர், மார்வின் ஜே. செட்ரான் போன்றவர்கள், 390 மில்லியன் இந்தியர்கள் மத்தியதர வர்க்கத்தில் சேர்ந்தவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது என எழுதுகிறார்;

அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடந்த பத்தாண்டுகளில் வறுமையிலிருந்து உருவாகியவர்கள். தற்போதைய வளர்ச்சி விகிதப்படி, பெரும்பான்மையான இந்தியர்கள் 2025 ஆம் ஆண்டு மத்தியதர வர்க்கமாக இருப்பர்.

கல்வியறிவு விகிதங்கள் 52 விழுக்காட்டிலிருந்து 65 விழுக்காடாக தராளமயமாக்கலின் துவக்க பத்தாண்டுகளின் போது உயர்ந்துள்ளது (1991-2001).

வறுமை குறைப்பின் அளவு மீதான சர்ச்சைகள்

இந்தியாவில் வறுமை பற்றிய விளக்கம் ஐக்கிய நாட்டு உலக உணவு திட்டத்தினால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அதன் உலகப் பசி அட்டவணையில், அது இந்திய அரசின் வறுமைப் பற்றிய விளக்கத்தினை கேள்விக்குட்படுத்திக் கூறியது:

உண்மையில் கலோரி இழப்பு கிராமப்புற மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்கு கீழானவர்களின் பங்கு வேகமாகக் குறைந்து வருகிறது எனக் கூறப்படும் போதான கால கட்டத்தில் உயர்ந்து வருவதானது, அதிகாரபூர்வ வறுமை மதிப்பீடுகளுக்கும் கலோரி இழப்பிற்கும் இடையிலான தொடர்பற்றதன்மை உயர்ந்து வருவதை அழுத்தமாய்க் கூறுகிறது.

அதே சமயத்தில் ஒட்டு மொத்த இந்திய வறுமை குறைந்துள்ளது; வறுமை குறைப்பு அளவு அடிக்கடி விவாதிக்கப்படுகிறது.

அதே சமயத்தில் 1993-94 மற்றும் 2004-05 ற்கும் இடையிலான வறுமை உயரவில்லை என்பதில் ஒரேமனதான முடிவு இருந்தாலும், ஒருவர் இதர பண-சமபந்தமற்ற பரிமாணங்களை கருத்திற்கொள்ளும் போது தெளிவானதாக இல்லை (உடல் நலம், கல்வி, குற்றம் மற்றும் உள்கட்டமைப்பிற்கான அணுகும் முறை போன்றவற்றில்).

இந்தியா அனுபவிக்கும் வேகமான பொருளாதார வளர்ச்சியுடன், கிராமப்புற மக்கள் தொகையினரின் குறிப்பிடத்தக்க பிரிவினர் மாநகரங்களை நோக்கி இடம்பெயர்வது தொடர்ந்து சாத்தியமாக நிகழக்கூடியது, நீண்ட காலத்தில் நகர்புற வறுமை விவகாரத்தை மேலும் குறிப்பிடத்தக்கதாக ஆக்கும்.

சிலர், இதழியலாளர் பி. சாய்நாத் போன்றோர், அதேப் போல ஒட்டு மொத்த வறுமை உயர்ந்திருக்கவில்லை என்றப் போதும், இந்தியா ஐக்கிய நாட்டு மனிதவள மேம்பாட்டு அட்டவணையில் படு பாதாளமான தகுதிநிலையிலேயே நிலைத்திருக்கிறதென்ற பார்வையை வைத்திருக்கின்றனர்.

இந்தியா 2007-08 ஐக்கிய நாட்டு மனிதவள மேம்பாட்டு அறிக்கையில் 132 இடத்தில் நிலைப்பெற்றிருக்கிறது. பத்தாண்டுகளுக்கு மேலானவற்றில் இதுவே நாட்டின் கீழான தகுதி நிலையாகும். 1992 ஆம் ஆண்டு, இந்தியா 122 வது இடத்தில் அதே அட்டவனையில் இருந்தது.

சூழ்நிலை முக்கியமாகச் சுட்டிக்காட்டும் வழிமுறைகளான ஒட்டுமொத்த நலம் அறியும் கூறுகளான ஊட்டச் சத்துக் குறைவான மக்களின் எண்ணிக்கை, (இந்தியா அதிகமான எண்ணிக்கையிலான 230 மில்லியன் ஊட்டச் சத்து குறைவான மக்களைக் கொண்டுள்ளது.

மற்றும் உலக பசி அட்டவணையில்119 பேரில் 94 வது) மேலும் ஊட்டச் சத்து குறைபாடுள்ள சிறார் (இந்தியாவின் 5 வயதிற்கு குறைவான சிறார்களில் 43%பேர் எடைக்குறைவோடு (BMI,18.5) உள்ளனர

இது உலகிலேயே அதிகமானது) 2008 வரை, போன்றவைகளால் கூட வாதிடப்படலாம்.

பொருளாதார நிபுணர் ப்ரவீண் விசாரியா இந்தியாவில் ஒட்டுமொத்த வறுமை குறைந்துள்ளதென்று எடுத்துக்காட்டிய பல புள்ளிவிவரங்களின் சட்டப்பூர்வ தன்மையை பாதுகாத்தார்,

அதேப் போல இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹாவினால் செய்யப்பட்ட பிரகடமான இந்தியாவில் வறுமை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது என்பதையும் கூட ஆதரித்தார்.

அவர் 1999-2000 ஆய்வு நன்கு வடிவமைக்கப்பட்டது மற்றும் கண்காணிக்கப்பட்டது என்று வலியுறுத்தினார்.

மேலும் அவைகள் இந்தியாவின் வறுமையைப் பற்றி முன்பு எண்ணிய கருத்தின்படி கொள்வதுடன் பொருந்துவதாக தோன்றவில்லை என்ற காரணத்தினாலேயே அவ்வாறு உணர்ந்தார், அவை ஒட்டுமொத்தமாக கருத மறுக்கப்படக் கூடாது.

நிக்கோலஸ் ஸ்டெர்ன், உலக வங்கியின் உப தலைவர், வறுமை குறைப்பு புள்ளிவிவரங்களை ஆதரித்து பதிப்புக்களை வெளியிட்டார்.

அவர் வாதிடுவதானது உயர்ந்து வரும் உலகமயமாக்கல் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் நாட்டில் வறுமை குறைப்பிற்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களித்துள்ளது என்பதே.

இந்தியா, சீனாவுடன் இணைந்து, உலகமயமாக்கலின் தெளிவானப் போக்குகளுடன் வளர்ச்சியை துரிதப்படுத்தும் தனி நபர் வருமானத்துடன் அதிகரிப்பதைக் காட்டியுள்ளன..

அரசினால் நடத்தப்படும் அமைப்பாக்கமற்ற துறையின் தேசியத் தொழில் நிறுவனங்கள் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றின்படி 77% இந்தியர்கள் அல்லது 836 மில்லியன் மக்கள் தினசரி ரூபாய் 20க்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்தனர் (சாதாரணமாக USD 0.50, வாங்கும் திறன் சமநிலை USD 2.0) பெரும்பாலோர் "முறைப்படுத்தப்படாத தொழிலாளர் துறையில் வேலை அல்லது சமூக பாதுகாப்பு இன்றி, கீழான வறுமையில் வாழ்கின்றனர்."

மெக்கின்ஸி குளோபல் இன்ஸ்டியூட்டின் ஓர் ஆய்வுப்படி 1985 ஆம் ஆண்டு கண்டறிந்தது, ஓராண்டிற்கு ரூபாய் 90,000 ற்கு கீழான குடும்ப வருமானத்தில் 93% இந்திய மக்கள் தொகை அல்லது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சுமார் ஒரு டாலரில் வாழ்ந்தது. 2005 வாக்கில் அந்த அளவு பாதி 54% ற்கு அருகே குறைக்கப்பட்டது.

103 மில்லியனுக்கும் மேலான மக்கள் ஒரு தலைமுறைக் கால முடிவில் நம்பிக்கையற்ற நிலையிலிருந்த வறுமையிலிருந்து நகர மற்றும் கிராமப்புற பகுதியிலிருந்தும் கூட வெளியே வந்தனர்.

அவர்கள் அடுத்த 20 வருடங்களில் இந்தியா 7.3% வருடாந்திர வளர்ச்சியை சாதிக்கும் எனில், 456 மில்லியனுக்கும் மேலான மக்கள் வறுமையிலிருந்து வெளியேற்றப்படுவர் என கணித்துள்ளனர்.

ஜனரஞ்சக கருத்துக்களுக்கு முரண்பாடாக, கிராமப்புற இந்தியா இந்த வளர்ச்சியிலிருந்து பலனடைந்தது: உச்சமான கிராமப்புற வறுமை 1985 ஆம் ஆண்டு 94% லிருந்து 2005 ஆம் ஆண்டு 61 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

மேலும், அவர்கள் அது 2025 ஆம் ஆண்டு 26 சதவீதமாகக் குறையும் என்று கணித்தனர். *இந்தியாவின் பொருளாதார சீர்த்திருத்தங்கள்* மற்றும் அதன் விளைவான உயர்ந்த வளர்ச்சி நாட்டின் மிக வெற்றிகரமான வறுமை எதிர்ப்பு திட்டங்கள் என்று அறிக்கை முடிவடைகிறது.

15. இந்தியாவில் வறுமையை - பசியை ஒழிக்க முடியுமா?

உலகம் முழுவதும் பசியில் வாழும் மக்களின் எண்ணிக்கை 100 கோடிக்கு மேல் இருக்குமென்று ஐக்கிய நாடுகள் சபையின் வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி அமைப்பின் (IFAD) 33வது ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தில் இக்கூட்டமைப்பின் தலைவர் கனாயோ வீன்ஸ் கூறியுள்ளார்.

மேலும் இதில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவில் வசிப்பதாகவும் (33 கோடிபேர்) குறிப்பிடப்படுகிறார்.

ஐக்கிய சபையின் செயலாளர் பான் கீ மூன் பசியால் உலகில் சுமார் 17,000 குழந்தைகள் தினமும் இறப்பதாகவும், சராசரியாக 6 விநாடிக்கு ஒரு குழந்தை இறப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

இந்தியா உலகப்பசி அட்டவணையில் 94வது இடத்தில் உள்ளதெனவும், ஐந்து வயதிற்குக் குறைவான சிறார்களில் 43 சதவீதம் பேர் எடைக்குறைவோடு உள்ளனர் எனவும், இது உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கை எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஆனால் பசி அட்டவணையில் 94வது இடத்தில் இடம் பெறக்கூடிய அளவிற்கு இந்தியாவில் உணவு உற்பத்தியில் பற்றாக்குறை நிலவுகின்றதா என்றால் இல்லையென்பது தான் உண்மை.

இந்தியாவின் மொத்த உணவு உற்பத்தி 2009-10ஆம் ஆண்டில் 218.20 மில்லியன் டன். இது 2008-09ஆம் ஆண்டில் 237.47 மில்லியன் டன்னாக இருந்துள்ளது.

அதேபோல் தென்மாநில மக்களின் பிரதான உணவாகிய அரிசி 2008-09ல் 99.18 மில்லியன் டன்னாக இருந்தது 2010-11ல் 100 மில்லியன் டன்னாக உயருமெனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பிரச்சனை எங்கே?

இந்தியாவில் வறுமையும் பசியும் தொடர்கதையாய் இருப்பதற்கு மூலக்காரணம் திட்டமிட்ட பகிர்வு இல்லாமை; பகிர்வில் குளறுபடிகள் மற்றும் பிரச்சனையின் வீரியத்தை புரிந்து கொண்டு அதைத் தீர்த்திட முன்வராததேயாகும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த இந்தியாவில் 33 கோடிப் பேர் பசியால் வாடும் நிலையில் போதுமான சேமிப்பு வசதியில்லாததால் ஆண்டிற்கு ஒரு கோடியே 69 லட்சம் டன் உணவு தானியம் வீணாவதாக இந்திய உணவுக்கழகம் தெரிவிக்கிறது.

சுதந்திரமடைந்து 63 ஆண்டுகளான பின்பும் போதுமான சேமிப்புக் கிடங்கு வசதிகளில்லை.

இந்திய உணவுக் கழகத்தால் இதுவரை 6 கோடியே 50 இலட்சம் டன் உணவு தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டாலும் இக்கழகத்தின் சேமிப்பு வசதி இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டுமே.

இதர உணவு தானியங்கள் ஆங்காங்கே திறந்தவெளிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனால் விரைவில் கெட்டுப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.

உணவின்றி ஒருபக்கம் மக்கள் வாடுகையில் உணவு பாதுகாப்பின்றி கெட்டுப்போகக் கூடிய நிலையும் உள்ளது.

இதைத்தான் உச்சநீதிமன்றம் கடுமையாக்க் கண்டித்து உணவுப்பொருள் ஏதும் வீணாகக் கூடாது உடனடியாக இதனை பசியால் வாடுவோருக்கு வழங்கிட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

அதே நேரத்தில் நீதிபதி வாத்வா கமிட்டி அறிக்கையின்படி பொது விநியோகத்திட்டத்தில் மிகப்பெரிய ஊழல் மற்றும் திருட்டுகள் நடைபெறுகின்றன.

எனவே பொது விநியோகத் திட்டத்தை முழுமையாக கணிணி மயமாக்கிடல் வேண்டுமெனவும் குறிப்பிடுகிறது.

அரசு வழங்கும் உணவுப்பொருட்களில் கால்பங்குதான் உரிய மக்களைச் சென்றடைகிறது என்றும், மோசடி திருட்டு இல்லாத வகையில் உணவு விநியோக முறையை மறுசீரமைத்திட வேண்டுமெனவும் நிதி அமைச்சரின் தலைமைப் பொருள்இயல் ஆலோசகர் Dr.கௌஷிக் பாசு குறிப்பிடுகிறார்.

உணவுப்பாதுகாப்பு மசோதா தயாரிப்புப் நிலையிலிருக்கக் கூடிய காலகட்டத்தில் பல்வேறு விசயங்களை கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவில் உணவு ஓர் பிரச்சனையல்ல. அதே நேரத்தில் பணமும் பிரச்சனையல்ல. ஆனால் யாருக்கு எவ்வளவு செலவு செய்வது என ஒதுக்கீடு செய்வதில் தான் பிரச்சனை. மூத்த பத்திரிக்கையாளர் சாய்நாத் குறிப்பிடுகிறார்,

‘இந்தியாவில் விமானத்தளம் அமைத்திட 10,000 கோடி ரூபாயும். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காக 60,000 கோடி ரூபாயும், பெரிய பெரிய நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை என்ற பெயரில் மான்யமாக 5,00,000 கோடி ரூபாயும் வழங்க முடிகிறது.

ஆனால் பொது விநியோகத்திட்டத்திற்காக 84,399 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய முடியாதா’ என கேள்வி எழுப்புகிறார்.

ஏனெனில் இந்தியா முழுவதுமுள்ள அனைவருக்கும் கிலோ ரூ.3ல் பொது விநியோகத்திட்டத்தில் உணவு வழங்கிட அதுவே

போதுமானதாகுமென பொருள் இயல் வல்லுநர்கள் பிரவின் ஜா மற்றும் N.ஆச்சார்யா ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

சுதந்திர இந்தியாவில் 1952ல் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் என துவங்கப்பட்டு முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி காலத்தில் வறுமையை ஒழிப்போம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு தனிநபர் பயனளிப்பு சார்ந்த திட்டங்கள் மூலம் வறுமையும். பசியும் குறைந்து வந்தது.

ஆனால் இன்றைக்கு புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக தனிநபர் பயனளிப்புத்திட்டங்கள் முழுவதும் ஒழிக்கப்பட்டுவிட்டதும் கூட வறுமை உயரக்காரணமானது.

அதேபோன்று இந்தியா ஓர் விவசாய நாடு. இதில் சிறுகுறு விவசாயிகளுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படாததாலும், அவர்கள் விவசாயம் பொய்த்துப்போகும் காலகட்டத்தில் விவசாயிகள் என்ற நிலையிலிருந்து விவசாயக் கூலிகள் அல்லது கட்டிட கட்டுமானக் கூலிகள் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்தியாவில் இரசாயன உரங்கள் உபயோகத்தின் காரணமாக வளமான, நிரந்தர நீர்பாசன வசதி கொண்ட ஏறத்தாழ 20 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் உற்பத்தித்திறனை இழந்துள்ளதென்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதுபோன்றே இந்திய கிராம விவசாயிகளுக்கு போதுமான சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இல்லாததால் 20 சதவீதம் முதல் 30 சதவீதமான உணவு தான்யங்களும். காய்கறிகளும் விளை நிலங்களிலிருந்து சந்தைக்கு வருவதற்கு முன்பே வீணாகிறது.

இவை தடுக்கப்பட்டால் இந்தியாவின் உணவு உற்பத்தி 250 மில்லியன் டன்னையும் தாண்டுமென ஆய்வு விவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே 50% மேல் விவசாய நிலங்களைக் கொண்ட கிராமங்களை ஒன்றிணைத்து விவசாயப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

தங்க நாற்கரச் சாலைத்திட்டத்திற்கு அளிக்கும் முக்கியத்துவம் அளித்து இக்கிராமங்களின் விவசாய நிலங்களில் முறையான சாலை வசதிகளை அளித்திடல் வேண்டும்.

இம்மண்டலத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு உற்பத்திக் கடன்கள் 4% வட்டியில் தாராளமாக வழங்கப்படல் வேண்டும்.

இம்மண்டலங்களில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து விளை பொருட்களையும் பாதுகாத்திடத் தேவையான பாதுகாப்பு கிட்டங்கிகள் உருவாக்கப்படல் வேண்டும்.

இதன் மூலம் உற்பத்தி உயர்ந்து இந்தியாவின் விவசாய வருமானம் 4%லிருந்து உயருவதற்கு வழி வகுக்கும்.

தீர்விற்கான வழி:

பொது விநியோகத்திட்டத்தை விரிவுபடுத்தி உணவுப்பொருள்கள் அனைத்தும் தங்குதடையின்றி எந்தவித கட்டுப்பாட்டின்றி வழங்குவது

ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டும் இருந்தாலும் உணவுப்பொருள் வழங்குவது

குடும்ப நபர் எண்ணிக்கைக்கு இணங்க அதன் மடங்குகளில் உணவுப்பொருள் வழங்குவது

இந்தியா விவசாயிகள் அனைவருக்கும் 4 சதவீத வட்டியில் அனைத்து செயல்களுக்கும் (விதை, அறுவடை விற்பனை) எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி வங்கிக் கடன் வழங்குதல்

போதுமான சேமிப்புக் கிட்டங்கிகளை ஏற்படுத்தி உணவுப்பொருட்கள் வீணாவதை முழுவதுமாகத் தடுத்து நிறுத்துவது

உணவுப்பொருட்களை விவசாயிகளே உழவர் சந்தை போல் நேரடியாக விற்பனை செய்திட ஏற்பாடு செய்திடுதல்

பொது விநியோகத் திட்டத்திற்கு போதுமான நிதி ஒதுக்கி அதனை முழுமையாகத் தன்னிச்சையாகச் செயல்பட அனுமதிப்பது, அதில் ஊழல் செய்பவர், தடை ஏற்படுத்துவோருக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவது.

விவசாயப் பொருட்களை மாற்றம் செய்யப்பட்ட- மதிப்பு கூட்டிய நிலையில் விற்பனை செய்திட விவசாயிகளுக்கு பயிற்சியளித்தல்

இவை இந்திய விவசாய வளர்ச்சியை 4%லிருந்து 10% உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய 75% மக்களைக் கொண்ட இந்திய மக்களின் வறுமையையும் பசியையும் நீக்கும்.

16. வறுமைக் கோடு உருவான வரலாறு!

ஜவஹர்லால் நேருவின் 'சோசலிச' பொருளாதாரத்திலிருந்து இந்திரா காந்தியின் "ஹரிபி ஹடாவோ" (வறுமையை ஒழிப்போம்) காலத்தைத் தாண்டி,

ராஜீவ் காந்தியின் உலகமயமாக்கல், நரசிம்மராவ்-மன்மோகன் சிங்-தலைமையிலான ஆட்சியில் தாராளமயமாக்கல்,

பாஜக தலைமையிலான அரசில் தனியார் மயமாக்கல் என்று இந்திய பொருளாதாரம் வெகு தூரம் வந்து விட்ட பிறகும் இன்றும் வறுமை குறித்து விரிவான விவாதங்கள் நடக்கின்றன.

"புள்ளிவிபரங்கள் எப்படி இருந்தாலும் 1980-களில் இருந்ததை விட வறுமை குறைந்துதான் இருக்கிறது, அப்போ எல்லாம் கிழிந்த சட்டை போட்டிருப்பாங்க, இப்போ எல்லோரும் நல்ல சட்டை போடுகிறார்கள்" என்று தனியார்மய, தாராளமய, உலகமய கொள்கைகளால் ஆதாயம் அடைந்த மேட்டுக்குடியினர் புகழ் பாடுகிறார்கள்.



'சோசலிஸ்ட்' நேரு

அந்த நல்ல சட்டையை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு சரியான ஊதியம், நிலையான வாழ்வாதாரங்களை மறுப்பதுதான் அவர்கள் பார்க்கத் தவறும் மறுபக்கம்.

'ஏழைகள் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால் யாரும் பட்டினியால் சாகவில்லை. அதனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உணவு பாதுகாப்பு என்று பல ஆயிரம் கோடி ரூபாய்களை செலவழிப்பது முட்டாள்தனம்.

உயர்தர ஓட்ஸ் கஞ்சி குடித்தாலும் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ 50-தான் செலவாகிறது, கிராமப் புறங்களில் சுமாரான ஏழைகள் தலைக்கு ரூ 12-க்கு ஒரு நாள் சாப்பாட்டை முடித்து விடுகிறார்கள்' என்று புள்ளி விபரங்களை எடுத்து விடுகிறார்கள் பொருளாதார பார்வையாளர்கள்.

பிரெஞ்சு மக்கள் புரட்சி.

பிரெஞ்சு புரட்சியின் போது 'ஏழைகள் சாப்பிடுவதற்கு ரொட்டி கிடைக்கவில்லை என்றால் கேக் சாப்பிடலாமே'

என்று சொன்னதாக வரலாற்றில் இடம் பிடித்த பிரெஞ்சு ராணியின் கதியைப் பார்த்து பாடம் கற்றுக் கொண்டனர் பல நாடுகளின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள்.

அதனால் தம்மை வளப்படுத்தும் பொருளாதார அமைப்பை உருவாக்கும் ஏழைகள் அதிகம் கலகம் செய்து விடாமல் பார்த்துக் கொள்ள வறுமை நிவாரண பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

நவீன உலகில் தாம் தொண்டு செய்வதற்கு ஏழைகளைப் படைத்த இறைவனுக்கு நன்றி சொன்ன அன்னை தெரசா போல உலகெங்கும் மக்களை சுரண்டி பணம் குவிக்கும் 'இளகிய மனம்' படைத்த பில் கேட்ஸ்களும், வாரன் பபெட்டுகளும் அறக்கட்டளைகள் ஏற்படுத்தி வறுமையை ஒழிக்க முயற்சிக்கிறார்கள்.

ஒரு பக்கம், உணவு வினியோகம், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் அரசு தலையிட்டு சந்தையின் செயல்பாட்டை சீர்குலைக்கக் கூடாது என்ற தாராளவாத முதலாளித்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு வறுமையை போக்குவதில் அரசின் தலையீட்டை தடுக்கிறது.

இன்னொரு பக்கம், சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

சந்தையில் பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் பெரும்பான்மை மக்களுக்கு ஏதோ கொஞ்சம் உணவு, சுமாரான கல்வி, ஒண்டுவதற்கு வாழ்விடம் ஏதாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

இல்லையேல் இவர்களது உழைப்பைச் சுரண்டி முதலாளிகள் ஆதாயம் அடைய முடியாது.

அதாவது பெரும்பான்மை மக்கள் சரிவர சாப்பிடக் கூட வழியில்லாமல், முறையான கல்வி பெற முடியாமல் போய் விட்டால் தொழிற்சாலைகளில், வணிக நிறுவனங்களில் வேலை செய்வதற்கு ஆரோக்கியமான, கல்வி கற்ற ஆட்கள் கிடைக்காமல் போய் விடுகிறார்கள்.

சந்தையில் தலையிடக் கூடாது, அதே நேரம் முதலாளித்துவ உற்பத்திக்கு தேவைப்படாதவர்கள் செத்து விடுவது வரை குறைந்த பட்சம் சோறு போட்டு பராமரிக்க வேண்டும்.

எனவே வறுமை என்பதற்கு ஒரு கட்-ஆப் கோடு வரையறை வேண்டியிருக்கிறது.

வருமானத்துக்கு ஒரு வரம்பு ஏற்படுத்தி அந்த வரம்புக்கு மேல் உள்ளவர்கள் சந்தையின் கருணையிலும், அதற்கு கீழ் உள்ளவர்கள் அரசு ஆதரவிலும் பிழைத்துக் கொள்ளலாம் என்று திட்டமிட வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட வறியவர்களுக்கு கஞ்சித் தொட்டியோ, பிரியாணி சென்டரோ அல்லது ரொட்டி வரிசைகளோ ஏற்படுத்தி வயிற்றுப் பசியை ஆற்றுவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். அந்த அளவுக்கு அரசு தலையீட்டை முதலாளித்துவ சிந்தனையாளர்கள் சகித்துக் கொள்வார்கள்.



தாதாபாய் நவ்ரோஜி

இந்தியாவில் வறுமைக் கோட்டுக்கான அளவீடு முதன்முதலில் இந்தியாவின் முதுபெரும் தாத்தா என்று அழைக்கப்பட்ட தாதாபாய் நவ்ரோஜியால் “இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் ஆட்சியும்” என்ற அறிக்கையில் 1876-ம் ஆண்டு முன் வைக்கப்பட்டது.

1867-68ம் ஆண்டின் விலைவாசியின் அடிப்படையில் இடம் பெயர்ந்த கூலித் தொழிலாளர் பயணம் செய்யும் போது ஓய்வில் இருக்கும் போது, ஒரு நபருக்கு ஆண்டிற்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ரூ 16-லிருந்து ரூ 35 வரை வருமானம் கிடைக்கா விட்டால் அவரை வறியவர் என்று கணக்கிட்டிருந்தார்.

இந்த வருமானத்தில் உயிர் பிழைத்திருக்க முடியுமே தவிர வேலை செய்வதற்கான ஆற்றல் தேவைகளும், மற்ற அடிப்படை செலவினங்களும் இதில் அடங்காது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1939-ம் ஆண்டு வறுமையை கணக்கிடுவதற்கு காங்கிரஸ் கட்சி “சோசலிச” நேரு தலைமையில் ஒரு குழு அமைத்தது.

அந்தக் குழுவின் செயலாளரான கே டி ஷா அளித்த அறிக்கையில் வறுமைக் கோட்டின் அளவீடாக ஒரு மாதத்திற்கு தனிநபர் வருமானம் ரூ 15 லிருந்து ரூ 20 என மதிப்பிட்டிருந்தார்.

ஒரு வயது வந்த தொழிலாளிக்கு 2,400-லிருந்து 2,800 கலோரி வரை ஆற்றல் தேவை பூர்த்தி செய்ய முடிந்தால்தான் அவர் வறுமையிலிருந்து தப்பித்தவர் என்று கருத வேண்டும் என்று அறிக்கை குறிப்பிட்டது.

1960-61ல் திட்டக்கமிசன் தலைவர் திரு பிதம்பர் பந்த் என்பவரை உள்ளடக்கிய பணிக்குழு வறுமைக் கோட்டை தனிநபர் வருமானம் கிராமப்புறங்களுக்கு ரூ 20 நகர்ப் புறங்களுக்கு ரூ 25 என நிர்ணயம் செய்தது.

அதாவது 22 ஆண்டுகளுக்குப் பிறகு, உலகப் போரின் போதும், அதற்கு பின்னையதுமான பணவீக்கங்களுக்குப் பிறகு வறுமைக் கோட்டை கிட்டத்தட்ட அதே அளவில் முடிவு செய்திருந்தார்கள்.

1979-ல் வறுமையை கணக்கிட திட்டக்கமிசன் நியமித்த பணிக்குழு தனது அறிக்கையை அளித்தது.

தேசிய மாதிரி கணக்கீடு துறையின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு தனிநபருக்கு கிராமப்புறங்களில் 2,400 கலோரி, நகர்புறத்தில் 2,100 கலோரி ஆற்றல் தேவைப்படுவதாகவும் அது 1973-74 விலைவாசியின் அடிப்படையில் மாத நுகர்வு கிராமப்புறங்களுக்கு ரூ 49, நகர்புறங்களுக்கு ரூ 56 என்றும் அது முடிவு செய்திருந்தது.

அன்றிலிருந்து 1973-74ம் ஆண்டின் விலைவாசிகளை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் விலைக் குறியீட்டு எண் உயர்வின் (பணவீக்கத்தின்) அடிப்படையில் அதிகரித்து வறுமையின் அளவீடு நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும், 1973-1993 வரை தேசிய மாதிரி கணக்கீட்டின் ஆய்வு முடிவுகளுக்கும், தேசிய கணக்கியல் புள்ளிவிபரங்களின் (NAS) முடிவுகளுக்குமிடையிலான வேறுபாட்டைக் கொண்டு திட்டக்கமிசன் வறுமையில் உள்ளவர் எண்ணிக்கையை சரிப்படுத்தி (Adjust) வந்தது. தேசிய மாதிரி கணக்கீட்டு ஆய்வில் மக்கள் பொருட்கள் நுகரும் அளவு மதிப்பிடப்படுகிறது.

தேசிய கணக்கியல் புள்ளி விபரம் கணக்கிடும் நாட்டின் மொத்த நுகர்வை கணக்கிடுகிறது.

மொத்த நுகர்வு, மாதிரி கணக்கீட்டு அளவை விட அதிகமாக இருந்ததால், மாதிரி கணக்கீட்டின் நுகர்வு மதிப்பீட்டை அந்த அளவுக்கு உயர்த்தி வந்தது.

உதாரணமாக 1977-78ன் சரிப்படுத்துதலுக்கு முன்பான வறியவர்களின் வீதம் 57.16%. NAS தரவுகளுக்கு சரிப்படுத்திய பிறகு வறியவர்களின் எண்ணிக்கையை முறையே 43%-மாகவும், 48%-மாகவும் குறைத்து காட்டி வந்தது.

1993-94-ல் தேசிய மாதிரி ஆய்வில் கிடைத்த தரவுகளை விட கணக்கியல் மதிப்பீடுகள் பெருமளவு அதிகரித்திருந்தன.

அந்த அடிப்படையில் திட்டக் குழு 1987-88-ம் ஆண்டில் 25.5 சதவீதமாக இருந்த வறுமை 1993-94-ல் 19 சதவீதமாக குறைந்து விட்டதாக அறிவித்தது.

1990-களின் மத்தியில் திட்டக்குழு தலைவராக வந்த மது தண்டவதே இந்த மோசடியை அம்பலப்படுத்தி வறுமையை கணக்கிடும் இந்த போலியான வழிமுறையை தூக்கி எறிந்தார்.



வறுமைக் கோட்டின் வரலாறு (படம் : நன்றி http://thealternative.in)

அர்ஜூன் சென்குப்தா தலைமையிலான மரபுசாரா தொழிலாளர்களுக்கான தேசிய ஆணையம் மொத்த மக்கட் தொகையில் 77% பேர் நாளொன்றுக்கு ரூ 20-க்கும் குறைவாக வருமானமீட்டுபவர்களாக வறுமையிலிருப்பதாக தெரிவித்திருக்கிறது.

என்.சி.சக்சேனா குழுவோ இந்தியாவில் 50% மக்கள் வறுமையில் இருப்பவர்களாக கூறுகிறது.

சுரேஷ் டெண்டூல்கர் கமிட்டி வறுமைக் கோட்டின் அளவை தனிநபர் வருமானம் கிராமப்புறங்களுக்கு ரூ 356.30, நகர்ப்புறங்களுக்கு ரூ 538.6 என்று நிர்ணயித்தது.

இது 1876-ல் நவ்ரோஜியின் மதிப்பீட்டிலிருந்து 188 மடங்காகும். இடைப்பட்ட 137 ஆண்டுகளின் சராசரி பணவீக்கம் 5%-க்கும் மேல், விலை உயர்வும் அதிகம்.

அதனால் 2004-05 ஆண்டு மதிப்பீடு நவ்ரோஜியின் மதிப்பீட்டை விட மிக மிகக் குறைவு. நவ்ரோஜியின் வார்த்தைகளில் சொல்வதானால் இந்த வருமானத்தைக் கொண்டு ஒருவர் உயிர் வாழக்கூட முடியாது.

இந்தியாவின் பெரும்பாலான மக்கள் 1,700 கலோரிக்கும் குறைவாகத் தான் உணவு உட்கொள்கிறார்கள், அதனால் 2,100, 2,400 கலோரிகள் மிக அதிகமென்று வறுமையின் அளவை கிராமப்புறங்களுக்கு 1,999 கலோரியாகவும் நகர்ப்புறங்களுக்கு 1,770 கலோரியாகவும் குறைத்து வரையறுத்தது டெண்டூல்கர் கமிட்டி.

இதன் மூலம் 2004-05ல் 37.2 சதவீதமாக இருந்த வறுமையின் வீதம் 2009-10ல் 29.8 சதவீதமாக குறைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

மருத்துவ அறிவியல் படி ஓய்வில் இருப்பவருக்கே உடலின் வளர்சிதை மாற்றத்திற்கு மட்டுமே 1,220 கலோரி தேவைப்படும்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் அறிக்கைப் படி மிதமான வேலை செய்யும் ஆணுக்கு 2,730 கலோரியும், பெண்ணுக்கு 2,230 கலோரி உணவும் தேவைப்படும்.

10 வயதிலிருந்து 17 வயது சிறார்களுக்கு சராசரியாக 2,450 கலோரியும், 10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சராசரியாக 1360 கலோரியும் தேவைப்படும்.

கருத்தரித்திருக்கும் பெண்களுக்கு சராசரியை விட 350 கலோரிகள் அதிகமாகவும், தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு சராசரியை விட 600 கலோரிகள் அதிகமாகவும் தேவைப்படும்.

தமிழகத்திலிருக்கும் வீடில்லாத, குடும்பமில்லாத உழைக்கும் தொழிலாளி ஒருவர் மிகக்குறைவான செலவில் உணவு உட்கொள்வதாக இருந்தால், அவர் 'அம்மா உணவகத்தை' நாடலாம். ரூ 33-க்குள் வயிற்றை நிரப்பிக்கொள்வதாக இருந்தால் என்ன சாப்பிடுவார்?

காலை 10 ரூபாய்க்கு 10 இட்லி, மதியம் 10 ரூபாய்க்கு இரண்டு ஐந்து ரூபாய் சாத வகை, இரவு கையேந்தி பவனில் 12 ரூபாய்க்கு மூன்று புரோட்டா, ஆக ரூ.33. இந்த உணவு மெனுவில் அவருக்கு எவ்வளவு கலோரி கிடைக்கும்?

10 இட்லி – 1,000, 1/2 கப் சாம்பார் – 70, 2 கப் அரிசி சாதம் – 240, 3 பரோட்டா – 450 ஆக மொத்தம் 1760 கலோரிகள். 33 ரூபாய்க்கு டெண்டுல்கரின் 1,770 கலோரியை கூட இவரால் பெற முடியாது. ஆனால், அவரது ஒரு நாள் தேவை 3,000 கலோரியை விட அதிகம்.

உழைப்பவரின் கையில் செல்வம் இருக்கும் போது தேவைக்கு பசியாறுவது ஒரு பிரச்சினை இல்லை.

2012 ஐ.நாவின் மனித வள மேம்பாட்டு குறியீட்டில் இந்தியா 136-வது இடம் வகிக்கிறது. 1992-ல் இது 122-வது இடமாக இருந்தது. உலக பசியிலுள்ளோர் குறியீட்டெண்ணில் இந்தியா 119-ம் இடம் வகிக்கிறது.

உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக வங்கியின் கணக்கீட்டின் படி உலகின் ஊட்டச்சத்து குறைபாடுள்ள, எடை குறைவான குழந்தைகளில் 49 சதவீதம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள்.

இது ஆப்பிரிக்க நாடுகளை விட இரு மடங்காகும். இப்படி மெய்யுலகில் ஏழ்மை மக்களை அழுத்திக் கொண்டிருக்கும் போது இந்திய அரசின் அறிக்கைகளில் வறுமை காணாமல் போய்வருகிறது.

விலைவாசி உயர்வை குறைத்து மதிப்பிட்டும், மக்களின் ஆற்றல் தேவைகளை குறைத்து மதிப்பிட்டும் வறுமை வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டு வருகிறது.

வறுமைக்கோடு குறித்த இந்த அளவுகோல் சரியானதா, ரூ.32-க்குள் ஒருவர் வாழ இயலுமா என்றும் வறுமைக் கோட்டைத் தீர்மானிக்கும் அளவை குறைத்து நிர்ணயித்திருப்பதுதான் பிரச்சனை என்பதாக முதலாளித்துவப் பத்திரிகைகளும், ஊடகங்களும் விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன,

பல பொருளாதார மேதைகளும் அறிஞர்களும் அரசையும் திட்டக் கமிசனையும் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

வறுமைக் கோட்டை நிர்ணயித்து, ஏழைகளுக்கு உதவும்படியான சூழலை உருவாக்கும் பொருளாதாரக் கொள்கையின் அபத்தத்தைப் பற்றி யாரும் விவாதிப்பதில்லை.

300 ஆண்டு முதலாளித்துவ வளர்ச்சிக்குப் பிறகும் முதலாளித்துவத்தின் பிறப்பிடமான இங்கிலாந்திலும், அதன் இப்போதைய தலைமையகமான அமெரிக்காவிலும் கூட ஏழ்மையை ஒழிக்க முடியாதிருப்பது ஏன் என்று முதலாளித்துவத்தை கேள்விக்கு உட்படுத்துவதில்லை.

பெரும்பான்மை மக்கள் இந்த கேள்விகளை எழுப்பி தம்மை அழுத்திக் கொண்டிருக்கும் ஆளும் அமைப்புகளை நிராகரித்து சோசலிச சமூகத்தை கட்டுவதுதான் ஏழ்மையை ஒழிப்பதற்கான ஒரே வழி.

புள்ளி விவரங்களின் மோசடியால் ஏழைகளின் எண்ணிக்கையை ஒழித்து வறுமைக் கோட்டை குறைக்கும் வழி அத்தகைய சமூகத்தில் தேவையற்றுப் போகும்.

ஏனெனில் உழைப்பவரின் கையில் செல்வம் இருக்கும் போது தேவைக்கு பசியாறுவது ஒரு பிரச்சினை இல்லை.

இதன்றி வறுமையையும், வறுமைக் கோட்டையும் ஒழிப்பதற்கு வேறு வழிகளோ இல்லை குறுக்கு வழிகளோ இல்லை.

17. திருவள்ளுவர் காட்டும் வறுமை

வள்ளுவர் வாழ்ந்த சமுதாயத்தில் பொதுவுடைமை, ஜனநாயகம் போன்ற கருத்துக்கள் தழைத்தோங்காத காலம்.

தனியுடைமை தத்துவத்தை ஏற்றுக் கொண்ட சமுதாயம். அத்தகுச் சமுதாயத்தில் வளமையும் வறுமையும், ஏற்றமும் தாழ்வும் இருந்தது இயல்பே.

வறுமையின் பிடியில் சிக்கி, பசியும் அதனால் ஏற்பட்ட இறத்தலும் இருந்துள்ளது.

இச்சீர்கேட்டினை எண்ணி மனம் வெதும்பிய வள்ளுவர் தமது திருக்குறளில் நல்குரவு, இரவு, இரவச்சம் ஆகிய அதிகாரங்களைப் படைத்துள்ளார்.

ஒரு சாரார் வளமுடன் வாழும் நிலையில், மற்றொரு சாரார் பிச்சை எடுத்து உண்ணும் நிலையும் உள்ளதல்லவா? அதற்குக் காரணமாக விதியை நொந்து கொள்ளுகிறோம்! இறைவனைச் சாடுகிறோம்!

திருவள்ளுவர் இந்நிலைக்கு இறைவனும், விதியும் காரணமென்றால், அவ்விறைவன் எதற்கு என்று நினைத்துச் சாபமிடுகிறார்!

“இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்” (குறள் 1062)

பிச்சையெடுத்துதான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையில் உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவனே இந்த உலகிற்கு வந்து பிச்சையெடுப்பவரைப்போல தானும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும் எனச் சபிக்கிறார்!

இக்குறள் நமக்கு உணர்த்தும் உண்மை சமுதாயத்தில் எல்லோரும், எல்லாமும் பெற்றுச் சமமாக வாழும் உரிமை உள்ளது என்பதே.

பொருளாதார ஏற்றத் தாழ்வு, அதனால் ஏற்படும் வறுமை, அதன் விளைவாய் இரத்தல் ஆகியவை கொடுமை. அவையற்ற சமுதாயமே மனிதனை உயர்த்த முடியும் என்ற கருத்தை உணர்கிறோம்.

பொருளாதார உரிமை:

பொருள் தேடும் உரிமை, அதனைப் பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு எனத் தெளிவாக்குகிறது திருக்குறள். அப்படிப் பொருள் தேடுவது அறவழியில் அமைய வேண்டும் என வலியுறுத்துகிறது.

வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில் கூறுகிறார் திருவள்ளுவர் :

“அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற் பாலவை” (குறள் 656)

பிறர் வருந்தும்படி ஒருவன் அடைந்த பொருள் அனைத்தும், பெற்றவன் வருந்தி அழும்படி அவனை விட்டுப் போய்விடும். நல்ல வழியில் வந்த பொருள் தொலைந்தாலும் பின்னர் நன்மையே தரும்.

பொருளாதார உரிமை அனைவருக்கும் உண்டு – அதற்காக அடுத்தவர் உரிமையை மீறுவது தவறு; அற வழியல்ல; பிறரை வஞ்சித்துப் பொருள் சேர்ப்பது ஏற்புடையது இல்லை; கண்டனத்திற்குரியது.

“ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை” (குறள் 656)

தன்னைப் பெற்ற தாய் பசியால் வாடுவதைப் பார்த்து மனம் வருந்தி வேதனைப்படும் பொழுதுகூட, சான்றோர்கள் பழிப்பதற்குக்குக் காரணமான இழிந்த செயல்களை செய்யக் கூடாது.

அறமற்ற வழியில் அநியாயமாகப் பொருள் சேர்த்தல் தவறு என்று உணர்த்தி, சரியான முறையில் பொருளீட்டும் முறைதனை உணர்த்துவதால் லஞ்சமற்ற, சுரண்டலற்ற சமுதாயத்திற்கு வள்ளுவப் பெருந்தகை வழி காட்டுகிறார்!

துன்பங்கள் பல தந்த நம் புகழையும் அழிக்கும் சூதைப் போல் நமக்கு வறுமை தருவது வேறு ஒன்றும் இல்லை.

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

பல துன்பங்களுக்கு ஆளாக்கி, புகழைப் கெடுத்த, வறுமையிலும் ஆழ்த்துவதற்குச் சூதாட்டத்தைப் போன்ற தீமையான செயல் வேறொன்றும் இல்லை.

ஒருவனுக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுக்கின்ற சூதைபோல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

வறுமையைவிடத் துன்பம் தருவது எது என்று ஆராய்ந்தால், வறுமையைப் போல் துன்பம் தருவது வேறு ஒன்றும் இல்லை.

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

வறுமை என்னும் ஒரு பாவி ஒருவனை பற்றிக் கொண்டால் அவனுக்கு நிகழ்கால இன்பமும், வருங்கால இன்பமும் இல்லாதபடி செய்யும்.

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை.

வறுமை என்று சொல்லப்படும் ஆசைநிலை ஒருவனைப் பற்றினால், பழமையாக வரும் குடிப்பெருமையையும், அதனால் வருகின்ற நல்ல புகழையும் ஒருசேரக் கெடுக்கும்.

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

வறுமையானது நல்ல குடும்பத்தில் பிறந்தவரிடம் கூட இழிவான சொற்கள் தோன்றுவதற்கு ஏதுவான தளர்ச்சியை உண்டாக்கும்.

வறுமை என்று சொல்லப்படும் துன்பத்துள் பலவகைப்பட்ட துன்பங்களும் வந்துசேரும்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

நல்ல நூல்களின் பொருளை வறியவர் தெளிவாக அறிந்து கூறினாலும், அவர் சொல் பயனற்ற சொல்லாக முடியும்.

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

அறநெறியிலிருந்து விலகி வந்த வறுமை ஒருவனைச் சேர்ந்தால், பெற்ற தாயினாலும் அயலான்போலக் கருதச் செய்துவிடும்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

நேற்றும் என்னைக் கொன்றது போன்ற துன்பத்தைச் செய்த வறுமை, இன்றும் என்னிடம் வந்து துன்புறுத்துமோ?

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.

ஒருவன் நெருப்பிலே இருந்து உறங்குதல் கூடும்; ஆனால் வறுமை வந்தபோது எவ்வகையாலும் கண்மூடி உறங்குதல் அரிது.

18. பைபிள் காட்டும் வறுமை.

உலகளவில் உண்மையான முன்னேற்றத்திற்கான நம்பிக்கை ஒளி மங்கலாக இருப்பதால், உதவிக்காக ஒருவர் எங்கே செல்லலாம்?

முன்பு குறிப்பிட்டபடி, இப்பொழுதே மக்களுக்கு நடைமுறை ஞானத்தை வாரி வழங்கும் சுரங்கம் ஒன்று உள்ளது. அது என்ன? அதுதான் கடவுளுடைய வார்த்தையாகிய பைபிள்.

பிற தகவல் சுரங்கங்களிலிருந்து பைபிள் எவ்வாறு வேறுபடுகிறது? இது உன்னத அதிகாரியாகிய நமது படைப்பாளரிடமிருந்து வந்திருக்கிறது.

பைபிள் எனும் சுரங்கத்தில் விலையேறப்பெற்ற மணிக்கற்களை, அதாவது எல்லா மக்களுக்கும், எல்லா இடங்களுக்கும், எல்லா காலங்களுக்கும் பொருந்துகிற நடைமுறை நியமங்களை அவர் வைத்திருக்கிறார்.

இந்த நியமங்களைப் பின்பற்றினால், இப்பொழுதே ஏழைகள் திருப்தியான வாழ்க்கையை அனுபவித்து மகிழலாம். இதற்கு சில உதாரணங்களை கவனிக்கலாம்.

பணத்தைப் பற்றி சரியான கண்ணோட்டம் உடையவர்களாய் இருங்கள்.

“ஞானம் கேடகம், திரவியமும் கேடகம்; ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும்; இதுவே அறிவின் மேன்மை” என பைபிள் கூறுகிறது. (*பிரசங்கி 7:12*)

இதன் கருத்தென்ன? பணம்தான் எல்லாம் அல்ல. அது ஓரளவு பாதுகாப்பைத் தருகிறது என்பது உண்மைதான். நமக்குத் தேவையான சில பொருட்களை வாங்க உதவுகிறது,

ஆனால் அதற்கு சில வரம்புகள் இருக்கின்றன. பணத்தால் வாங்க முடியாத அதிக மதிப்புமிக்க சில விஷயங்கள் உள்ளன. இந்த உண்மையை ஒப்புக்கொள்வது பொருளுடைமைகளை சரியான கண்ணோட்டத்தில் பார்க்க நமக்கு உதவுகிறது;

பணத்தைத் திரட்டுவதிலேயே குறியாக இருக்கும்போது வாழ்க்கையில் வரும் ஏமாற்றங்களையும் தவிர்க்க உதவுகிறது. பணத்தால் ஜீவனை வாங்க முடியாது,

ஆனால் ஞானமாக செயல்படுவது நமது ஜீவனை இப்பொழுதும் பாதுகாக்கும், நித்திய காலமாய் வாழும் வாய்ப்பையும் நமக்கு திறக்கும்.

வரவுக்குத் தக்க செலவு செய்யுங்கள். *ஆசைப்பட்டதெல்லாம் அத்தியாவசியமானது என்று சொல்லிவிட முடியாது. எது அத்தியாவசியமானதோ அதற்கு மட்டுமே நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். "எனக்கு அது அவசியம் தேவை" என சொல்லி நம்மை நாமே சுலபமாக ஏமாற்றிக் கொள்ளலாம்,*

ஆனால் உண்மையில் பார்க்கப்போனால், அது அத்தியாவசியமான ஒன்றாக இருக்காது, ஆசைப்பட்ட ஒன்றாகவே இருக்கும்.

சம்பாதித்த பணத்தை முதலில் உடனடித் தேவைகளுக்கே—உணவு, உடை, இருப்பிடம், இன்ன பிறவற்றிற்கே—ஞானமுள்ள ஒருவர் பயன்படுத்துவார். பிறகு, மீதமுள்ள பணத்தை செலவழிப்பதற்கு முன்பு கூடுதலாக தேவைப்படும் பொருட்களுக்கு போதுமான பணம் இருக்குமா என அவர் தீர்மானிப்பார்.

இதைத்தான் இயேசு ஓர் உவமையில் பரிந்துரைத்தார்: 'தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்க்கக்கடவன்.'—லூக்கா 14:30.

பிலிப்பைன்ஸில் வசிக்கும் யூஃப்ரோசினா என்பவர் ஒற்றைத் தாய், அவருக்கு மூன்று பிள்ளைகள். சில வருஷங்களுக்கு முன்னர் அவரது கணவன் அவரை கைவிட்டுவிட்டுப் போய்விட்டார்;

ஆகவே குடும்பத்திற்காக பணம் சம்பாதித்து, அதை படுசிக்கனமாக பயன்படுத்தும் சவாலை எதிர்ப்பட்டார்.

அப்படி சிக்கனமாக செலவழித்து குடும்பம் நடத்தி வரும்போது, கையிலிருக்கும் பணத்தை செலவு செய்யும் விதத்தைப் பற்றி பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தார்.

உதாரணமாக, பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்தமான ஏதோவொன்றை பார்த்து அதை வாங்கித் தரும்படி கேட்கும்போது, அது வேண்டாம் என பட்டென்று சொல்லிவிடாமல், "உனக்கு வேண்டுமென்றால் அதை நீ வாங்கிக்கொள்ளலாம்,

ஆனால் நீ தீர்மானிக்க வேண்டும். நம்முடைய கையில் ஒரு பொருளை மட்டுமே வாங்க பணம் இருக்கிறது. இந்தப் பணத்தில், நீ கேட்கிற பொருளை வாங்கலாம், இல்லையென்றால் இந்த வாரம் சாதத்தோடு தொடுகறிக்கு கொஞ்சம் இறைச்சியோ காய்கறியோ வாங்கலாம். இப்போ சொல், உனக்கு எது வேண்டும்?" என அவர்களுக்கு நியாயங்காட்டி பேசுவார்.

பொதுவாக, சொல்ல வந்த குறிப்பை பிள்ளைகள் புரிந்துகொண்டு, வேறெதாவது வாங்குவதற்குப் பதிலாக சாப்பாட்டுக்கு தேவையானதை வாங்கவே விரும்புவார்கள்.

மனநிறைவுடன் இருங்கள். *"உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்" என மற்றொரு பைபிள் நியமம் கூறுகிறது.* (*1 தீமோத்தேயு 6:8*)

பணம் மட்டுமே மகிழ்ச்சியைத் தராது. பணக்காரர் அநேகர் மகிழ்ச்சியில்லாமல் இருக்கிறார்கள், அதேசமயத்தில் ஏழைகள் அநேகர் அதிக மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்.

இவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான எளிய காரியங்களை வைத்தே திருப்தியாக வாழ கற்றுக்கொள்கிறார்கள். அதிமுக்கியமான காரியங்கள் மீது கவனத்தை ஒருமுகப்படுத்தும் 'தெளிவான கண்ணை' பற்றி இயேசு பேசினார். (*மத்தேயு 6:22*)

இது மனநிறைவுடன் இருக்க ஒருவருக்கு உதவுகிறது. ஏழைகள் பலர் மிகவும் திருப்தியுடன் இருக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் கடவுளோடு ஒரு நல்ல உறவை வளர்த்திருக்கிறார்கள், மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையையும் அனுபவிக்கிறார்கள்—இவையெல்லாம் பணத்தினால் வாங்க முடியாதவை.

இதுவரை சொல்லப்பட்டவை ஏழைகள் தங்களுடைய சூழ்நிலைமையை சமாளிப்பதற்கு உதவ பைபிள் தரும் நடைமுறையான அறிவுரைகளில் சில. ஆனால் இன்னும் அநேகம் இருக்கின்றன.

உதாரணமாக, பணத்தை விரயமாக்கும் பழக்கங்களாகிய புகைப்பிடித்தல், சூதாடுதல் போன்றவற்றை தவிருங்கள்;

வாழ்க்கையில் முக்கியமான காரியங்களை, குறிப்பாக ஆன்மீக இலக்குகளை கண்டு கொள்ளுங்கள்; வேலையில்லா திண்டாட்டம் அதிகமாய் இருக்கும் இடங்களில், மற்றவர்களுக்கு அதிக பிரயோஜனப்படும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள் அல்லது மற்றவர்களுக்கு பிரயோஜனமான சின்ன சின்ன வேலைகளை செய்து கொடுக்க முயலுங்கள் என்றெல்லாம் பைபிள் அறிவுரை தருகிறது. (*நீதிமொழிகள் 22:29; 23:21; பிலிப்பியர் 1:9-11*)

இத்தகைய 'நடைமுறை ஞானத்தையும் சிந்திக்கும் திறனையும்' பயன்படுத்தும்படி பைபிள் பரிந்துரை செய்கிறது, ஏனென்றால் அவை 'உங்கள் ஆத்துமாவுக்கு ஜீவனாயிருக்கும்.'—நீதிமொழிகள் 3:21, 22.

வறுமையில் போராடுகிறவர்களுக்கு உதவும் நிவாரணியை பைபிள் அறிவுரைகள் தருகிறபோதிலும், எதிர்காலத்தைப் பற்றிய கேள்விகள் இன்னும் மனதில் வட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

வறுமை எனும் கோரப் பிடிக்குள்ளேயே ஏழைகள் என்றென்றும் கிடந்து மடிய வேண்டியதுதானா? பெரும் செல்வந்தருக்கும் பரம ஏழைக்கும் இடையே இருக்கும் இந்தச் சமத்துவமின்மை என்றாவது சரிசெய்யப்படுமா? பலருக்கும் தெரிந்திராத ஒரு தீர்வை நாம் இப்பொழுது ஆராயலாம்.

நம்பிக்கை வைப்பதற்குரிய காரணத்தை பைபிள் தருகிறது

பைபிள் ஒரு சிறந்த புத்தகம் என்பதை பலரும் ஒத்துக்கொள்கின்றனர். ஆனால் விரைவில் வரப்போகும் பெரிய மாற்றங்களைப் பற்றி அது குறிப்பிடுவதை பெரும்பாலும் அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்.

வறுமை உட்பட, மனிதகுலத்தின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்கு கடவுள் எண்ணம் கொண்டிருக்கிறார்.

இதை செய்வதற்கு மனித அரசாங்கங்கள் திறமையின்றி அல்லது விருப்பமின்றி இருப்பது தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருப்பதால், அவற்றை நீக்கிப்போடுவதற்கு கடவுள் நோக்கம் கொண்டுள்ளார்.

எப்படி? தானியேல் 2:44-ல் பைபிள் திட்டவட்டமாக குறிப்பிடுகிறது:

"பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; . . . அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்."

இந்த "ராஜ்யங்களையெல்லாம்," அதாவது அரசாங்கங்களையெல்லாம் நீக்கிய பிறகு, கடவுளால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர் ஆளுகை செய்வார்.

அந்த ஆட்சியாளர் ஒரு மனிதரல்ல, ஆனால் கடவுளைப் போலவே வல்லமை வாய்ந்த ஓர் ஆவி சிருஷ்டி; தற்போதைய சமத்துவமின்மையை ஒழிப்பதற்கு தேவைப்படும் பெரும் மாற்றங்களைச் செய்ய திறமை படைத்தவர்.

இதைச் செய்வதற்கு கடவுள் தமது சொந்த குமாரனை தேர்ந்தெடுத்திருக்கிறார். (அப்போஸ்தலர் 17:31) இந்த ஆட்சியாளர் செய்யப்போவதை சங்கீதம் 72:12-14 இவ்வாறு விவரிக்கிறது:

"கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.

பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்;

அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்." எப்பேர்ப்பட்ட மகத்தான எதிர்பார்ப்பு! எப்பேர்ப்பட்ட விடுதலை! கடவுளால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர் ஏழை எளியோரின் சார்பாக செயல்படுவார்.

வறுமையுடன் தொடர்புடைய எல்லா பிரச்சினைகளும் அப்பொழுது தீர்க்கப்படும். சங்கீதம் 72-ல் வசனம் 16 (NW) இவ்வாறு கூறுகிறது:

"பூமியில் ஏராளமாக தானியம் விளையும்; மலைகளின் உச்சியில் வழிந்தோடும்." பஞ்சத்தாலோ, பணப் பிரச்சினையினாலோ, மோசமான நிர்வாகத்தினாலோ வரும் உணவுப் பற்றாக்குறைகள் இனிமேல் இரா.

மற்ற பிரச்சினைகளும் தீர்க்கப்படும். உதாரணமாக, இன்று பூமியில் வாழும் பெரும்பாலோருக்கு சொந்தம் கொண்டாட ஒரு வீடு இல்லை.

என்றாலும், கடவுள் இவ்வாறு வாக்குறுதி தருகிறார்: "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.

அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை;

ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப் போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.” (*ஏசாயா* 65:21, 22)

ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு இருக்கும், அவரவர் தன்தன் வேலையை அனுபவித்து மகிழ்வர். ஆகவே வறுமைக்கு முழுமையான, நிரந்தரமான தீர்வை கடவுள் வாக்குறுதி அளிக்கிறார்.

பணக்காரருக்கும் ஏழைக்கும் இடையே உள்ள பெரும் பிளவுகள் இனிமேலும் இருக்காது, தொட்டுக்கொள்ள துடைத்துக்கொள்ள என சாப்பாட்டுக்காக மக்கள் இனிமேல் அவதிப்பட மாட்டார்கள்.

இந்த பைபிள் வாக்குறுதிகளை முதன்முதல் கேள்விப்படும்போது, இதெல்லாம் வெறும் கனவு என ஒருவர் நினைக்கலாம்.

ஆனால் கடந்த காலத்தில் கடவுள் தந்த எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறியுள்ளன என்பதை பைபிளை கூர்ந்து ஆராய்வதன் மூலம் அறிந்துகொள்ளலாம். (*ஏசாயா* 55:11)

ஆகவே இதெல்லாம் நடக்குமா *என்பது கேள்வியல்ல, இதெல்லாம் சம்பவிக்கும்போது இதிலிருந்து நன்மையடைய நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதே கேள்வி.*

நீங்கள் அங்கே இருப்பீர்களா?

இந்த அரசாங்கம் கடவுளுடையது என்பதால், இந்த ஆட்சியில் ஒரு பிரஜையாக வாழ கடவுளுக்குப் பிரியமான ஆட்களாக நாம் இருக்க வேண்டும். இதற்கு எப்படி தகுதி பெறுவது? கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல நாம் தவிக்க வேண்டியதில்லை, இதற்குரிய தகுதிகள் பைபிளில் கொடுக்கப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்ட அரசராகிய கடவுளுடைய குமாரன் நீதிபரர். (*ஏசாயா* 11:3-5) *ஆகவே, இந்த அரசாங்கத்தில் வாழ அனுமதிக்கப்படும் ஆட்களும்கூட நீதிபரராக வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். நீதிமொழிகள் 2:21, 22*

இவ்வாறு கூறுகிறது: “செவ்வையானவர்கள் பூமியிலே வாசம் பண்ணுவார்கள்; உத்தமர்கள் அதிலே தங்கியிருப்பார்கள். துன்மார்க்கரோ பூமியிலிருந்து அறுப்புண்டு போவார்கள்; துரோகிகள் அதில் இராதபடிக்கு நிர்மூலமாவார்கள்.”

இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வது எப்படி என்பதை அறிந்துகொள்ள ஏதாவது வழி இருக்கிறதா? ஆம், இருக்கிறது.

பைபிளை படித்து அதன் வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் இந்த மகத்தான எதிர்கால வாழ்வை அனுபவிக்க நீங்கள் தகுதி பெறலாம். (*யோவான் 17:3*)

இதற்கு உதவ யெகோவாவின் சாட்சிகள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். வறுமையோ அநீதியோ இல்லாத ஒரு சமுதாயத்தில் வாழும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

யூஃப்ரோசினா: “சிக்கனமாக செலவழிப்பது என் குடும்பத்திற்கு அத்தியாவசியமானதை வாங்க உதவுகிறது”

கடவுளோடு ஒரு நல்ல உறவையும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையையும் பணத்தினால் வாங்க முடியாது.

19. பசி வந்தால் பத்தும் பறக்கும்

“பசி வந்திடப் பத்தும் பறக்கும்” என்பது நாம் அடிக்கடி உச்சரிக்கும் அல்லது கேட்கும் பழமொழி.

பசி மிகவும் கொடுமையானது. பசி வந்துவிட்டால் அதன் முன் எதுவும் நிற்க முடியாது. எவ்வளவு பெரிய அறிவையும் ஆற்றலையும் வீரத்தையும் ஏன், தவத்தையும் கூட பசி ஒரே நொடியில் வென்றுவிடும்.

பசிக் கொடுமை மிகவும் பொல்லாதது. எந்தச் சத்தியாலும் பசியை வெல்ல முடியாது.

இந்தக் கருத்தை உணர்த்துவதுதான் “பசி வந்திடப் பத்தும் பறக்கும்” என்ற பழமொழி.

இந்தப் பழமொழியில் வரும் 'பத்து' எவை?

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம் *(நல்வழி பாடல் 26)*

ஔவைக் கிழவி நம் கிழவி; அமிழ்தினும் இனிய சொற்கிழவி என்ற சிறப்புக்குரிய தமிழ் மூதாட்டி ஔவையார் இயற்றிய இந்த

நல்வழிப் பாடலிலிருந்து பிறந்ததுதான் அந்தப் பழமொழி.

பாடல் என்னவோ பழங்காலத்தில் எழுதப்பட்டதுதான்.

ஆனால், அது இந்தக் காலத்திற்கும் இனிவரும் எந்தக் காலத்திற்கும் பொருந்துவதாக இருக்கிறது.
இதுவே தமிழ், தமிழ்ப் புலவோர், தமிழ்ச் செய்யுள் ஆகியவற்றுக்கு இருக்கும் தனிச்சிறப்பாகும்.

1. மானம்: honour and respect
2. குலம்: birth
3. கல்வி: education
4. வன்மை: caring
5. அறிவுடைமை: wisdom
6. தானம்: giving
7. தவம்: penance
8. உயர்ச்சி: high status
9. தாளாண்மை: effort
10. காமம்: sexuality

மானம் – குலப்பெருமை – கற்ற கல்வி – அழகிய தோற்றம் – பகுத்தறிந்து பார்க்கும் அறிவு – தானம் செய்வதால் வரும் புகழ் – தவம் மேற்கொள்ளும் ஆற்றல் – முன்னேற்றம் – விடாமுயற்சி – பெண்மீது கொள்ளும் காதல் உணர்ச்சி ஆகிய பத்தும் பசியால் வாடும் ஒருவனிடமிருந்து உடனே ஓடிவிடும் என்பதை அன்றே கண்டுபிடித்து பாடிவைத்துள்ளார் நம் ஔவைப்பாட்டி.

“பசி” வந்தபோது உணவருந்தி அப்பசியைப் போக்க முடியாத நிலை வருமானால் அதனைவிடக் கொடியது வேறொன்று மில்லை. செல்வம் பெற்றவர், அச்செல்வத்தைப் பாதுகாப்பாக வைத்ததற்குரிய இடம் எது என வள்ளுவரிடம் கேட்டால் அவர் அளிக்கும் விடை இதுதான்.

“அற்றார் அழிப்பசி பெற்றான்
தீர்த்தல் அஃ(து) ஒருவன் பொருள்வைப் புழி”

பொருள் பெற்றவன் ஒருவன், வறியவர்களது கொடிய பசித் துன்பததை அறம் கருதித் தீர்க்க வேண்டும். அவ்வறமே, அப் பொருளைத் தனக்குப் பின்னர் உதவுதற்கெனப் பாதுகாப்பாக வைக்கும் பாதுக பர்பு பெட்டகம்.”

பசிப்பிணி என்னும் பாவி.....

பசி வந்தால் என்னென்ன நேரும் என்பதைச் சீத்தலைச் சாத்தனார் தம் மணிமேகலை நூலில் ஒரு பட்டியலிட்டே காட்டுகின்றார்.

“குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புரணை விடுஉம்
நாண்அணி களையும், மாண் எழில் சிதைக்கும்.
புண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பணி என்னும் பாவி.....

தமது குடிப்பிறப்பின் பெருமையை அழித்து விடும். தாம் பெற்ற சிறப்பெல்லாம் நீக்கிவிடும்.

கல்வி என்னும் மிதவையை, விடச்செய்யும், “நாணம்” முதலான அணிகலன்களைச் சிதைக்கும்.

அனைத்திற்கும் மேலாகத் தம் மனைவியொடு அடுத்தவர் தலைவாசலில் நிற்கச் செய்யும் – இத்தகைய கொடுமை செய்வது பசிப்பிணி.

இத்தகைய கொடும்பசி போக்குதற்கென்ற பிறந்தவள் மணிமேகலை, “அமுதசுரவி” என்னும் அட்சய பாத்திரம் ஏந்திக் “காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லோர்” முதலான பலரையும் கூவி அழைத்து அவர்கள் பசி போக்கிய அறச்செல்வி அவள்!.

20.வறுமையின் மூன்று கிளைகள்.

வறுமையினால் ஆராய்ச்சியின்மை, ஒழுக்கமின்மை, விளைவறியாது செயலாற்றும் வேகம் இம்மூன்றும் ஏற்படுகின்றன.

இவற்றால் பலாத்தகார முறையில் ஒழுங்கு மீறி துணிவு கொண்டு பிறர் பொருட்களைச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்ற முறையில் கவர்ந்து கொள்வது திருட்டு ஆகும்.

இதற்குக் கொள்ளை என்ற பெயரும் உண்டு. இந்தக் கொடுஞ் செயலின் விளைவாக மனிதனுக்கு மனிதன் பயன்படுவது, இம்சை செய்வது, கொன்று விடுவது என்பன போன்ற துன்ப விளைவுகள் சமுதாயத்தில் ஏற்பட்டன.

உடல் தேவை உணர்ச்சிகளின் துன்பத்தைத் தாங்கமாட்டாது மனிதன் வேறு வழியில் பொருலுட்களைப் பெற முயல்கிறான்.

உடல் வலிவோ சந்தர்ப்பமே கிடைக்காதபோது அவன் மற்றவரிடம் கெஞ்சிக்கேட்டு பொருள் பெற்று வாழ்கிறான். இந்தச் செயலைப் பிச்சை என்று சொல்கிறோம்.

ஒழுக்கமுள்ள மனிதன் பிற்காலத்தில் திருப்பித் தருவதாக உறுதிகூறி, தன் எதிர்கால உழைப்பை அடகு வைத்து. பிறரிடமிருந்து பொருள் பெறுவதைக் கடன் என்று அழைக்கிறோம்.

திருட்டு. பிச்சை, கடன் என்ற முப் பிரிவுகளும் வறுமை என்பதிலிருந்து தோன்றுகின்றன.

இந்த வறுமை என்ற கொடிய நோய் மனித இனத்தில் சமுதாயத் தொடர்பாகவே நீடித்தும், பல்வேறு வழிகளில் மனித வாழ்வில் சிக்கல்களையும் துன்பங்களையும் விளைவித்துக் கொண்டே இருக்கிறது.

சமுதாயத்திற்குக் கஷ்டமும் நஷ்டமும் விளைவிக்கும் பல கொடுஞ் செயல்கள் பிறக்குமிடம் வறுமையே ஆகும்.

வறுமையை ஒழிக்காமல், திருடுபவனுக்குத் தண்டனை கொடுக்கும் அரசியல் நிர்வாக முறை குறைபாடு உடையதே ஆகும்.

பிறருடைய துன்பங்களை கூர்ந்தறிந்து செயலாற்றும் திறமையைப் பெற்றவன் மனிதன். பிறர் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற அன்புள்ளம் கொண்டவன் மனிதன்.

இருந்தபோதிலும் பலாத்தகாரச் செயல்களின் மூலம் பிறர் பொருள் பறிக்கும் இழிச்செயல்களைச் செய்கிறான். வறுமையும், வறுமை வந்துவிடுமோ என்ற பயமுமே இதற்குக் காரணங்கள் ஆகும்.

21. உலக வறுமை ஒழிப்பு நாள்

உலக வறுமை ஒழிப்பு நாள் (*▯▯▯▯▯▯▯▯▯▯▯▯▯ ▯▯▯ ▯▯▯ ▯▯▯ ▯▯▯▯▯▯▯▯▯▯▯ ▯▯ ▯▯▯▯▯▯▯*) ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 17 ஆம் நாள் உலகமுழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப்பிணியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு 1992 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு நாளை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டது.

உலகில் வறுமை நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நாள் 1987 ஆம் ஆண்டு முதன் முதலாக பிரான்சின் பாரிஸ் நகரில் கடைப்பிடிக்கப்பட்டது.

பசி, வறுமை, வன்முறை, பயம் என்பவற் று க் பழியானோரை கௌரவிக்கும் வைகையில் 100,000 மக்கள் டொர்கேட்ரோவின் மனித உரிமைகள் மற்றும் விடுதலை சதுக்கத்தில் ஒன்றுகூடினார்கள்.

பகுதி 1v.

வறுமையைப் போக்க தீர்வுகள்.

22. வறுமையை அகற்ற விவேகானந்தர் கூறும் வழிகள்
23. வறுமை ஒழிய விவசாயம் வளர வேண்டும்
24. தொழில்கள் வறுமையைப் போக்கும்
25. உழைப்பால் வறுமையை விரட்டியவர்கள்
26. கல்வியால் வறுமையை போக்கலாம்
27. வறுமையைப் போக்க சுரண்டல்களை ஒழிக்க வேண்டும்.
28. வறுமையை ஒழிக்க பன்முக உத்திகள் தேவை
28. சமூகச் சிக்கல்களுக்கான மகரிசியின் தீர்வுகள்.
30. பொருள் வறுமை – அறிவு வறுமை
31. வறுமையற்ற வளமான வாழ்வு
32.. வேதாத்திரி மகரிஷி பார்வையில் வறுமை இல்லை.

22. அறியாமை, வறுமை அகல வழிகாட்டியவர் சுவாமிஜி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரைப் பற்றி எழுதுவதும், பேசுவதும் ‘ஞாயிற்றைச் சங்கிலியால் அளப்பது’ போன்றது. நடக்கக் கூடியதா அது? அந்த ஞானபானுவின் அருகினில் சென்றால், வியந்து, பேச்சிழந்து நிற்க வேண்டியது தான்.

சுவாமிஜியின் முக்கியமான செய்தி என்பது, நான் புரிந்து கொண்ட வரை, பாரத மண்ணில் இருந்து அறியாமை ஒழிப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்பது தான். இக்கருத்துக்களை சுவாமிஜி அதிகம் வலியுறுத்தக் காரணம் என்ன?

சுவாமிஜி பூவுலகில் வாழ்ந்த காலத்தின் (1863- 1902) வரலாற்றுப் பின்னணியை சற்றே திரும்பிப் பார்த்தால் இதற்கான காரணம் தெற்றென விளங்கும்.

1857ல் முதல் இந்திய சுதந்திரப் போரான (கலகம் என்று சிறுமைப் படுத்தப்பட்ட) சிப்பாய்களின் எழுச்சி நிகழ்வுக்குப் பின்னால் தான் இங்கிலாந்தின் முடியாட்சிக்குக் கீழ் பாரதம் கொண்டுவரப் பெறுகிறது. அதுவரை கிழக்கிந்திய கும்பினியின் வணிகர்களின் ஆட்சி.

வணிகம் என்று வந்து விட்டாலே லாபம் தான் முதல் கோட்பாடு. லாபம் அடைய என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தான் வணிக சூத்திரம்.

இங்கிலாந்து நாட்டிற்குத் தேவையான பொருட்களையே உற்பத்தி செய்ய வேண்டும்; விளைவிக்க வேண்டும் என்று மக்கள் விரட்டப் படுகின்றனர்.

மீறுபவர்களுக்கு கசையடி, சிறைத் தண்டனை என்று கெடுபிடி அதிகமாகிவிட்டது. வழக்கமாக இங்கு விளையும் தானியங்கள் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டது. அதன் விளைவு பஞ்சம், பஞ்சம், பஞ்சமோ பஞ்சம்.

1765 துவங்கி 1947 வரை ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் நடந்த பஞ்சக்கோலத்தின் கொடூர வீச்சு புரியும்.

சுவாமிஜி பரிவ்ராஜகராக பாரதம் முழுதும் பயணித்தபோது லட்சக் கணக்கான மனிதர்கள் எலும்பும் தோலுமாக உடலில் தெம்பு இல்லாமல், உள்ளத்தில் சோர்வைச் சுமந்துகொண்டு நடைப் பிணங்களாக இருப்பதைக் காண்கிறார்.

சுவாமிஜியின் கனிந்த இதயத்தில் இரக்கம் சுரக்கிறது. அவர்களுடைய நிலை கண்டு ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்.

“கஞ்சி குடிப்பதற்கு இலார் அதன்
காரணங்கள் இவை என்னும் அறிவும் இலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே -நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்துத்
துஞ்சி மடிகின்றாரே இவர்
துயர்களைத் தீர்க்க ஓர் வழி இல்லையே…”

என்று மகாகவி பாரதி பரிதவிப்பது சுவாமிஜியின் எதிரொலியாகத் தான்.

“விதவையின் கண்ணீரைத் துடைக்க முடியாத, ஓர் அனாதையின் வாய்க்கு ஒரு ரொட்டி துண்டு கொடுக்க முடியாத கடவுளோ, மதமோ என் நம்பிக்கைக்கு பாத்திரமானதல்ல..” என்ற சொற்கள் சுவாமிஜியின் வாக்கிலிருந்து வருகிறது என்றால், நமது ஆஷாடபூதிகள் மதம், சாஸ்திரம் என்ற பெயரால் சமூகத்தில் ஏற்படுத்தியிருந்த குழப்பங்களால் தானே?

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்”

-என்ற திருவள்ளுவரின் (குறள்- 1062) வாக்கல்லவா இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் சுவாமிஜியின் திருவாக்காக வெளிப்படுகிறது?

அதனால் தான் எல்லா வசதிகளும் கிடைத்தும் சுவாமிஜியால் அதனை ஏற்க முடியவில்லை.

“என் பாரதத்தின் கோடிக் கணக்கான சகோதரர்கள் ஒருவேளை சோற்றுக்கு அலைந்து திரியும் போது என்னால் சுகபோகத்தை எப்படி அனுபவிக்க முடியும்?” என்று அமெரிக்காவில் இரவு நேரத்தில் கண்ணீர்விட்டுக் கதறுகிறார் சுவாமிஜி.

அறியாமை இருளை அகற்ற வேண்டும் என்பதில் சுவாமிஜி முனைப்புக் காட்டினார். ஒவ்வொரு குடிசைக்கும் கல்வி சென்று அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

1890ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தொடர்ச்சியாக 4 ஆண்டுகள் இந்தியா முழுவதும் பரிவ்ராஜகராக பயணம் மேற்கொண்டார்

சுவாமிஜி. உண்மையான பாரதம் எது? அது ஏன் இழிநிலைக்கு ஆளானது? மீண்டும் அதை உயர்த்துவது எப்படி? இதுபோன்ற பல கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிப்பதே சுவாமிஜியின் பயணத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது.

அப்போது எல்லாத் தரப்பு மக்களையும் நேரடியாகச் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றார். பாரதத்தின் பொருளாதார நிலை, அதை ஆட்டிப் படைக்கும் கலாச்சார, பண்பாட்டு சக்திகள் போன்றவற்றை கண்கூடாக பார்த்து புரிந்துகொண்டார்.

நாட்டின் வறுமையையும், அதன் காரணமாய் உண்டான இழிநிலையையும் கண்டு வருந்திய சுவாமிஜி, பாரதத்தின் நிலையை உயர்த்த தீவிரமாகச் சிந்தித்தார்.

பாரதத்தின் இழிநிலைக்கு மிக முக்கியக் காரணமாக மதம் ஒன்றையே அன்றைய சீர்த்திருத்தவாதிகள் சொல்லி வந்தார்கள். ஆனால் சுவாமிஜி **‘மதம் காரணமல்ல…வேதாந்தத்தின் உயரிய கருத்துக்களும், உண்மைகளும் சாதாரண மக்களுக்குப் புரியும் விதத்தில் சென்றடையவில்லை’** என்று உறுதியாகக் கூறினார்.

‘வேதாந்தத்தின் உயரிய கருத்துக்கள் செயல்முறை விளக்கத்தோடு சாதாரண மக்களுக்கு புரியும்படி சென்றடைந்தால், அவை மக்களுக்குள் இருக்கின்ற ஆற்றலை வெளிக்கொண்டு வரும். அந்த மாபெரும் ஆற்றல் அவர்கள் தங்கள் பிரச்னைகளை தாங்களே தீர்த்துக் கொள்ள வழிவகை செய்யும்’ என்று நம்பினார்.

Sri Ramakrishna

(அற்புதமான சீடனைப் பெற்ற மகத்தான குருநாதர்
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்)

ஆனால் அன்று நம் பாரத மக்கள் அறியாமையினாலும், வறுமையினாலும் சிக்கித் திணறிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சூழலில் வேதாந்த உண்மைகளை அவர்களுக்கு போதிப்பதால் எந்த பிரயோஜனமும் இல்லை. முதலில் வறுமையைப் போக்க வேண்டும். அடுத்து அறியாமையைப் போக்க கல்வி கொடுக்க வேண்டும்.

அதற்கு அடுத்தகட்ட நடவடிக்கையாகத் தான் வேதாந்த உண்மைகள் அவர்களுக்கு மனதுக்குள் ஆழமாக சென்றடையும் என்பதைத் தெரிந்து கொண்டார் சுவாமிஜி.

வயிறு பசியால் காயும்போது, அறிவு எப்படி முழுத் திறனுடன் செயல்படும்? ஆகவே பசி, பட்டினி, அறியாமை இவற்றில் இருந்து மக்களுக்கு விடுதலை கொடுக்க என்ன வழி என ஆராய்ந்தார் சுவாமிஜி.

வறுமை ஒழிய பணம் வேண்டும், அறியாமை ஒழிய கல்வி வேண்டும். ஆக, வறுமையும், அறியாமையும் ஒழிய பணம் வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார் சுவாமிஜி.

பணம்…பொருட்செல்வத்தைப் பெற மேலைநாடுகளையே நம்பியிருக்க வேண்டிய சூழல் அன்று. ஆனால் யாசகம் பெற

விரும்பாத சுவாமிஜி, பண்டமாற்று முறையின் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டார்.

நம்மிடம் இருக்கும் ஒன்றைக் கொடுத்து, அதற்குப் பதிலாக அவர்களிடம் உள்ள ஒன்றைப் பெற்றுக் கொள்வது என்பது தான் அவரது யோசனை.

வறுமை, பசி, பட்டினி, அறியாமை இவற்றால் நம் நாடு கட்டுண்டு கிடந்தாலும், நம்முடைய நாட்டின் முனிவர்களும், யோகிகளும் அளித்துச் சென்ற ஆன்மிகச் செல்வங்களும், வேதாந்த உண்மைகளும் மிகப் பெரிய சொத்தாக இருந்தன.

பொருட்செல்வத்திலும், கல்வியிலும் மேம்பட்டிருந்த மேலைநாட்டவர்கள் வேதாந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்தனர்.

அவர்களுக்கு வேதாந்தத்தைக் கற்பித்து, அவர்களிடம் இருந்து செல்வத்தைப் பெறுவது என முடிவு செய்தார் சுவாமிஜி.

அந்தப் பொருட்செல்வத்தை வைத்து நம் நாட்டவரின் வறுமையைப் போக்கி, கல்வி அளித்து, அறியாமையை நீக்கிவிட முடியும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்கான தருணத்தை நோக்கிக் காத்திருந்தார்.

சுமார் 4 வருடங்கள் அமெரிக்காவில் வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பிவிட்டு 1897, ஜனவரி மாதம் இந்தியா திரும்பினார் சுவாமிஜி.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்தபடியே சென்னையிலும், கொல்கத்தாவிலும் எதிர்காலத்தில் தோற்றுவிக்கப்பட வேண்டிய அமைப்புக்களுக்குத் திட்டங்களைத் தீட்டினார்.

அந்த அமைப்புக்கள் செய்ய வேண்டிய பணிகளாக, கைகளில் தேசப்படங்கள் (மேப்), ரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை எடுத்துச்சென்று ஒரு சிறிய கூட்டத்தைக் கூட்டி பாடம் நடத்தச் சொன்னார்.

வேதாந்தத் தத்துவங்களைப் பரப்ப இதழ் ஆரம்பிக்கும் திட்டத்தையும், அதனோடு கூட பெருங்கூட்டத்தினருக்கு கல்வி புகட்டுவதையும் முன்வைக்கிறார்.

“வயிற்றுக்குச்சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கெலாம்!
பயிற்றிப் பல கல்வி தந்து
இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்!”

-என்ற மகாகவியின் வாக்கும் சுவாமிஜியின் தாக்கத்தால் விளைந்ததாகும்.

தான் எண்ணியபடி இந்தியாவின் சொத்தான வேதாந்த அருட்செல்வத்தை மேலைநாடுகளுக்குக் கொடுத்து, அவர்களிடம் இருந்து பொருட்செல்வத்தைப் பெற்று தன் லட்சியத்தை நிறைவேற்ற சுவாமிஜி உருவாக்கிய அமைப்பு தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயக்கம்.

இன்று உலகெங்கும் பரந்து விரிந்து மக்களின் வறுமை, அறியாமை போன்றவற்றைப் போக்கவும் ஆன்மிக ஞானத்தைப் பரப்பவும் அவர் உருவாக்கிய பாதையில் பாடுபட்டு வருகிறது ராமகிருஷ்ணர் இயக்கம்.

23. வறுமை ஒழிய விவசாயம் வளர வேண்டும்

வேதாத்திரி மகரிஷி தொழில்களின் சிறப்பு பற்றி குறிப்பிடும் போது,

“உணவு, உடை, வீடு என்ற
  முப்பொருளைத் தோற்றும்
உழைப்பாளியே முதல்வன்
  மற்றவர்கள் எல்லாம்
உணவு முதல் முப்பொருளைத்
  தோற்று கின்றவர்க்கு
உதவுதொழில் புரிவோரே
  உண்மையினை உணர்வோம்.”

என்று கூறுவார்.

உணவு, உடை, இருப்பிடம் இம் மூன்றும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் ஆகும்.

இவைகளோடு தொடர்புறுகிற உழைப்புச் சார்ந்த தொழில் செய்பவர் “முதல்வன்” என மகரிஷி சிறப்பிக்கின்றார். மற்றவர்கள் உதவ தொழில் புரிபவர் என்று குறிப்பிடுகிறார்.

மனிதரின் அடிப்படை தேவையை உணர்ந்து ஒவ்வொருவரும் தம்பங்கு உழைப்பை வழங்க வேண்டும் என்பது மகாத்மா காந்தியின் சர்வோதயச் சிந்தனையாகும்.

ஆகவே இவர் உடை சார்ந்த நூல் உற்பத்திக்காகத் தம் பங்கிற்கு கதர் இராட்டினம் சுழற்றினார். முன் மாதிரியாக வாழ்ந்தும் காட்டினார்,

முதல் தொழில்.

ஆறு தொழில்கள் எனப் பண்டைக் காலத்தில் வரையறுக்கப் பெற்றுள்ளது. ஆதிகாலத்தில் உழவு முதன்மைப் படுத்தப் பெற்றுள்ளமையை நாம் பல படித்திருக்கிறோம்.

இந்த அறுவகைத் தொழில் பிற்காலத்தில் பல்வேறாகப் பெருகியுள்ளன. இச்சூழலில் மகரிஷி,

"தொழில் மூன்று கடமை தவம் கலை ஆராய்ச்சி
தொண்டு பணி ஆளுமை போதனை பத்தொன்று
செயல்களிலே முதற் சிறப்பு பயிர்த் தொழிற்கே
சீருயர்த்தும் போதனையோ அடுத்த மேன்மை."

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. உணவை உற்பத்தி செய்யும் பயிர்த் தொழில் பண்டைக் காலத்திலிருந்து தலைமைத் தொழிலாக இருக்கிறது. இதனை மகரிஷியும் வலியுறுத்துகிறார்.

"உழுதுண்டு வாழ்பவரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்."

என்பது வள்ளுவர் வாக்காகும்.

முன்னொரு காலத்தில் யானை கட்டி போரடித்த நம்நாட்டில் இன்று விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்த பயிருக்கு பல்வேறு பிரச்னை என்று கூறி கண்ணீர் வடிக்கின்றனர்.

உலகம் முழுவதும் தினமும் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை 100 கோடி இருக்கும் என ஐ.நா.,அறிக்கை கூறுகிறது.

இதில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகை இந்தியாவில் உள்ளது. அதாவது 35 கோடிப்பேர் இந்தியாவில் தினமும் பசியால் வாடுகின்றனர்.

உலகில் தினமும் 17 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் இறப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 6 விநாடிக்கு ஒரு குழந்தை இறக்கிறது.

பிரச்னை எங்கே உள்ளது?

ஒரு பக்கம் செல்வத்தில் செழித்தோங்கும் குழந்தைகள் உடல் எடை அதிகரிப்பால் அவதிப்படுகின்றனர். மறுபக்கம் ஏழைக்குழந்தைகள் பசிக்கு உண்ண முடியாமல் இறக்கின்றனர்.

திட்டமிட்ட பகிர்வு இல்லாமையே இதற்கு முக்கிய காரணம்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த இந்தியாவில் 35 கோடிப்பேர் பசியால் வாடும் நிலையில் போதுமான அளவு உணவை சேமிக்க முடியாமல் மத்திய, மாநில அரசுகள் தவிக்கின்றன.

இந்தியாவில் ஆண்டிற்கு ஒரு கோடியே 64 லட்சம் டன் உணவு தானியங்கள் வீணாவதாக இந்திய உணவுக்கழகம் அறிவித்துள்ளது. “நாடு முன்னேறுகிறது, நாடு முன்னேறுகிறது” என திரும்ப, திரும்ப விளம்பரம் செய்யப்படுகிறது.

ஒரு பக்கம் முன்னேற்றம் இருந்தாலும், பெரும்பான்மை மக்களின் உண்மை நிலை அதற்கு எதிர்மாறாக உள்ளது. நம் நாட்டில் 45 கோடி மக்கள் தினமும் 447 ரூபாயில் வாழ்க்கையை ஓட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என ஒரு ஆய்வு கூறுகிறது.

அழியும் விவசாயம்:

அரசின் புதிய பொருளாதார கொள்கை காரணமாக நாட்டின் அடிப்படை கட்டமைப்பான விவசாயம் அழிந்து கொண்டு வருகிறது.

விவசாயம் செய்பவர்கள் அந்த தொழிலில் நம்பிக்கையிழந்து புலம் பெயர்ந்து வருகின்றனர்.

கடன் வாங்கிய விவசாயிகளின் எண்ணிக்கை பொருளாதார சீர்திருத்தத்தின் முதல் 10 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

வறுமை ஒழிப்பு திட்டம்:

நேரு காலத்தில் “சமுதாய வளர்ச்சி திட்டம்” என்ற பெயரில் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்திரா காலத்திலும் “ஏழ்மையை ஒழிப்போம்” என்ற லட்சியத்திற்கு முன் உரிமை வழங்கப்பட்டது.

ஆனால் அடுத்தடுத்து வந்த ஆட்சிகளில் அத்தகைய திட்டங்கள் அனைத்தும் கை விடப்பட்டன. ஆயினும் அதே சமயத்தில் 2009 ல்

பல்வேறு தொழிலதிபர்களுக்கு இரண்டு லட்சம் கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

இந்தியாவில் கிராமப் புற வேலை வாய்ப்பிற்கு வரப்பிரசாதமாக புதிய அத்தியாயம் படைக்கும் என்று கருதப்பட்ட “மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம்” முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுத்தப்பட்டதா என்பது கேள்விக்குறியே.

பணக்காரர்களிடம் உலகம்:

உலகம் முழுவதும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் ஒரு நாள் வருமானம் 1.25 டாலர் (சுமார் 80 ரூபாய்). உலக பணக்காரர்களில் 20 சதவீதம் பேர் உலகின் மொத்த செல்வ வளங்களில் 86 சதவீதத்தை கைப்பற்றி உள்ளனர்.

மீதமுள்ள மக்களுக்கு கிடைப்பது 14 சதவீதம் மட்டுமே. ஆட்சியாளர்களோ இந்தியாவில் 20 சதவீதம் மக்களின் நலன் பற்றி கவலைப்படும் அளவிற்கு 80 சதவீதம் மக்களின் நலம் பற்றியும் அவர்களின் ஏழ்மையை போக்குவது பற்றியும் கவலைப்படுவதில்லை.

எனவே 60 சதவீதத்திற்கு மேல் விவசாய நிலங்களை கொண்ட கிராமங்களை ஒன்றிணைத்து விவசாய பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நான்கு வழிச்சாலை திட்டத்திற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம், கிராம இணைப்பு சாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

குறைந்த வட்டியில் கடன் மற்றும் இதை பெறுவதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்பட வேண்டும். சிறு, சிறு இடங்களில் எவ்வாறு பயிர் செய்யலாம் என்பதற்கான ஆராய்ச்சியை மேம்படுத்தப்படவேண்டும்.

பொதுவிநியோக திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். உணவுப்பொருள் பதுக்கலை தடை செய்ய வேண்டும்.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிகையை பொறுத்து ரேஷன் கடைகளில் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். போலி ரேஷன் கார்டுகளை அகற்ற வேண்டும். பிறப்பு, இறப்பு விபரங்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும்.

உணவுப்பொருட்களை விற்பனை செய்ய நேரடி சந்தைகள் அமைக்கப்பட வேண்டும். இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை தடுக்கவேண்டும்.

ஊழல் பேர்வழிகளையும் பதுக்கல்காரர்களையும் கடுமையான சட்டம் மூலம் தண்டிக்க வேண்டும்.

விவசாயபொருட்களை மாற்றம் செய்யப்பட்ட மதிப்புக்கூட்டிய நிலையில், விற்பனை செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி வேண்டும்.

இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்த வேண்டும். குளம், கால்வாய், கண்மாய்கள், அனைத்து நீர் நிலைகளும் நன்கு காலத்தே பராமரிக்கப்பட வேண்டும்.

இந்த பணிகள் செய்தால் இந்திய விவசாயத்தில் வளர்ச்சியடைவது மட்டுமல்ல விவசாயத்தை நம்பியிருக்கும் 75 சதவீத மக்களின் வறுமையும், பசியும் தீரும்.

24. தொழில்கள் வறுமையைப் போக்கும்.

ஏழை பாதிரியாரின் மகனான "பாவ்லோ" வறுமையில்தான் வாழ்ந்தார். இருந்தாலும் இவரது விடா முயற்சியை வறுமையால் முறியடிக்க முடியவில்லை.

இந்த ரஷ்யர் மருத்துவத்திற்கான நோபல் பரிசவென்றார். 55 வயதுக்குப் பிறகே மூளை நரம்பு மண்டலம் பற்றிய ஆராய்ச்சியி லும் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் உணவை நினைத்ததுமே வாயில் உமிழிநீர் சுரப்பது ஒரே அடிப்படையில்தான் என்று நிரூபித்துக் காட்டியதற்காக பாவ்லே, நோபல் பரிசு பெற்றார்.

உழைப்பு, உழைப்பு. உழைப்பு என்பது பெயர்ச்சொல்லாக ஒரு செயல் அல்லது தொழிலைக் குறிக்கும்

உழைத்தல் என்பது வினைத் சொல்லாக தொழில் செய்வதைக் குறிக்கும்.

மக்கள் வாழ்வு சிறக்கப் பொருள் வேண்டும். பொருள் பெருகத் தொழில் சிறக்க வேண்டும்.

"வினையே ஆடவர் கக உயிரே" என்பது நமது முன்னோர்கள் சிந்தனையாகும்.

பண்டைய தமிழ்ச் சமூகத்தில் வினை போற்றப் பெற்றிருப்பதை அச்சிந்தனை வழி உணரலாம். தொழில் பற்றி ம கரி சி,

“இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும்

எச்செயலும் தொழிலாகும் ஏனையவை பணிவகையே”

என்று குறிப்பிடுவார்.

இயற்கையைச் சார்ந்து வளமாக்குகிற செயல் தொழில் என்றும், மற்றயவை பணிவகை எனவும் மக ரி சி குறிப்பிடுகிறார்.

கட்டாயம் கற்க வேண்டிய தொழில்கள் : மகரிஷி

1) விவசாயம், 2) நெசவு, 3) சமையல், 4) வீடுகட்டல், 5) இயந்திரங்கள், விஞ்ஞானக் கருவிகள் இவற்றின் நுட்பங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அவற்றை இயக்குதல், உற்பத்தி செய்தல் ஆகிய ஐந்து அடிப்படைத் தொழில்களையும், ஒவ்வொருவரும் இருபது வயதுக்குள்ளாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் யார் யாருக்கு எந்தெந்த தொழிலில், கலைகளில் விருப்பம் இருக்குமோ, அவைகளைக் கற்றுத் தேற வேண்டும்.

உலக மக்கள் வாழ்க்கைத் தேவைகளை அறிந்து அவரவர்களின் திறமை சக்திகளைப் பயன்படுத்தப் புதிய முறையில் மனித குல வாழ்க்கையை இன்பமயமாக்கவும் தகுந்த முறையில் நாம் தொழில் கல்வி முறையை வகுக்க வேண்டும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும், மனித வாழ்விற்கு இன்றியமையாத மேலே காட்டியுள்ள ஐந்து அடிப்படைத் தொழில்களையும் கட்டாயம் கற்கவும், அவரவர்களின் சிறப்புத் திறமை, ஆர்வம் இவைகளுக்கேற்ப குறிப்பான வேறு தொழில்கள் அல்லது கலைகளைக் கற்கவும் வசதி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும், தொழில் கல்வி கற்கும் காலத்தில் மனோதத்துவம், சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் என்ற ஐவகை வாழ்க்கைத் தத்துவத்தையும் வயதுக் கேற்றபடி அறிந்து, உயர் நோக்கச் செயல் திறமைகளுடையவர்களாக வேண்டும்.

மனித இனத்திற்கு வாழ்க்கை - அறிவும், செயல் - திறமையும் தான் செல்வமாகும். அந்தச் செல்வம் குழந்தைகளிடத்திலே சிறுவயது முதலே வளர வேண்டும்.

இதுவரையில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றங்களின் இறுதிப் பயனாக இருக்க வேண்டியது உயர்தர முறையில் குழந்தைகளை வளர்ப்பதேயாகும்.

25. உழைப்பால் வறுமையை விரட்டியவர்கள்.

உழைத்துப் பாடுபடும் மனிதர்களைக் கண்டால் தெய்வத்திற்கு மிகவும் பிடிக்கும்" என்கிறது ரிக் வேதம்.

உழைக்கின்ற கைகளாலேயே உலகத்தை புதுமுறையில் மாற்ற முடியும்.

சோம்பலும், உழைப்பின்மையும் வறுமைக்கு காரணம்.

திபெத்தில் ஒரு பொதுவுடமைக்கார மன்னர் இருந்தார். தன் நாட்டில் வறுமையே இருக்கக்கூடாது என்று விரும்பினார்.

தன் நாட்டில் இருக்கின்றவர்களுடைய அனைத்து செல்வத்தையும் திரட்டி ஒரே இடத்தில் குவித்து சரிசமமாக எல்லாக் குடும்பங்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்.

ஒரு முறையல்ல, மூன்று முறை இதே மாதிரி பிரித்துக் கொடுத்தார்.

அப்போதும் சில குடும்பங்கள் பணக்காரர்களாக ஆனார்கள். சிலர் ஏழையாகத் தேய்ந்து போனார்கள். இது குறித்துத் தாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து தன் முயற்சியைக் கைவிட்டார்.

கவுதம் சென், தான் எழுதிய "விவேகானந்தருடைய மனம்" என்கிற புத்தகத்தில் இந்தச் செய்தியைக் குறிப்பிட்டுருக்கிறார்.

இதனால் நாம் அறிந்து கொள்வது என்ன? உழைப்பும் வேண்டும். சோம்பேறிகள், உழைக்க முடியாதவர்கள் ஏழைகளாகத் தான் இருப்பார்கள்.

வறுமையில் தான் இருப்பார்கள். அவர்களது வறுமைக்கு அவர்களது சோம்பேறித்தனமும், உழைப்பின்மையும் தான் காரணம்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வறுமை ஒரு காரணமல்ல. வறுமையை அயராத உழைப்பினால் விரட்டி விடலாம்.

வறுமையைச் செம்மையாக்கிச் சாதனைகள் படைத்தவர்களைப் பாருங்கள்.

- ஏழை நெசவுத் தொழிலாளி வேதாத்திரி மகரிஷி வறுமையை தனது உழைப்பால் போக்கியவர்.
- எடிசன், ரைட் சகோதரர்கள், மேரி கயூரி, மைக்கேல் பாரடே, கலிலியோ போன்ற விஞ்ஞானிகள் வறுமையில் வாழ்ந்து – வறுமையை உழைப்பால் தகர்த்தவர்கள்.
- ஹென்றிபோர்டு, ஜி.டி.நாயுடு (ஓட்டலல் சர்வர்) வறுமையைச் சந்தித்தவர்கள்.
- “டி” யைக் கண்டுபிடித்த லிப்டன் வறுமையில் உழன்றவர்.
- சாதாரண மீனவக் குடும்பத்தில் பிறந்தவர்தான் அப்துல்கலாம்.
- படுக்கக்கூட இடம் இல்லாத வீட்டில் வசித்தவர் டாக்டர் அம்பேத்கார்.
- லண்டன் தெருக்களில் உண்ண உணவின்றி ஒரே ஒரு கிழிந்த ஆடையை உடுத்திக் கொண்டு திரிந்த பெர்னாட்ஷா வறுமையில் உழன்றவர்.
- அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன், ஆண்ட்ரு ஜான்சன் கொடிய வறுமையில் இருந்தவர்கள்.
- உலகக் கோடீஸ்வரர் “ராக்பெல்லர்” கிளார்க்காகக் கஷ்டப்பட்டவர்தான்.
- “தாய்” என்ற புகழ்பெற்ற நூலைப் படைத்தவர் ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கி செருப்புத் தைக்கும் கடையில் வேலை பார்த்தவர்.
- இளமையில் கஷ்டப்பட்டு காப்பிக் கடை நடத்தியவர்தான் மலேசியப் பிரதமர் டாக்டர் மாதீர் முகமது காய்.
- மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு கூலியாளின் புதல்வர். முதலாளி வீட்டில் கார் கழுவுதல் போன்ற எடுபிடி வேலை செய்தவர்.
- ரஷ்யப் புரட்சியாளர் “லெனின்” வறுமையான குடும்பத்தில் தோன்றியவர்.
- வால்ட் டிஸ்னி ரயிலில் செய்தித்தாள் விற்றும், ஆம்புலன்சில் உடல் சுமப்பவராகவும் கஷ்டப்பட்டவர்தான்.
- முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கல்வி கற்கக்கூட வசதியில்லாத வறுமையில் வாழ்ந்தவர்.
- முன்னாள் முதல்வர் காமராஜ் சிறிய வயதில் பெட்டிக் கடையில் வேலை பார்த்தவர்.
- முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இளமையில் வறுமையில் வாடியவர்.
- வானதி பதிப்பகம் திருநாவுக்கரசு, வி.ஜி. பன்னீர்தாஸ் போன்றவர்கள் வறுமையை எதிர் கொண்டவர்கள்.
- நீதிமன்றத்தில் பியூனாக இருந்தவர்தான் மகாராஷ்டிர மாநில முன்னாள் முதல்வர் சுசீல்குமார் ஷிண்டே.

- சோவியத் அதிபர் கோர்பச்சேவ் மெக்கானிக்காகத் தான் வாழ்க்கையை தொடங்கினார்.
- ஆனந்தவிகடன் அதிபர் எஸ்.எஸ்.வாசன் கொடிய வறுமையில் வாழ்ந்தவர்தான்.
- மகாகவி பாரதியார் வறுமையாகவே வாழ்ந்தவர்தானே!

இதனால் தான் வேதாத்திரி மகரிஷி சொல்கிறார். “சமுதாயத்தில் பொருள் வறுமை கிடையாது… அறிவு வறுமைதான் இருக்கிறது.”

ஹாலிவுட் சினிமா உலகின் ராணியாக விளங்கியவர், நடிகை மர்லின்மன்றோ. அவருக்கு இணையாக அகில உலகப் புகழ் பெற்ற நடிகை வேறு எவரும் இல்லை.

செல்வத்தில் புரண்டு செருக்கோடு வாழ்ந்தவர், மர்லின் மன்றோ. அவருடைய கடைக்கண் பார்வைக்காக எத்தனையோ கோடீசுவரர்கள் தவம் கிடந்தார்கள்.

வாழ்க்கையின் பிற்பகுதியே மன்றோவுக்கு இப்படி அமைந்திருந்தது. ஆனால் இளம் பருவ வாழ்க்கையோ வறுமையும், சோதனைகளும் நிறைந்ததாக இருந்தது. மன்றோவைப் பற்றி வர்ணிப்பது என்றால் தங்க நிற தலைமுடி, எப்போதும் புன்னகை பூத்த முகம், தங்கச் சிலை போன்ற உடல் என்பார்கள்.

மர்லின் மன்றோ 1926ம் ஆண்டு ஜுன் மாதம் 1ந்தேதி அமெரிக்காவில் உள்ள லாஸ்ஏஞ்சல்ஸ் நகர ஆஸ்பத்திரியில் பிறந்தார்.

மர்லின் மன்றோ தந்தை அவள் பிறக்கும் முன்பே ஒரு கார் விபத்தில் இறந்துவிட்டார். அவர் பிறந்தபோது அம்மாவுக்கும் உடல் நிலை சரியில்லை. எனவே அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டார்.

வீட்டு வேலைகள் செய்யும் பருவம் வந்ததும் அனாதை விடுதியை விட்டு வெளியேறினார். பல வீடுகளில் பாத்திரம் துலக்குவது போன்ற சிறிய வேலைகளை பார்த்து வந்தார்.

ஒவ்வொரு வீட்டிலும் இருந்து பந்துபோல் அங்கும் இங்கும் அடித்து விரட்டப்பட்டார். கல்யாணம் ஆன பிறகாவது வாழ்க்கையில் நிம்மதி ஏற்படுமா என்ற ஆசையில் 16வது வயதில் ஜேம்ஸ் என்ற வாலிபரை

மணந்தார்.

ஆனால் அவரும் ஒழுங்கானபடி வேலை செய்து பிழைக்காததால் தகராறு ஏற்பட்டது. 1 வருடத்தில் விவாகரத்து செய்தார். அதன்பின்பு விமான கம்பெனியில் `பாரசூட்' ரிப்பேர் பார்க்கும் வேலை செய்தார்.

அதன் பின் படம் வரைவதற்கு மாதிரி (மாடல்) பெண்ணாக நிற்க முயற்சித்தார். ஆனால் அதற்குகூட லாயக்கு இல்லை என்று அவரை எல்லோரும் விரட்டினார்கள்.

எனவே கையில் பணம் இல்லாமல் பல நாட்கள் பட்டினி கிடந்தார். விளம்பரங்களுக்கு நீச்சல் உடையில் தோன்றுவது மூலம் காலம் தள்ளினார்.

அதன் பிறகு நடிப்பு ஆசையால் ஆலிவுட் நகரில் உள்ள சினிமா பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார்.

வாடகை பணம் கொடுக்காததால் தங்கி இருந்த வீட்டை விட்டு துரத்தினார்கள். இருக்க இடமின்றி நடு ரோட்டில் நிற்கவேண்டியது ஆயிற்று.

எனவே ஒரு காலண்டருக்காக நிர்வாணமாக “போஸ்” கொடுத்தார். இதில் 250 ரூபாய் வருமானம் வந்தது. அதை வைத்துக்கொண்டு மீண்டும் சினிமா உலகில் புக முயற்சி செய்தார்.

பத்திரிகையில் வந்த மன்றோவின் படத்தைப் பார்த்துவிட்டு அவரை ஒப்பந்தம் செய்ய அழைத்தார்கள் 2 படக்கம்பெனிக்காரர்கள். ஆனால் முதல் படத்தில் பேசக் கிடைத்த வசனம் ஒரு ஒரே வார்த்தை.

அதுவும் படம் வெளிவரும்போது வெட்டப்பட்டுவிட்டது. ஆனால் படங்களில் ஒரு நிமிடம் வந்தாலும் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தார்,

மர்லின். படம் வரையக்கூட லாயக்கு இல்லை என்று வர்ணிக்கப்பட்ட மர்லின் மன்றோ ரசிகர்களால் சினிமா உலக தேவதையாக வர்ணிக்கப்பட்டார்.

மர்லின் மன்றோவின் கவர்ச்சியான உடல் அழகில், நடை அழகில் ரசிகர்கள் மயங்கினார்கள்.

பல படங்களில் கதாநாயகியாக நடித்தார். பெரிய படக்கம்பெனி வருடத்திற்கு 55 லட்சம் ரூபாய் வீதம் 7 வருடத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்தது.

மர்லின் மன்றோவின் சொந்தப் பெயர் நார்மாஜின் டென்சன் என்பது. 3 முறை திருமணம் செய்தார். மூவரையும் விவாகரத்து செய்துவிட்டார்.

முதல் கணவர் ஜேம்ஸ், போலீஸ்காரர். 2வது கணவர் கால்பந்து வீரர். பெயர் ஜேர்டிமாக்கியா. 3 வது கணவர் சினிமா படத்தயாரிப்பாளர் ஆர்தர்மில்லர்.

மர்லின் மன்றோவுக்கு பிடித்தமான நடிகர் மார்லன் பிராண்டோ. 3 வது கணவரான மில்லருடன் வாழ்க்கை நடத்தும் போது மர்லின் மன்றோவுக்கு 2 தடவை கருச்சிதைவு ஏற்பட்டது.

குழந்தை பிறக்கவேண்டும் என்று மிகவும் விரும்பினார். ஆனால் கடைசிவரை அவருக்கு குழந்தை இல்லை.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடிக்கும், மன்றோவுக்கும் காதல் இருந்தது என்று, இருவருடைய மறைவுக்குப் பிறகு பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகள் வெளிவந்தன.

கென்னடியின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் மர்லின் மன்றோ தவறாமல் அவரை சந்தித்து வாழ்த்துக் கூறுவது வழக்கம் என்றும், இவர்களுடைய காதல் விவகாரம் கென்னடியின் மனைவி ஜாக்குலினுக்குத் தெரிந்து அவர் கென்னடியுடன் ஆத்திரத்துடன் சண்டை போட்டார் என்றும் பத்திரிகைகள் எழுதின.

எப்படி இருப்பினும், மர்லின் மன்றோவுக்கு இணையான உலகப்புகழ் பெற்ற நடிகை அவருக்கு முன்பும் இல்லை; பின்பும் இல்லை.

வறுமை நிலைக்கு பயந்து விடாதே
வறுமை நிலைக்கு பயந்து விடாதே திறமை இருக்கு மறந்து விடாதே

பசியென்று வந்தால்!

தினமும் ஒரு பிச்சைக்காரன் கலைவாணர் வீட்டு வாசலில் வந்து நிற்பாராம். இவரும் பணம் கொடுப்பார்.

“அவன் உங்களை ஏமாற்றுக்கிறான்” என்று வீட்டில் உள்ளவர்கள் சொல்ல, “அவன் என்னை ஏமாத்தி என்ன மாடி வீடா கட்டப்போறான். வயித்துக்குத்தானே சாப்பிடப்போறான். ஏமாத்திட்டுப் போகட்டுமே” என்றாராம்!

26. கல்வியால் வறுமையைப் போக்கலாம்.

மானுட வாழ்வில் - சிந்தனை, சிக்கனம், சீர்திருத்தம் என்று மூன்று நிலைபாடுகளும் எக்காலத்தும் தேவைப்படுகின்றன.

இக்கருத்தின்படி கல்வி முறையிலும் புதிய திருத்தங்களும் மாற்றங்களும் செய்ய வேண்டியது அவசியமாகும் என்பதை வேதாத்திரி மகரிஷி வலியுறுத்துகிறார்.

கல்வி மாற்றத்தினால் வறுமை, அறியாமை ஆகியவற்றை அகற்றி விடலாம்.

1. கல்விக்கு மகரிஷி தரும் விளக்கம்

எந்த கல்வி மக்களின் வாழ்வை இனிதாக்கி, உள்ளத்தில் எழும் கேள்விகளுக்கெல்லாம் அறிவு விடை கண்டிடுமோ அக்கல்விதான் சிறந்த கல்வியாகும் என்கிறார் மகரிஷி.

இயற்கையின் அமைப்பை உணர்ந்து வாழ்வை நடத்தும் முறைதான் சீரமைந்த வாழ்வு.

இதனையறிந்து இனிமையாக வாழும் "அறிவாட்சித் திறத்தை" உருவாக்கி உயர்த்திக் கொள்ளும் பயிற்சியே "கல்வி" எனப்படும்.

கல்வி என்றால் "எழுத்து, தொழில், ஒழுக்கம், ஞானம் கற்பதும் பின் வழுவாது நிற்பதும் ஆம்" என மகரிஷி கூறும் கருத்து, வள்ளுவர் பார்வையில்,

> "கற்க கதடற கற்பவை கற்றபின்
> நிற்க அதற்கு தக"

கல்வியில் சிறந்தோரே ஆட்சியேற்க வேண்டும்.

அப்பொழுதுதான் ஒற்றுமையயும் அன்பும் நிலவும் எனும் கருத்தை, கல்வியிலே மக்கள் தேர்ந்து, கருத்து, உடல், அரசு, பொருள் நலம் உணர்ந்து, கல்வி மிக்கோர் ஆட்சி ஏற்று கடமைகள் புரிந்திட்டால் எங்கும் அன்பு ஒங்கும்.

மனித இனம் இன்ப துன்ப அனுபவத்தால் பெற்ற மதிநுட்பம், செயல் திறமை. வாழ்க்கை முறை இவற்றைத் தனிமனிதன் கற்றுணர்ந்து வாழ்வில் வளம் காணத்தக்கதாக அமையும் ஒரு சாதனமே கல்வி என்றும் கல்வியின் பண்பை சுட்டும் வேதாத்திரி மகரிஷி,

> "உடலுக்கு உரமளிப்பது நல்லுணவு
> உள்ளத்திற்கு உணர்வளிப்பது கலவி"

என எளிமைப்படுத்துகிறார்.

புத்தகத் தகவல்களை மூளைக்குள் திணித்துக் கொள்ளுதல் அல்ல. மாறாக இயற்கைப் பேராற்றலை உணர்ந்து சிக்கல்கள் இல்லாத மனநெறி, வாழ்நெறிகளை உருவாக்கிக் கொள்வதே கல்வியாகும்.

2. முதல்நிலை கல்வியின் தேவை.

மேற்சொன்ன கருத்துக்களைக் கொண்டு இலக்கணம் கூறும் வேதாத்திரி மகரிஷி "இலவசக் கல்விதனை இழுக்கின்றி உலகெங்கும் பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தருதலே" கல்வியின் முதல் தேவை என வலியுறுத்துகிறார்.

கற்றுக்கொண்ட அறிவின் மூலம் பொருள் ஈட்டுவதும், பதவிகள் பெறுவதும் அல்ல.

இன்றைய கல்வி முறையில் மாணவர்களும் சமுதாய அமைப்பும் எந்தக் கல்வி கற்றால் பொருளீட்டலும் பதவிகளும் பெற முடியுமோ அதை நோக்கியே இன்றைய கல்வி முறை நடைபெறுகின்றன. இதற்கு மாறாக

"எழுத்தறிவு தொழிலறிவு இயற்கை தத்துவ அறிவு
ஒழுக்கப் பழக்கங்கள் இவை உணர்த்தும் முறையே கல்வி"

இம்முறைக் கல்வியே முழுக்கல்வி என்கிறார்.

3.பயனுள்ள கல்வி முறை

வெயில், மழை, காற்று, பனி என்ற இயற்கையின் கூறுகளால் ஏற்படும் துன்பங்களையும் அண்ட கோள்களின் சஞ்சாரத்தால் உடலில் இரசாயன மாற்றம் உண்டாகி அதனால் ஏற்படும் துன்பங்களையும் அவ் வியல்புகளிலிருந்து வரும் துன்பங்களையும் ஏற்கவும், சகிக்கவும், கூடுமான வரையில் முயற்சியினால் போக்கிக் கொள்ளவும் வேண்டும்.

இடம் பொருள்களுக்கேற்ப. அறிவின் திறத்தால் உடல் இயக்கப் பயிற்சியால், மேற்கண்ட இயற்கைத் துன்பங்களுக்குரிய வேகத்தையும், விளைவையும் செயற்கை முறையில் எதிர்க்கவும், ஒத்துப் பயனாகக் கொள்ளவும் அறிந்து, வாழ்க்கையைச் சிறப்பித்துக் கொள்ளும் உடல் பயிற்சியும், அறிவாராய்ச்சித் திறனும் ஊட்டும் மிகப் பயனுடைய கல்வி முறையை எதிர்கால மக்களுக்கு வகுத்துக் கொள்வோம்.

4.கற்கும் மொழி.

அந்தந்த மகாண மொழியும் உலகில் பல்லோர்க்கிசைந்த மொழியமான இரு மொழிகளை மாணவர் எல்லோர்க்கும் கற்பித்தால் உலகம் ஒன்றுபடும் என்பது மகரிஷியின் கருத்தாகும்.

மக்களுக்கு மனக்கருத்தைப் பரிமாற இருமொழிகள் பயன்படும் என்பதை “எந்த மொழி எங்கவர்க்கும் பழக்கமுண்டோ அங்க அதுவே அவர்களுக்கு எளியதும் உயர்ந்ததும் ஆகும்.” என உறுதியாக தெரிவிக்கிறார்.

5.ஊர் தோறும் தொழிற் கல்வி

ஒவ்வொரு ஊரிலும் ஒரு தொழிற் கல்விச்சாலை ஏற்படுத்த வேண்டும்.

அங்கு இயற்கைத் தத்துவ விஞ்ஞான அறிவு இயற்திரக்கலை இவைகளை வேண்டுவோர்களுக்கு இலவசமாகக் கற்பிக்க வேண்டும்.

இப்போது முதியோர் கல்வித் திட்டம் நடந்து வருவதைப்போல், இந்தத் திட்டம் நடைபெற வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் யாரெனினும் ஒரு மணி நேரம் வந்திருந்து பல கலைகளைக் கற்க வசதி செய்ய வேண்டும்.

இந்த சேவையை உலகில் உள்ள பல அறிஞர் கூடி, சொல்லால், எழுத்தால், செயலால், அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

விஞ்ஞான அறிவு, இயந்திரக் கலைப் பயிலும் மாணவர்களே இந்தத் தொண்டை ஏற்று நடத்தலாம்.

இராணுவம், கலைக்கப்பட்டால் அங்கிருந்து திரும்பும் மக்கள் அனைவரையும் சமூக சேவைக்குத் திருப்பிக் கொள்ளும் போது கூடிய மட்டிலும் அதிலுள்ள தொழில் நிபுணர்களையும் இந்தத் திட்டத்தைப் பரப்ப பயன்படுத்தலாம்.

6.எழுத்துக் கல்வியும் தொழில்கல்வியும்

ஐந்து முதல் பத்து வயதிற்குள், குழந்தைகளுக்கு எழுத்துக் கல்வி முடிந்து விடும்.

பின்னர் வாழ்விற்கு அவசியமான தொழிற் கல்விகளைக் கற்க, பதினோறு வயது முதல் இருபது வரை ஒதுக்கிவிட வேண்டும்.

இந்த முறையால் முதலிருந்தே “இது எங்கள் ஊர், இது எங்கள் நாடு” என்று எண்ணவும், சொல்லவும் முடியாதபடி பழகி, “இவ்வுலகமே

நமக்கு உரியது” என்று எண்ணியும் போற்றியும் வாழும் வாய்பையே எல்லாக் குழந்தைகளும் பெறுவர்.

7.அறிவை அறியும் பயிற்சி

தத்துவ மரபில் முழுமை கண்ட வேதாத்திரி மகரிஷி அவர்கள் அகம் நோக்கி நிற்கின்ற தவமுறையைப் பயின்றால் அறிவறியலாம் என்கிறார்.

அறிவு என்பது களங்கமற்றது. அன்பு ஒன்றே அதன் இயல்பு. அனுபவங்களும் தேவைகளும் அறிவைக் களங்கப்படுத்துகின்றன.

அகம் நோக்கி தன்னிலை கண்டால் களங்கம் அகன்று போகும். அன்பு, தொண்டு. அறம் இயல்பாகிவிடும்.

அந்த நிலை அமைதி தரும் இவ்வமைதியை மக்கள் அடைய வேண்டும் என்கிறார்.

8.தனித்திறமையை பயன்படுத்துதல்

ஒவ்வொருவரும் வாழ்க்கை அடிப்படைத் தொழிலாக உள்ள விவசாயம், நெசவு, வீடுகட்டல், சமையல் செய்தல், விஞ்ஞான இயந்திரக் கருவிகளை இயக்கல் – செய்தல் என்ற இவைகளைக் கற்றுத் தொழில் செய்து வரும் காலத்தில், அவரவர்கள் ஓய்வு நேரத்தில், அறிவின் போக்குக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப, இயந்திர நுட்பம், மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் பல கலைகளும் கற்க வசதி கிடைக்கும்.

இவ்வகையில் தனித்திறமை பெற்ற நிபுணர்களின் சேவையை, அவர்களின் முப்பது வயதிற்கு மேல் பயனபடுத்துவதற்காக அவர்களைத் தனித்தொழில் நிபுணர்களாக ஏற்றுக் கொண்டு, பல தொழில்களைச் செய்யும் கட்டாய நிலைமையை மாற்றி, அதன் மூலம் உலக மக்கள் வாழக்கையை வளப்படுத்துவோம்.

9.வேதாத்திரியின் உயர் கல்வியியல் கொள்கைகள்.

ஞான ஆசானாய் வாழ்ந்த மகரிஷி பல பேராசிரியர்கள் மூலம் ஊர்தோறும் மனவளக்கலை மன்றங்கள் அமைத்து உடல் நலனுக்கு யோகப் பயிற்சியும், மனநலனுக்கு சிந்தனைப் பயிற்சியும் அளித்து வரும் மகரிஷியின் கருத்துக்கள் எந்த நாட்டினரும், எந்த மதத்தவருக்கும் எல்லாக் காலத்திலும் ஏற்று பயன் தரத்தக்கது.

வாழ்க வளமுடன் வாழ்க வையகம் என்னும் வாழ்த்து ஒலியே தாரக மந்திரமாம்.

உடல் மன அளவில் பல மாற்றங்களைச் சந்தித்து வாழ்வில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய இளைமைப் பருவத்தில் மகரிஷியின் வாழ்வியல் கோட்பாடுகள் சிறந்த வழிகாட்டியாக அமையும்.

10.செயல் விளைவு உணர்கல்வி

கல்வியின் உட்பொருளாக செயல்விளைவு கல்வி அமைகிறது.

நாம் செய்யும் செயல்ககளே சூழ்நிலைக்குக் காரணமாகவும் அதனால் விளையும் இன்ப, துன்பங்களே நமக்குப் புதிய பாடங்களாகவும அமைகின்றன.

> “உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம்
> ஒவ்வொருவருக்கும் அன்றாடம் வாழ்வில்
> பல பதிய பாடம் சூழ்நிலைக்கட்கேற்ப
> பலாத்காரமாகப் போதிக்கும்”

என்று செயல்விளைவுத் தத்துவத்தை இலைமறையாக விளக்கும்போது “இயற்கை மனிதனுக்குச் சிறந்த ஆசான்” என்றுரைத்த கல்வியாளர் ரூசோ அவர்கள் நம் நினைவுக்கு வருகிறார்.

11.ஆசிரியர்

ஆசான் என்பவர் வாழ்வினைக் கல்வி போதனைகள் நல்கி மாணவர்களுக்கு வாழ வழிகாட்டி, பயிற்சியுட்டு வாழும் உயர்நிலைக்குரியவர்கள் பெற்றோர் என்கிறார்.

உடலுக்கும் அறிவிற்கும் ஒழுக்கம் காட்டி உயர்த்தி வாழ்வின் வளத்தைக் காப்பவர் ஆசிரியர்.

கற்ற கல்வியாதல் மனிதன் முழுப்பயன் பெறத் தன் உயிரை உணரத்தக்க வகையில் ஆசானால் அறிவுச் கண் திறக்கப்பெற்று, நிலையாது சுழலும் மனம் உள்ளொடுங்கி பட்டற்ற நிலை வரையில் பழக வேண்டும் என்கிறார்.

இத்தகைய ஆசிரியர். தத்துவத் தலைவர், கல்விக்கு நாயகர், கருத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர், அருஉருவாம் ஆதிபரம்

அகநிலைக்கு உயர்குறிப்பு அன்புருவாம் ஆசரியன், என்று ஆசிரியர் தம் தகுதிகளையும் பெருமைகளையும் உலகுக்குணர்த்துகின்றார்.

12.எல்லாச் செல்வமும் எல்லாருக்கும்

அனைவரும் கல்வியிற் சிந்தவர்களாக இருக்க வேண்டும். இயற்கைத் தத்துவத்தை வயதிற்கு ஏற்ற அளவில் சுலபமாக அறிந்து வாழ் வேண்டும்.

ஒவ்வொருவரும் பல தொழிலகளும் தெரிந்தவராயிருப்பதோடு, சில தொழில்களில் நிபுணராகவும் இருப்பர்.

விருப்பப்படி எந்தக் கலையும் கற்க எல்லோருக்கும் வசதியும், வாய்ப்பும் இருக்கும்.

தன் உடல்பலம் அறிவின் ஆற்றல் இவற்றைக் கொண்டு சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒவ்வாருவரும் வீரராகவே விளங்குவர்.

இத்தகைய கல்விமுறை இறைநிலையுணர்ந்த ஒரு மகானின் மூலம் கிடைத்திருப்பது மனிதகுலத்திற்கு இறையாற்றல் அந்த பரிசாகும்.

இதனைச் செயல்படுத்தினால் வறுமை, வேலையின்மை. அறியாமை போன்றவை அகன்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய கல்வியால், எண்ணத்தில், ஆராய்ச்சியில், அறிவின் தெளிவில், ஆத்ம தத்துவம் அறிந்த ஞானிகளாகப் பற்றற்று உலக இன்பம் அனுபவிப்பார்கள்.

உலகிலேயே மிகவும் திரட்சியான இக்கல்வித் திட்டம் வேதாத்திரி மகரிஷி அவர்களால் மட்டுமே அளிக்கபட்டுள்ளது.

இதை அமுல் செய்வோம் என்றால், கல்வி உலகிலே ஒரு புதிய சகாப்தம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

27. வறுமையை போக்க சுரண்டலை ஒழிக்க வேண்டும்.

தற்காலத்தில் உழைப்பாளிகளை விடச் சுரண்டுவோர்கள் தான் செல்வச் செழிப்புடன் வாழ்கிறார்கள்.

என்னதான் சட்டம் போட்டாலும் பதுக்கல்காரர்களும் சுரண்டல் பேர்வழிகளும் தப்பித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

“உழைக்கின்ற தொழில் மூலம் பலர் பிழைக்க
உறிஞ்சுகின்ற தொழில் மூலம் சிலர் பிழைத்தால்
உழைப்போர்க்கு வறுமைமிகும் உறிஞ்சுவோர்க்கு
உழைப்பாளர் பலன்கூடி செல்வம் சேரும்.” (ஞானக்களஞ்சியம்)

என்று வேதாத்திரி மகரிஷி எடுத்துரைக்கின்றார்.

இந்நிலையில் உழைப்பாளர் செல்வார்க்கு அடிமையாகிறார்கள். உண்மையில் ஆக்கத் தொழில் உழைப்பாளர்களிடம் இருக்கிறது.

உழைப்பாளர் போற்றப்பெறல் வேண்டும். இந்நிலைக்கு உழைக்கும் தொழில் செய்பவரே வணிகத்தையும் ஏற்று நடத்துவது தான் மீட்புவழி எனக் சிந்திக்க வைக்கிறார்.

உழைப்போர்க்கும் உபயோகிப்போர்க்கும் இடையில் மூலதன வலையின் மூலம் உழைப்பில்லாமல் ஒரு கூட்டம் சுரண்டி வாழ்கிறது.

தனியாரது ஒழங்கற்ற இவ்வணிகம் ஒழிய வேண்டும். உழைப்பாளர் கூட்டுறவு முறையின் வழியே வணிகம் மேலோங்க வேண்டும் என்ற கருத்தில்,

“உழைப்பினர் உயர்வு கெடச் செய்யும் தனியார்
ஒழுங்கற்ற வணிகமுறை ஒழிய வேண்டும்
உழைப்பாளர் கூட்டுறவு முறை யே
ஒத்தவழி உணர்ந்தவழி பொறுப்புடைத்து”

என்று மகரிஷி தெளிவுபடுத்துகின்றார்.

“கூட்டுறவு” சிறந்த பொருளாதாரக் கொள்கையாகம். மக்கள் சமுதாய வாழ்வோடு இணைந்து வாழ்வதற்குக் கூட்டுறவே சிறந்த வழியாகும்.

“ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் வாழ்கின்ற சூழல் ஏற்படும். இரண்டாவதாக எவரும் எவரையும் அடிமைப்படுத்த முடியாது.

எல்லோரும் சமமாக ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வார்கள். மூன்றாவதாகத் தனிமனிதச் சுதந்திரமும் பாதுகாக்கப்படும்.

“தனிமனிதன் பணம் சேர்க்க அனுமதித்து விடினும்
சமுதாயத்தை வட்டி இலாபம் என்று எங்கும்
இனி எவரும் கவராமல் கூட்டுறவில் நிலங்கள்
இடவசதி தொழிற்சாலை வாணிபம் ஏற்றிடுவோம்.”

என்று நெறிமுறையினை வகுத்துத் தருகிறார்.

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கு காரணமாக இருப்பவைகள் உற்பத்தி சாதனங்களாகும்.

“நிலம் பணம் தொழிற்சாலைகள் போன்றவற்றைத் தனி உடைமைகளாக அனுபவிக்கன்ற பொழுது ஏற்றத் தாழ்வு மிகுகின்றன. உற்பத்தி சாதனங்கள் எல்லாம் சமுதாயத்திற்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்பதே சர்வோதயக் கருத்தாகும்” சமுதாயத்தைச் சார்ந்திருப்பதற்குக் “கூட்டுறவே சிறந்த முறையாகும்.

“ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பேறடைவது தான் வெற்றி”

என்று பாரதிதாசன் கூட்டுறவின் சிறப்பைப் போற்றுவார். மகரிஷி அவர்கள் கூட்டுறவு மேன்மை வலியுறுத்தி,

“வீடு விளைநிலம் தொழிற்சாலை
வியாபாரம் ஆகிய நாலும்
நாடு முழுதும் கூட்டுறவில் நடத்து
முறையினை அமுலாக்க”

என்று கூறுகிறார்.

இதனால் வறுமை நீங்கும். செல்வம் சேரும். ஈடு வட்டி கடன் வழக்காடு மன்றம் போதல் ஆகிய சூழல்கள் ஏற்படாது என உறுதிபடத் தெளிவுறுத்துகிறார்.

இக்காலச் சமுதாயச் சூழல் சீர்கேடு அடைந்ததற்குக் காரணம் வாணிபமும், அரசியலும் என்பது மகரிஷி அவர்களின் துணிவான முடிவாகும். இதனை

“வாணிபமும் அரசியலும் உழைப்போர் வாழ்வை
வறுமைக்குள் ஆழ்த்தியது உண்மை காண்பீர்”

என்று குறிப்பிடுகிறார்.

ஆகவே உழைப்பவரே அரசியலில் ஈடுபடவேண்டும் எனக் கருத்தில்,

“பண்டங்கள் தமை உழைப்பால் தோற்றுவோரே
பண்பட்டு அரசியலை ஏற்றால் அல்லால்
பண்டங்கள் உற்பத்தி வினியோகத்தில்
பாருலகில் சமநீதி மலர்ந்திடாது,”

எனச் சிந்திக்க வைக்கிறார்.

`28. வறுமையை ஒழிக்க பன்முக உத்தி தேவை’

இந்தியாவில் வறுமையை ஒழிப்பதற்கு பன்முக உத்தி தேவை என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.

அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதன் மூலம்தான் வறுமையை ஒழிக்க முடியும் என்று இந்தியாவின் பொதுக் கொள்கை ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தயாரிப்பில் ஓ.பி. ஜின்டால் சர்வதேச பல்கலைக் கழகமும் ஆக்ஸ்போர்டு பல்கலை அச்சகமும் ஒன்றிணைந்து பணியாற்றியுள்ளன.

இந்தியாவில் வறுமையை முற்றிலும் ஒழிப்பதற்கு குறிப்பிட்ட வகையிலான பன்முக உத்திகள் அவசியம்.

அதாவது அடிப்படையான அணுகுமுறை, மனித உரிமை சார்ந்த அணுகு முறை, இயற்கை வள மேலாண்மை அணுகுமுறை மற்றும் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் சில குறிப்பிட்ட பகுதிகளில் புவியியல் ரீதியாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதற்கு அதிகரித்துவரும் நகர்ப் புறமும் ஒரு காரணமாகும் என்று அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

உணவுப் பொருள் விநியோகம் மட்டுமே வறுமையை ஒழித்துவிடாது என்றும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

வாழ்வாதார வாய்ப்புகள், சமூக வாய்ப்புகள், சட்ட விதி அமலாக்கம், அடிப்படை கட்ட மைப்பு மேம்பாடு உள்ளிட்ட காரணிகள் மூலம் வறுமைக் கோடு தீர்மானிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்புக் கொள்கை குறியீடு (பிஇஜ) 1981-ம் ஆண்டு முதல் 2011-ம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

சிறப்புக் கொள்கை குறியீடு, இந்தியாவில் வறுமை

வறுமையை ஒழிக்க இந்திய திட்ட கமிஷன் அதிரடி திட்டம்!

இந்திய திட்ட கமிஷன் இந்தியாவில் வறுமையை குறைக்க பல திட்டங்களை ஐந்தாண்டு திட்டங்களில் அறிமுகப்படுத்துகிறது.

அதே போல் இந்தியாவில் வறுமை கோட்டுக்கு கீழே உள்ள மக்களின் (Below poverty line) எண்ணிக்கையையும் கணக்கெடுத்து வெளியிடுகிறது.

2011-12 ஆம் ஆண்டிற்கான வறுமை தொடர்பான அறிக்கையினை இந்திய திட்ட கமிஷன் 19.03.2012 அன்று வெளியிட்டுள்ளது.

2010 – 2011 ஆம் ஆண்டில், கிராமப்புறத்தில் தினக்கூலி ரூ.26 க்கு கீழ் உள்ளவர்களும், நகர்புறத்தில் ரூ.32 க்கு கீழ் உள்ளவர்களும் வறுமையில் உள்ளவர்கள் (Below poverty line) என இந்திய திட்ட கமிஷன் வரையறுத்தது.

அதாவது ஒரு நாள் வாழ்க்கை நடத்த கிராமப்புறத்தில் ரூ.26 ம். நகர்புறத்தில் ரூ..32 ம் போதுமானது என்பது திட்ட கமிஷன் கருத்து.

தற்போது 2011-2012 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், கிராமப்புறத்தில் தினக்கூலி ரூ.22.42 க்கு கீழ் உள்ளவர்களும், நகர்புறத்தில் ரூ.28.35க்கு கீழ் உள்ளவர்களும் வறுமையில் உள்ளவர்கள் என இந்திய திட்ட கமிஷன் வரையறுத்திருக்கிறது.

இது 2010 – 2011 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட தொகையை விட சுமார் ரூ.3.500 குறைவு ஆகும். 2010-2011 ஆம் ஆண்டை விட

தற்போது விலைவாசி கிட்டத்தட்ட 500% முதல் 100% வரை கூடியுள்ள நிலையில், ஒரு மனிதனின் ஒரு நாள் வாழ்க்கைக்கான பணத் தேவையினை திட்ட கமிஷன் குறைத்துள்ளது..

மேலும் இந்தியாவில் வறுமை குறைக்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரூ.22.42 ஐ வைத்து ஒரு இந்தியன் ஒரு நாள் வாழ்க்கையை நடத்த முடியுமா? அது சாத்தியம் ஆகுமா? நடைமுறைக்கு ஒத்து வருமா?

பாவம்! திட்ட கமிஷன். எத்தனையோ திட்டங்களை போட்டாலும் இந்தியாவில் வறுமையை ஒழிக்க முடியவில்லை. மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அதன் மூலம் வறுமையை ஒழிக்க நினைத்தால் அது இந்தியாவில் நடக்கிற விஷயமா?.

திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி அரசியல்வாதிகள், அதிகாரிகள், கடை நிலை அரசு ஊழியர்கள் வழியாக பாய்ந்து மக்களை அடையும் போது துரும்பாக இளைத்திருக்கும்.

இந்தியாவில் வறுமையை ஒழிப்போம் என்று பல அரசியல் கட்சிகள் கோஷம் போட்டாலும் சுதந்திரம் அடைந்து 64 வருடங்களாகியும் இந்தியாவில் வறுமையை ஒழிக்க முடியவில்லை.

ஆண்டுக்கு ஆண்டு தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கைதான் கூடியது. இதுவரை போடப்பட்ட ஐந்தாண்டு திட்டங்களினாலும் இந்தியாவில் வறுமையை ஒழிக்க முடியவில்லை.

எனவேதான் இந்திய திட்ட கமிஷன் வறுமையை ஒழிக்க இந்த அதிரடி திட்டத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தி உள்ளது. அதுதான் காலுக்கேத்த மாதிரி செருப்பை வெட்டுவது என்ற திட்டத்தை விட்டு செருப்புக்கேத்த மாதிரி காலை வெட்டுவது என்ற திட்டத்தை பின்பற்றுவது ஆகும்.

திட்ட கமிஷன் பேசாமல் வறுமை கோட்டுக்கான வரையறையை ரூ.00 என்று அறிவித்துவிட்டால், இந்தியாவில் வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டதாக அரசியல்வாதிகள் பெருமைப்பட்டுகொள்ள வசதியாக இருக்கும்.

ஆனாலும் திட்ட கமிஷன் ஒரு விளக்கம் தருகிறது. 2004-2005 ஆம் ஆண்டின் பண வீக்கத்துடன் தற்போதைய பண வீக்கத்தை ஒப்பிட்டுதான் வறுமை கோட்டுக்கான வரையறை செய்யப்பட்டது என்று அது கூறுகிறது.

உலகத்தில் எதை வேண்டுமானாலும் புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த பண வீக்க அளவீட்டினை மட்டும் யாராலும் புரிந்து கொள்ள முடியாது போலும்.

விலைவாசி எவ்வளவு கூடினாலும் பணவீக்கம் மட்டும் குறைந்து கொண்டே போகும். நம்மை போன்ற நடுத்தர மக்களுக்கும், பண வீக்க அளவீட்டிற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? என்பது பட்டிமன்றம் வைத்து தீர்வு கான வேண்டிய தலைப்பு ஆகும்.

இந்திய திட்ட கமிஷன் அறிவித்துள்ள வறுமை கோட்டுக்கான வரையறை ஏற்கனவே விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மற்றும் வறுமையில் உள்ள மக்களை மேலும் பாதிக்கும்.

அரசின் பல நலத்திட்ட உதவிகள், உண்மையில் வறுமையில் உள்ள ஏராளமான மக்களுக்கு இனி கிடைப்பது கேள்விக்குறியாகும்.

உதாரணமாக ரேஷன் பொருட்கள் விநியோகம், அரசின் பல்வேறு பென்ஷன் மற்றும் நல திட்டங்கள் ஆகியவற்றுக்கு தகுதியான மக்கள், வறுமை கோட்டுக்கான வரையறையின் படியே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஆகவே அரசின் இத்திட்டங்களால் பயன்பெரும் மக்களின் எண்ணிக்கை பெருமளவில் இனி குறைக்கப்படும்.

இறுதியாக ஒரு நம்பிக்கை செய்தி. இந்திய திட்ட கமிஷன் அறிவித்த மேற்கூறிய அளவீடு பல தரப்புகளிலும் எதிர்ப்புகளுக்கு உள்ளானதால் மத்திய ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி தற்போதைய வறுமை கோட்டு அளவீட்டு திட்டத்திற்கு பதிலாக வேறொரு புதிய திட்டம், பொருளாதார மற்றும் சாதி வாரியான மக்கள் தொகை கணக்கு எடுப்பிற்கு பிறகு அமல் படுத்தப்படும் எனவும், அதுவரை பழைய அளவீட்டு திட்டம் தொடரும் எனவும் தெரிவித்து. மேலும் வறுமை கோட்டுக்கான வரையறையை பாராளுமன்றம், அரசாங்கம், உச்ச நீதிமன்றம் ஆகியவை இணைந்து வரையறுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

திட்ட கமிஷன் அறிவிக்க இருக்கும் புதிய அளவீட்டு திட்டமாவது வெறும் ஏட்டு சுரைக்காயாக இருக்காமல் நடைமுறை சாத்தியம் உள்ளதாக இருக்கட்டும்.

29. சமூகச் சிக்கல்களுக்கான மகரிஷியின் தீர்வுகள்.

ஆங்கில ஆட்சியின் விளைவாக சுதந்திர இந்தயா பல சமூகப் பிரச்சனைகளை சந்திக்க நேரிட்டது.

ஏழைகள் அழுத கண்ணீர்

பிறர்செயலில் வாழ்க்கையினில் குறுக்கிட்டே தன்
  பெருமையினைத் தன்முனைப்பை வளர்க்க வேண்டாம்.
பிறர்உள்ளம் வருந்தச்செய்து உலகில் வாழும்
  பேதைமனம் பெற்றவர்க்கு அமைதி கிட்டா.
பிறர்ஏழ்மை எளிமையிலே வாழ்ந்த போதும்
  பேறாற்றல் மனஅலைக்கு உண்டு உண்டு
பிறர்மகிழத் தான்மகிழ்ந்து, சலிப்பில் லாத
  பேரின்ப வாழ்வடையும் நோன்பை ஏற்போம்.(மகரிஷி)

“அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று” என்று சொன்னார் பாரதியார்.

அவைகளில் முக்கியமானவை வறுமை, கல்வியின்மை, சாதிக்கொடுமை, மதப்பிரிவினைவாதம், பெண்ணடிமை ஆகியவை ஆகும்.

இந்தச் சமூகச் சிக்கல்களைத் தீர்த்து, சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்த இந்தியஅரசும் மாநில அரசும், பல தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பெருகிவரும் மக்கள்தொகை, பயங்கரவாதம், அன்னியசக்திகளின் ஊடுறுவல், பக்கத்து நாடுகளின் போர் அச்சுறுத்தல் காரணமாக ராணுவத்திற்கு அதிகமாக செலவிடுதல் போன்ற நிகழ்வுகள் காரணமாகப் பல திட்டங்கள் முழுமை அடையவில்லை.

ஆகையால், ஆன்மீகம், உடற்பயிற்சி, மனப்பயிற்சி, உயிர்பயிற்சி மூலமான இச்சிக்கல்களைத் தீர்க்க மகரிஷியின் மனவளக்கலை மன்றமும், உலக சமுதாய சேவா சங்கமும் பாடுபட்டு வருகிறது.

மகரிஷியின் பார்வையில் சமூகச் சிக்கல்கள்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி தன்னுடைய ஆன்மீகத்தெளிவு அடிப்படையிலும், அனுபவ அறிவின் அடிப்படையிலும் சமூகச் சிக்கல்களை 12 பகுதிகளாக பிரித்து பட்டியலிட்டுள்ளார்.

1. இயற்கையின் ஆற்றலை அறியாமை
2. இறை நிலை பற்றிய குழப்பம்.
3. மனித உடல், மனம்பற்றி அறியாமை
4. மனித வாழ்வின் உயிர் நிலையை அறியாமை
5. தேவையற்ற ஆசைகள்
6. பொருளாதார ஏற்றத்தாழ்வு.
7. அரசியல் குழப்பம், லஞ்சம் மற்றும்ஊழல்
8. சமய சகிப்புத் தன்மையின்மை
9. ஆன்மாவைப் பற்றி அறியாமை
10. பெண்மையைப் புறக்கணித்தல்
11. ஆயுதப் பெருக்கமும் போர் நெருக்கடியும்.
12. ஆன்மீகக் கல்வியின்மை.

ஒவ்வொரு சிக்கல்களையும் தீர்க்க மனவளக்கலையில் பயிற்சி தரப்பட்டு வருகிறது.

பிச்சைக்காரர்களை ஒழிக்க மகரிஷியின் திட்டம்.

“மீன் கொடுப்பததை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடு” என்பது சீனப்பழமொழி.

“அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று” என்று சொன்னார் பாரதியார்.

வயிற்றுப் பசியை விட அறிவுப்பசி உயர்ந்தது என்பது இதன் மையக் கருத்தாகும்.

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்”
என்பார் வள்ளுவர்.

இவ்வுலகத்தைப் படைத்தவன், இவ்வுலகில் வாழும் சிலர்க்கு, முயன்று உயிர் வாழ வழியின்றி, இரந்துதான் உயிர்வாழ வேண்டும் என்று விதித்திருப்பானானால், அக் கொடியவனும் அச்சிலரைப் போல எங்கும் அலைந்து திரிவானாக!” என்று கூறுவாரெனில், பிச்சை எடுப்பதன் கொடுமை ஒருவாறு புரியும். இல்லாத உயிர்கள், உலகில் யாண்டும் இல்லை.

இப் பசியாற்றுவதற்கு உரிய பணமும், நிலமும், கோயில், மடம் முதலான அறநிலையங்களில் முடங்கிக் கிடக்கின்றது.

இதில் ஒரு பகுதியினை எடுத்துச் செலவழித்தால் போதும் அதன்வழி அனைவருடைய கல்விக் கண்ணையும் திறக்க முடியும் என்பது முற்போக்கு சிந்தனையாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

“சாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்றுப் படிப்பில்லாதவர்க்குப் படிப்பும், தொழிலும் வாழ்க்கை வசதியும் ஏற்படுத்தி, உபயோகப்படுத்திவிட வேண்டும்” என்று தந்தை பெரியார் வெளிப்படையாகவே சொல்கிறார்.

அதனை மிகவும் மென்மையாக அதே பொருள்படும் படி மகரிஷி வலியுறுத்துகிறார்.

“வேலையில்லாக் குறைபாட்டால் வயோதிகத்தால்
  வியாதியினால் வருமானம் ஏதுமின்றி
மூலைமுடுக்குகளில் வாழ் பிச்சைக்காரர்
  முழுஅளவில் வளைத்தாங்காங்குள்ள தர்ம
சாலைகளில் நிரப்பி யவரவர்க்கு ஒத்த
  சாப்பாடு தொழில் கொடுக்க உலகில் உள்ள
சோலைசூழ் கோயில் மடம் ஆதினங்கள்

சொத்து பயன்பாடு சிறந்த முறைவகுப்போம்.” (உ.ச.76)

“மனித இனம் வாழ்வில் பலதுறைகளில் பெரும் அளவாக முன்னேற்றம் அடைந்திருக்கின்றது. எனினும் இன்னும் சிலநாடுகளில் பிச்சை வாங்கிச் சாப்பிட்டு ஜீவித்து வருகிறார்கள்.

இதற்குக் காரணம் வறுமை, வியாதி, பழக்கம் இவைகளேயாகும். இந்த நிலையை மாற்ற வேண்டியது அறிஞர்களின் பொறுப்பே ஆகும்.

இன்று பல அறநிலையங்களில் அளவற்ற சொத்துக்கள் குவிந்திருக்கின்றன.

பக்தர்களின் அறிவு நிலையைப் பயன்படுத்தும் முறைகளுக்காக அவசியமான தொகையை ஒதுக்கி வைத்து மீதித் தொகையைக் கொண்டு எந்த நிலையத்தால் எத்தனை பிச்சைகாரர்களை போஷிக்க முடியும் என முதலிய கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் சட்டத்தின் உதவியால் பிச்சை வாங்குவதையும், பிச்சை போடுவதையும் குற்றமாக்கி விடவேண்டும்.

கைது செய்யப்படும் பிச்சைக்காரர்களை ஆங்காங்கே பாழடைந்து கொண்டு வரும் சத்திரங்களில் நிரப்பி, அவர்களின் உடல், பலம், வயது இவைகளுக்கேற்றபடி கல்வி, தொழில் இவைகளைப் போதித்து உணவு கொடுத்து வர வேண்டும்.

இந்த முறையைத் தொடர்ந்து பத்து வருடங்கள் அமுல் நடத்தினால் உலகில் எந்த நாட்டிலும் பிச்சைக்காரர்கள் இல்லாமல் செய்து விடலாம்.

உலகில் எந்தப் பாகத்திலேனும் ஒரு மனிதன் பிச்சை கேட்டு வாங்கி உண்ணும் நிகழ்ச்சி மனித இனத்திற்கே அவமானச் சின்னமாகக் கருதப்பட வேண்டும்.

பிச்சைக்காரர்களில் குஷ்ட ரோகிகளின் நிலைமை தான், மிகவும் பரிதாவத்திற்கு உரியது. இந்த நோயை ஒழிக்கும் முயற்சியில் அறநிலையங்களின் பணத்தைச் செலவிடுவது அனைவருக்கும் சம்மதமே அளிக்கும்.

“கடவுளுக்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தை இப்படித் தவறான முறையில் வேறு வழியில் செலவு செய்வது உரிய நெறி தானா? என்று

குறுகிய மனம் கொண்ட உள்ளங்களைப் பார்த்துப் மகரிஷி பின்வருமாறு பதில் தருகின்றார்.

(இந்த கருத்தை வக்ப் வாரியத்திடமோ கிறிஸ்துவ மிஷனிடமோ சொல்ல முடியுமா? என்று வாதத்திற்கு வருபவர்களும் உண்டு)

“கடவுளை மனிதர்கள் காப்பாற்ற வேண்டுமென்பதோ, பாதுகாக்க வேண்டுமென்பதொ அறியாமையாகும்.

கடவுள் என்ற நிலையை மனிதன் அறிந்து தெளிவாகவும், அன்பாகவும் வாழ, மனிதர்களை பக்குவம் செய்யவே அறநிலையங்கள் தோன்றின.

பின்னர் பலபொருட்களின் வியாபாரச் சந்தையைக் கூட்டி வியாபாரிகள் அந்தச் சமயத்தில் மக்களுக்கு உற்சாகமூட்ட ஆலயங்களை அவர்கள் செலவில் அலங்கரித்துத் திருவிழாக்களும், உற்சவங்களும் ஏற்படுத்தி விட்டார்கள்.

இன்று மிகச் சிறந்த முறையில் பல பொருள்களின் கண்காட்சிகள் உலகெங்கும் நடந்து வருவதால் இதற்கென ஏற்பட்ட உற்சவங்கள் தேவையில்லை.

ஆகையால் பக்தர்களின் வழிபாடுகளுக்கு வேண்டிய அவசியமான செலவுகளுக்காக ஒரு அளவு தொகையை ஒதுக்கி வைத்துக் கொண்டு மற்ற சொத்துக்களையம் ஆபரணங்களையும் பிச்சைக்காரர்கள் பிரச்சினையைத் தீர்க்கவும், தொழில் பள்ளிகளை ஏற்படுத்தவும் செலவிட்டு சமூக நலத்தைப் பெருக்கலாம்.

எந்த வகையிலோ குறுகிய நோக்கம் உடையவர்கள் கூட இந்தத் திட்டத்தை ஒப்புக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

இந்தத் திட்டத்தின் ஆரம்பத்தில் கடவுளை மனிதன் பாதுகாக்க வேண்டும் என்ற கற்பனையாகக் கொள்ளும் அறியாமையைப் போக்கவும், அந்தக் கடவுள் தத்துவத்தை அனைவருக்கும் தெளிவுபடுத்தவும் சிந்தனையாளர்களின் பிரசாரம் அவசியமாகும்.

மனிதர்கள் அனைவரும் இதனை உணர்ந்து இச்சிக்கல்களிலிருந்து விடுபடும் காலம் வெகு தொலைவில் இல்லை.

30. பொருள் வறுமை - அறிவு வறுமை

மனித குல வாழ்வில் எங்குமே அமைதியின்மையும், துன்பங்களும், சிக்கல்களும் பெருகி இருக்கின்றன.

இவற்றிறற்குப் பொருள் வறுமை, அறிவு வறுமை என்னும் இரண்டு அடிப்படைக் காரணங்களாகும்.

சோம்பல், விண்செலவு, இயற்கைச் சிற்றம், பொருள் பதுக்கல், பொறுப்பும் திறமையுமற்ற ஆட்சி, நிர்வாகம் எனம் ஐவகைக் காரணங்களால் பொருள் வறுமை ஏற்படுகிறது,

அறிவு வறுமையில்லாத சமுதாயத்தில் பொருள் வறுமை எக்காரணத்தால் உண்டானாலும் அதனைக் குறுகிய காலத்தில் நிறைவு செய்து கொள்ளலாம்.

அறியாமை (Innocence) அலட்சியம் (Ignorance) உணர்ச்சிவயம் (Emotional moods) என்ற மூன்று வகையிலும் மக்களிடம் அறிவு வறுமை நிலவுகின்றது.

வாழ்க்கை அனுபவத்தில் தேர்ந்தவர்கள் கண்காணிப்பில் அறியாமையையும் வாழ்க்கையின் உண்மை உணர்ந்து சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலாற்றி வாழும் கல்வி மூலம் அலட்சியத்தையும், இயற்கை நியதியுணர்ந்து அதையொட்டி மதித்து வாழும் பண்பால் உணர்ச்சி வயமான நிலைகளையும் சமன் செய்து கொள்ளலாம். அறிவு வறுமை நீங்க ஆன்மிகத் துறையில் அறிவை வளர்க்கும் திட்டம் மக்களிடையே பரவ வேண்டும்.

இதை அரசியலால் செய்ய முடியாது. விஞ்ஞானத்தாலும் செய்ய முடியாது. விஞ்ஞானம் அறிவியல் என்று தவறாக க் கூ றப் டுகிறது.

விஞ்ஞானம் அணுவியலே தவிர அறிவியல் ஆகாது. அறிவை அறிவால் அறியும் தன்னிலை விளக்கத் துறையே (Self Realisation) அறிவியலாகும்.

இன்றுள்ள போக்கில் மதங்கள் மூலமும் அறிவின் வறுமையைப் போக்க முடியாது.

அறிவை அறிவால் அறியத்தக்க அகத்தவப் பயிற்சியும், உயிரின் மதிப்புணர்ந்து பிறர் தேவை, விருப்பம் இவற்றிற்கு உயர் மதிப்பளித்துத் தன் தேவை, விருப்பம் இவற்றைக் கட்டுப்படுத்திக் கொண்டு மக்களுக்கு ஒத்தும் உதவியும் வாழும் பண்பை இயல்பான தன்மையாக்கும் ஆன்மீக அறிவு வளர்ச்சித் திட்டம் ஒன்றால்தான் அறிவு வறுமையைப் போக்க முடியும்.

உதாரணத்திற்காக ஒரு குறிப்பு தருகிறேன். பொதுவாக இன்றுள்ள மனித சமுதாயத்தில் ஒரு தவறான போக்கு நிலவி வருகிறது.

இது நீண்ட காலமாக வளர்ந்து இன்று மிக உச்ச நிலையில் உள்ளது. அது யாதெனில் பிறரிடமிருந்து கற்பனையாக எதிர்பார்க்கும் மனப்பான்மை.

அவர் அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்ய வேண்டும் என்று தன் எண்ணத்தில் எல்லை கட்டிக் கொண்ட கற்பனையால் பிறரை நோக்கி எதிர்பார்த்திருக்கும் முறையால் தனது ஆற்றல் குறைகிறது.

அறிவு மயங்குகிறது. காலம் வீணாகிறது. ஏமாற்றம் அதிகமாகிறது. அதனால் குற்றங்களும் நோய்களும் பெருகுகின்றன.

இதற்குப் பதிலாக தன்னாற்றலை உணர்ந்து அதைப் பெருக்கிக் கொள்ளவும், ஆக்கத் துறையில் பயன்படுத்தவும், பிறருக்கு இயன்ற மட்டும் எப்போதும் உதவிக் கொண்டு இருப்பேன் என்ற தயார் நிலையிலும் செயல் புரியும் பழக்கத்திலும் மனிதன் திரும்பிவிட்டால் இன்றைய உலகில் இருக்கும் எல்லாச் சிக்கல்களும் தீரும். அமைதியான வாழ்வு அனைவருக்கும் கிடைக்கும்.

இதனை உடனே செய்து விடமுடியாது என்றாலும் படிப்படியாகத் திட்டமிட்டுத் தக்கபடி அறிஞர்கள் ஒன்று பட்டுத் தொண்டாற்றினால் அருள்துறையின் மூலம் நிச்சயமாகப் பலன் காணாலாம்.

மனவளக் கலை மன்றங்களைச் சேர்ந்த அன்பர்கள் உறுதியும், தெளிவும் கொண்டு பிறரிடம் எதிர்பார்ப்பதை விடுத்து. தன்னாற்றலைப் பெருக்கி, இயன்ற மட்டும் பிறர்க்கு உதவி செய்வேன் என்று செயலில் முனைந்தால் நாம் அடையும், விளக்கம் பயன்கண்டு, படிப்படியாகப் பிறரும் இப்பண்பாட்டினைப் பின்பற்றுவார்கள்.

வாழ்வாங்கு நீங்களும் வாழ்ந்து வாழ்பவர்களையும் சிறப்பாக வாழவைத்து வாழ்வில் நிறைவும் மகிழ்ச்சியும் பெறுவோம்.

31. வறுமையற்ற வளமான வாழ்வு

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு கனவு அல்லது ஒரு ஆசை இருக்கும்.

சிலருக்கு செல்வந்தன் ஆகவேண்டும், சிலருக்கு சமுதாயத்திலே அந்தஸ்துமிக்கவனாக வேண்டும். சிலருக்கு உயர்ந்த பதவியை

அடைய வேண்டும் இப்படி ஒவ்வொரு மனிதனைப் பொருத்தும் அவனுடைய ஆசை, இலட்சியம் என்பது மாறுபடும்.

ஆனால் சமூகம் சார்ந்த சிந்தனை, அக்கறை என்பது வெகு சிலருக்கு மட்டுமே ஏற்படும் அதுவும் பெரும்பாலும் ஏதாவது பிரதிபலனை எதிர்பார்த்த அக்கறையாகவே அது இருக்கும். சுயநலம் கொஞ்சமாவது கலந்திருக்கும்.

ஆனால் எந்த சுயநலமும் இல்லாமல் தன் முழு வாழ்வையும் சமுதாயத்திற்கு அர்பணித்த மகான்களின் வரிசையில் வேதாத்திரி மகரிஷி முக்கிய இடம் பெறுகிறார்.

வறுமையற்ற சமுதாயத்தை காண கனவு கண்டவர் வேதாத்திரி மகரிஷி. அதற்காக வறுமையைப் போக்க பல்வேறு சிந்தனைகளையும் பரிந்துரைகளையும் சமுதாயத்தின் முன்பு வைக்கிறார்.

“ஒரு நெசவாளன் 5.5மீ சேலை நெய்வதற்கு அவன் தன் கை கால்களை 19000+ முறைகள் அசைக்கவேண்டும். கூலி-75ரூபாய்!?

இந்த அனுபவம் அவரை வறுமையை பற்றி சிந்திக்கத் தூண்டியது எனலாம்.

இந்தியாவில் 1947 ஆம் ஆண்டுக்கு முன்பு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட நாள்களில், இந்திய நாட்டு மக்களின் சிந்தனையும், செயலும் மண்ணின் விடுதலை, மக்கள் விடுதலை என்ற இலக்குகள் நோக்கி நகர்ந்தவையாகும்.

ஆனால், அதன் பின்பு நாம் பெற்றிருக்க வேண்டிய தன்னாட்சி, தன்மானம், தன்னிறைவு, ஒருமைப்பாடு, சமுகச் சமனியம், மொழி உரிமை, வளமான கல்வி, வறுமையற்ற வாழ்க்கை, பொருளாதார ஏற்றம் போன்றவைகளில் நாம் இன்றளவும் உலகளவில் போதிய வளர்ச்சியை எட்டிட இயலவில்லை என்பது வருந்தத்தக்க உண்மையாகும்.

“அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம்,
மூன்று வகையிலும் அறிவு வறுமை நிலவுகிறது”

என்பது வேதாத்திரி மகரிஷியின் கருத்தாகும்.

வறுமை வழிந்த வீட்டில் குபேரன் குடிபுகுந்தான்: குங்குலியக்கலய நாயனார் வரலாறு திருப்பி பார்ப்போம்.

திருக்கடவூரில் கலயனார் என்பவர் இருந்தார். அவர் ஒரு சிறந்த சிவபக்தர். அதனாலேயே தினமும் சிவபெருமான் ஆலயத்தில் நாள் தவறாமல் குங்குலிய தூபம் போடுவதை சிவபணியாக கடைபிடித்து வந்தார். கலயனாராக இருந்தவரை ஊர் மக்கள் குங்குலியக் கலயனார் என்று அழைத்தார்கள்.

தன்னிடம் அன்பாக இருப்பவரிடம் வம்பாக திருவிளையாடல் புரிந்து பக்தியை சோதிப்பது அய்யன் சிவபெருமானுக்கு பிடித்தமான ஒன்று.

இதில் குங்குலியக்கலயனார் மட்டும் விதிவிலக்கா என்ன? அதனால் ஈசன், கலயனாரை சோதிக்க ஆரம்பித்தார். குடும்பஸ்தர்களுக்கு சோதனை பணத்தால்தான் ஏற்படும் என்பதால் பண பிரச்சினையை கொடுத்தார் கலயனாருக்கு ஈசன்.

திடீர் பணப் பிரச்சினை ஏற்பட்டதால் என்ன செய்வது? – ஏது செய்வது? என்று சிந்தித்தார். அந்த சிந்தனை குடும்பத்தை எப்படி காப்பாற்றுவது என்பதில் அல்ல அச்சிந்தனை, அப்பன் சிவனுக்கு இனி எவ்வாறு தினமும் குங்குலியச் சேவை செய்வது? என்பதே அவர் கவலை.

அதனால் தன் பெயரில் இருந்த நிலத்தை விற்று அந்த பணத்தில் தினமும் சிவலாயத்திற்கு குங்குலியத்தால் வாசனை புகையை பரவச்செய்தார்.

நிலம் விற்ற பணத்தில் இருந்து ஒரு பைசா கூட தன் குடும்பத்திற்காக என்று செலவு செய்யவில்லை. சில மாதங்களில் அத்தனை பணமும் சிவசேவைக்கே குங்குலிய புகையாக கரைந்தது. கலயனாரின் மனைவியும் குழந்தைகளும் பசியால் வாடினார்கள்.

தன் குழந்தை பசி மயக்கத்தில் துவண்டு கிடப்பதை பொ ரு க்க முடியாமல் கலயனாரின் மனைவி, தன்னுடைய திருமாங்கல்யத்தை கழற்றி, “இதை விற்று நெல் வாங்கி வாருங்கள்” என்றாள்.

திருமாங்கல்யத்தை பெற்று கொண்டு சாலையில் நடந்து வந்து கொண்டு இருந்தார் கலயனார். அப்போது அவர் கண்களில் சிவாலயம் தெரிந்தது. “இன்று சோமவாரம் ஆயிற்றே… பணம் இல்லாமல் குங்குலிய சேவையை எப்படி செய்வது?” என்ற சிந்தனையில் இருந்த போது அவர் எதிரில் குங்குலிய வியபாரி வந்து கொண்டு இருந்தார்.

குங்குலிய வியபாரியை கண்ட கலயனார் மகிழ்ச்சியடைந்தார். அந்த குங்குலிய வியபாரியிடம், “அய்யா…உங்களிடம் இருக்கும் குங்குலியம் முழுவதையும் என்னிடம் தாருங்கள். அதற்கு ஈடாக எம்மிடம் பொன் நகை ஒன்று இருக்கிறது.” என்றார் கலயனார்.

அதன்படி திருமாங்கல்யத்தை கொடுத்து வியபாரியிடம் இருந்து குங்குலிய மூட்டையை வாங்கி மகிழ்ச்சியுடன் திருக்கோயில் சென்றார்.

குங்குலிய மூட்டையை ஓர் இடத்தில் பத்திரமாக வைத்துவிட்டு, அதில் இருந்து நிறைய குங்குலியத்தை எடுத்து கோயில் முழுவதும் வாசனையை புகையால் பரவச் செய்தார்.

அங்கு இருந்த ஒருவர், “என்ன கலயனாரே.. சாம்பிராணி புகை போடுவது போல் குங்குலியத்தை இப்படியா போடுவது” என்றார்.

“சிவதொண்டு செய்வதில் கணக்கு பார்க்க கூடாதய்யா” என்ற கலயனார், தன் சிவதொண்டில் மெய் மறந்து இருந்தார். சிவ தொண்டு செய்து முடிந்ததும் தன் வீட்டின் நினைவு வந்தது.

“இரவாகிவிட்டதே.. அய்யோ நெல் வாங்க மனைவி கொடுத்த திருமாங்கல்யத்தை விற்று குங்குலியம் வாங்கி விட்டேனே.. வீட்டுக்கு சென்றால் மனைவி திட்டுவாளே” என்ற கவலையால் சிவன் கோயிலிலேயே உறங்கிவிட்டார் கலயனார்.

அதே சமயம் கலயனாரின் வீட்டில்…. கலயனாரின் மனைவி, தன் கணவர் இன்னும் வீடு வந்து சேரததால் கவலை அடைந்தாள். இதுவரை இப்படி அவர் இரவு நேரத்தில் வெளியே எங்கும் தங்கியதில்லையே… அவருக்கு என்ன ஆனதோ என்று பயந்து போனாள்.

கவலை ஒரு பக்கம் பசி மறுபக்கம் வாட்டி வதைத்து உறங்கிவிட்டாள். அது உறக்கமா மயக்கமா என்று வறுமையை அனுபவித்தோர் அறிவர்.

அப்போது அவளுக்கு ஒரு கனவு. கனவில் வந்தது கணவன். அவன் அருகில் இறைவன். “பெண்ணே கலங்காதே. உன் கணவனுக்கு எந்த

தீங்கும் இல்லை. இதோ பார் நம் கோயிலில்தான் உறங்கிக்கொண்டிருக்கிறான்.

நம் ஆலயத்தில் உன் கணவன் குங்குலிய திருப்பணி இன்று செய்தான். வறுமையை துச்சமாக மதித்து எம் மீது கொண்ட பக்தியே பெரிது என நிருபித்தான். இனி இவன் குங்குலியக்கலய நாயனார் என அழைக்கப்படுவான். அவன் சேவைக்கு எமது அன்பு பரிசு. கண் திறந்து பார்." என்று இறைவன், கலயனாரின் மனைவியின் கனவில் கூறி மறைந்தார்.

திடுக்கிட்டு விழித்து பார்த்த கலயனாரின் மனைவி நம்ப முடியாமல் திகைத்தாள். அவள் வீட்டில் நெல் மூட்டைகளும், பொன் நகைகளும் குவிந்துக் கிடந்தது.

வறுமை வீடு – வசந்த மாளிகையாக ஜொலித்தது. திருக்கோயிலில்... உறங்கிக் கொண்டிருந்த குங்குலியக்கலய நாயனாரை யாரோ பலமாக தட்டி எழுப்பி சென்றது போல உணர்ந்து, கண் விழித்து பார்த்தார்.

தட்டி எழுப்பியவர் யார் என்று தெரியவில்லை. ஆனால் மனைவியின் நினைவு வந்தது. "சரி அவள் என்ன திட்டினாலும் பரவாயில்லை. என் அன்புக்குரியவள் தானே திட்டுகிறாள். அதனால் என்ன குறைந்துவிடப் போகிறோம். இறைவன் இருக்கிறான். பொறுமையாக இருக்கலாம்." என்ற எண்ணத்தில் வீட்டை நோக்கி நடந்தார்.

தன்னுடைய தெருவில் வீட்டை தேடினார். இது என்ன மாயம்.? நம் தெருதானே இது.? ஆனால் நம் வீட்டை காணவில்லையே. நாம் உறக்கத்தில் நடக்கிறோமா? என்று யோசித்தபடி திரும்பி நடந்தார்.

அப்போது ஒரு மாளிகையில் இருந்து குங்குலியகலய நாயனாரின் குழந்தையும் – மனைவியும் உறவினர்களும் ஓடி வந்தார்கள். "நில்லுங்கள். எங்கே போகிறீர்கள். வீட்டுக்குள் வாருங்கள்." என்று மனைவி அழைத்தாள்.

"நம் வீடு எங்கே.?" என்றார் குழப்பத்துடன் நாயனார். "இதோ இதுதான் அப்பா" என்று தன் குழந்தை காட்டிய வீட்டை பார்த்து பிரமித்தார்.

நேற்றுவரை வறுமை வழிந்த வீட்டில் இன்று குபேரன் குடிபுகுந்தான். எப்படி இது சாத்தியம் – என்ன நடந்தது? என்று யோசித்தார்.

நடந்ததை மனைவியும் உறவினர்களும் விவரித்தார்கள். வசதிகள் வந்தாலும் உறவுகள் கிடைத்தாலும் தன் சிவ தொண்டில் தொடர்ந்து வந்தார் குங்குலியக்கலய நாயனார்.

இது எப்படி சாத்தியம் என்று சிலருக்கு கேள்வி எழலாம். மாயாஜாலவித்தை தெரிந்தவர் மா கொட்டையை வைத்து ஒரு நிமிடத்திலேயெ மாமரத்தை வளர்த்து காட்டுகிறார்

தாஜ்மகாலையே மறைத்து காட்டுகிறேன் என்று ஒரு மேஜிக் நிபுணர் சொல்கிறார். ரெயிலேயே ஒரு நிமிடத்தில் மறைத்துகாட்டி அதிசயிக்க வைக்கிறார்கள்.

இப்படி இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்களே அதிசயங்களை வித்தைகளை செய்து காட்டும்போது இறைவன் ஏன் குங்குலியக்கலய நாயனார் வாழ்க்கையில் இப்படி ஒரு அதிசயத்தை செய்திருக்க மாட்டார் என்று என்னதான் தோன்றுகிறது நமக்கு.

கதையை விட்டு விடுங்கள். உழைப்பு, கல்வி, முயற்சி, பயிற்சி இருந்தால் போதும். வறுமையை விரட்டிவிடலாம். குபேரன் நம் வீட்டிற்கு வந்து விடுவான். வறுமையற்ற வாழ்வை ஆனந்தமாக வாழலாம்.

32.வேதாத்திரி பார்வையில் வறுமை இல்லை.

வேதாத்திரி மகரிஷி தனது நெடிய பயணத்தில் வாழ்க்கை நெறி களை அமைதியாக உணர்த்திச் செல்கிறார்.

விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பொருள் வறுமை இல்லவே இல்லை என்கிறார்.

அறிவு வறுமையால், நிரவி வாழாமல் பொருட்கள் தேக்கமும், அவசியமற்ற பொருட்களின் பெருக்கமும், அவசியமான பொருட்கள் மீது அலட்சியமும் ஏற்பட்டப் பொருள் வறுமை போன்ற ஒரு மாயத் தோற்றம் உருவாகி நிலைத்து வருகிறது.

தெய்வ நிலை அறிவால் ஏன் இந்த நிலைகளைச் சீர்திருத்தி உலக மக்கள் வாழ்வில் வளத்தை ஏற்படுத்தக் கூடாது?

தெய்வத்தை அறிந்து கொண்டால், பல நன்மைகளை உலகுக்குச் சாதித்து விட முடியும். தெய்வ நிலையை உணர்ந்த பிறகுதான் உண்மை விளங்கும்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான தெய்வமானது கேட்டால் எதையும் கொடுப்பதில்லை. செய்யும் செயலுக்கு ஏற்றபடித்தான் விளைவைக் கொடுக்கிறது.

நோக்கம், திறமை, காலம், இடம், தொடர்பு கொள்ளும் பொருள் அல்லது நபர் இவ் வையகத்துக்கும் ஏற்ப, ஒவ்வொரு செயலிலும் தக்கபடிச் சிறிது கூடத் தவறாத நீதியோடு விளைவைத் தெய்வம் கொடுக்கிறது.

ஆகவே இந்தத் தெய்வ நீதியைக் கொண்டு மக்கள் குலத்திற்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

எனவே. பொருள் வறுமை என்பது கிடையவே கிடையாது. அறிவு வறுமைதான் இருக்கிறது. இதை ஒழித்தால் போதும் பொருள்வளம் மிகுந்துவிடும்.

ஏழையாக இருப்பது பாவமன்று. ஏழ்மையைத் துன்பமாக, துயரமாக வளர்த்துக் கொள்வது தீது.

“சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்"

சோம்பலால் வறுமையில் வாடிய ஒருவன் ஒருமகானைச் சந்தித்து, தனது வறுமையைப் போக்கும்படி வேண்டினான்.

அவனது சோம்பலை உணர்ந்த அந்த மகான் அவனுக்கு அதை உணர்த்த ஒரு கதையைக் கூறினார்-

ஒரு மரங்கொத்திப் பறவை, தன் கூரிய அலகால் டொக் டொக்கென்று மரத்தைக் கொத்திக் கொண்டே அந்த மரத்தின் மேல் தாவித் தாவி ஏறியது.

அதைப் பார்த்த ஒரு மனிதன், ““மூடப் பறவையே, எதற்காக மரம் முழுவதையும் கொத்திக் கொண்டிருக்கிறாய்? இது வீண் வேலையல்லவா?" என்று கேட்டான்.

அதற்கு அந்தப் பறவை, ““மனிதனே நான் என் உணவைத் தேடுகிறேன். தேடினால் கிடைக்கும்..." என்றது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, தொடர்ந்து மரத்தைக் கொத்தி, மரத்தில் ஓட்டை போட்டு, அதற்குள் பதுங்கியிருந்த புழுக்களை எடுத்து உண்ண ஆரம்பித்தது.

தனது உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு, அந்த மனிதனைப் பார்த்து, ""மனிதனே, நீயும் தேடு... மரத்திலும், மண்ணிலும், நீரிலும் ஏன் எல்லா இடங்களிலும் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும்" என்றது.

கதையைச் சொல்லி முடித்த மகான், ""நீயும் இந்தப் பரந்த உலகத்தில் தேடு. உனக்கும் ஏதாவது கிடைக்கும். சோம்பேறியாக இருந்தால் வறுமைதான் கிட்டும்" என்றார்.

ஏழ்மையில் காரணத்தை அறிந்து கொண்டு அறிவார்ந்த நிலையில் மாற்ற முயற்சி செய்தால் ஏழ்மை மாறும்!. முயன்றால் ஏழைகளால் எதையும் செய்ய இயலும். ஏழைகளால் செய்ய இயலாது என்ற ஒன்று இல்லை. பாரதியாரும்,

"கஞ்சி குடிப்பதால் கில்லார் – அதன்
காரணங்கள் இவை யெனும் அறிவு மிகல்லார்"

என்று கூறியது போல், இன்றைய ஏழைகள் கஞ்சியில்லாமல் இருப்பதற்குரிய காரணத்தை அறிந்து கொள்ளவில்லை.

அறிந்து கொள்ளாதது மட்டுமன்று, தங்கள் ஏழ்மைக்குக் கடவுளும் விதியும் காரணம் என்று பிழை படக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிம் தவறு.

அண்ணல் இராமபிரான், இலக்குவன் அமைத்த பர்ணசாலையைக் கண்டு வியந்த போது,

"தா இல் எம்பிகை சாலை சமைத்தன
யாவை, யாதும் இலார்க்கு இயையாதவே."

நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு இந்தத் துணிவு வரவேண்டும். வரவழைக்கப்பட வேண்டும். அன்றே நமது நாடு வளரும் .

இந்த நாட்டில் ஒவ்வொரு மனிதனும் தற்சார் ப டைய பொருளாதார வசதி பெறுதல் வேண்டும். சார்ந்து வாழ்தல் தீது.

சுரண்டும் பொருளாதரச் சமுதாயம் அறவே கூடாது. நாடும் நாடாவளத்தனமவாக வளர வேண்டும். அந்நிய மூலதனத்தின் சந்தை நாட்டின் வளர்ச்சிக்கு உதவாது.

சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு இல்லை. அந்நிய மூலதனம் ஊளைச் சதை போலத்தான். ஆதலால், கம்பனின் கருத்துப்படி ஏழ்மை அழிவுக்குரியதல்ல. ஆக்கந்தரும் உந்து சக்தி என்பதை உணர வேண்டும்.

மனித வரலாற்றில் வேறெந்த காலத்தையும் விட மனிதகுலம் இப்போது மிகவும் ஆக்கபூர்வமாக இருப்பதோடு, அது வறுமை மற்றும் தேவைகளைக் களைந்தெறிவதற்கு முற்றிலும் தகைமை பெற்றுள்ளது.

ஆனால் இந்த உற்பத்தி சக்திகள் பெருநிறுவன மற்றும் நிதியியல் செல்வந்த மேற்தட்டுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, சர்வதேச தொழிலாள வர்க்கத்தால் ஒரு ஜனநாயக மற்றும் விஞ்ஞானபூர்வ முறையில் ஒழுங்கமைக்கப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

துணைநின்ற நூல்கள்.

1. அன்பொளி மாத இதழ்கள்.
2. உலக வங்கி புள்ளி விபரங்கள்.
3. நியுயார்க் டைம்ஸ் இதழ்கள்
4. ஐ.நா. சபைகளின் புள்ளிவிபரங்கள்.
5. பல்வேறு நாளிதழ்கள்
6. இண்டர்நெட் தகவல்கள்.
7. வறுமை எளிமையைப் பின்தொடரும்போது' - மஜீத் ரானெமா
8. ஏழைகளின் சக்தி', ழான் ரோபெர் - ரானெமா. 2008
9. "விவேகானந்தருடைய மனம்" - கவுதம் சென்
10. சமுகச் சிக்கல்களுக்கான தீர்வுகள், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு

.